
# மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும்



மாத்தளை பெ. வடிவேலன்



# மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும்



மாத்தளை பெ. வடிவேலன்

கலை ஒளி முத்தையாபிள்ளை நினைவுக்குழு

மலையகத்தில் மாரியம்மன்
வழிபாடும் வரலாறும்

பெ. வடிவேலன் பி.ஏ.
நோர்த் மாத்தளை,
கவுடுப்பலல்லை - மாத்தளை.

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | 1997 டிசம்பர் 15. |
| அச்சுப் பதிப்பு | : | யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டட்,<br>48 பி, புளூமெண்டால் வீதி,<br>கொழும்பு - 13, தொ.பேசி: 330195. |
| உதவி அனுசரணைகள் | : | வி.ரி.வி. நிதியம்<br>267, செட்டியார் தெரு,<br>கொழும்பு-11.<br><br>சூரியன் மார்க் கற்பூரம்<br>தயாரிப்பாளர்கள்,<br>எஸ்.பி. சாகுல் ஹமிட் - பிரதர்ஸ்,<br>244, பாங்ஷல் வீதி, கொழும்பு-11. |
| விலை | : | 60 ரூபா |
| வெளியீடு | : | கலை ஒளி முத்தையாபிள்ளை நினைவுக்குழு<br>39/21, அல்விஸ் பிளேஸ்,<br>கொழும்பு - 13. தொ.பேசி : 435652. |

# நெஞ்சுருக சமர்ப்பணம்

தமிழகக் கரை கடந்து

தரை நடையில் தளமுற்று

கொடும் வனத்தில் அல்லலுற்று

கொள்ளை நோயில் மீண்டு

உயிர் பிழைத்து; தப்பி

ஊர் வந்து சேர்ந்தே

தளரா நெஞ்சுறுதியுடன்

தாயே முத்துமாரியென

அன்னை முத்துமாரியிடம்

அடைக்கலமே புகுந்து – அன்று

நெஞ்சால் செலுத்திய காணிக்கையாய்

நெஞ்சுருக இந்நூலை சமர்ப்பிக்கின்றோம்

# நுழைவாயில்

சக்தி வழிபாடு என்பது தொன்றுதொட்டு நிலவி வரும் வழிபாட்டு முறை. அதன் பல்வேறு வகைகளுள் ஒன்று தான் மாரியம்மன் வழிபாடு. தமிழக கிராமிய தெய்வங்களுள் மாரியம்மா மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவள். "மாரி" சாதாரண மக்களின் தெய்வம். மிகக் கடுமையான ஆசாரங்களையும் அனுஷ்டானங்களையும், மந்திரங்களையும் ஜெபதபங்களையும் கோராத தெய்வம். நமது தாயைப் போல் நம்குற்றங்களையெல்லாம் மன்னித்து குறைகளையெல்லாம் போக்கி, பொறுத்தருளி அளவற்ற அன்பைப் பொழியும் நமது தாய்த் தெய்வம்.

ஒரு காலத்தில் உலகெல்லாம் பரவி இருந்த இயற்கை வழிபாடு, தாய்வழிபாடு முன்னோர் வழிபாடு ஆகிய வழிபாடுகளின் ஒட்டு மொத்த பிரதிபிம்பமாய் விளங்குவதே மாரியம்மன் வழிபாடு. மிகப் பூர்வீகமான வழிபாட்டு முறையானதால் இந்த வழிபாட்டில் ஆரிய கலப்பில்லை. பிராமணீய சம்பிரதாயங்களில்லை. வேத மந்திர அர்ச்சனைகள் இல்லை. ஆகவே மாரியம்மனை திராவிட தெய்வமென்று சொல்லுவாரும் உண்டு.

தமிழக மக்கள் எங்கெங்கு புலம் பெயர்ந்து சென்றார்களோ; அங்கெல்லாம் மாரியம்மனையும் உடன் கூட்டிக் கொண்டே சென்றிருக்கின்றார்கள். பிரித்தானியப் பேரரசின் போது உலகத்தின் பல நாடுகளுக்கும் குடிபெயர்ந்த தமிழகத் தொழிலாளர்கள் அங்கெல்லாம் மாரியம்மனைக் கொண்டு சென்று ஆலயம் அமைத்து வழிபட்டு வருகின்றார்கள். தென் ஆபிரிக்காவில், மலேசியாவில், தாய்லாந்தில், பிஜித் தீவில், மார்ட்டினிக் - கூடலோப் என்ற பிரெஞ்சு மொழி பேசுகின்ற தீவுகளில் கூட மாரியம்மனை துதித்து பெருவிழாவெடுத்து சிறப்பிக்கும் பாங்கினைக் காண்கின்றோம். அத்தோடு பிரஞ்சு மொழியினர் இவ் அன்னையை அம் மொழியிலேயே துதிப்பது; அம்மன் வழிபாடு உலகின் நவீன எல்லைகளையும் கடந்து நிற்கின்ற பேருண்மையை விளக்குகின்றது.

பல்லாயிரம் நன்மைகளை பொழிவாள் எங்கள் மாரி. நம் குறைகளையெல்லாம் பொறுமையாய் பரிவுடன் கேட்டு, மற்றவர்களைப்போல் அவசரப்படாமல் புறக்கணிக்காமல் ஆடாது அசையாது நின்று பாசத்தைப் பொழிந்து குறைகளை நீக்குவாள். நல்வாழ்வினைத்தருவாள். நோய்களைப் போக்குவாள். மழையினைப் பொழிவாள். அருளினைத் தருவாள். "பிணிகளுக்கு மாற்றுண்டு எங்கள் முத்துமாரி பேதமைக்கு மாற்றில்லை எங்கள் முத்துமாரி........ அடைக்கலமே புகுந்து விட்டோம் எங்கள் முத்துமாரி" என்று பாரதி பாடியதற் கொப்ப மாரியம்மனிடம் அடைக்கலம் புகுந்து மலைநாட்டில் அடியெடுத்து வைத்தவர்கள் தான் இன்றைய மலையக மக்களின் மூதாதையர்கள்.

அதுவும் மாத்தளை தான் எங்கள் மலையத்தின் தலைவாயில். தமிழகக்கரையிலிருந்து பயங்கரப்படகுகள் மூலம் கடலைக் கடந்து கொடிய கானகங்களுக்கிடையே கால் நடையாய் உயிர் தப்பி வந்ததற்காக, நன்றி கூறும்

முதல் தெய்வம், எங்கள் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன். எங்களது வரலாறு மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வரலாற்றுடன் இணைந்துள்ளது.

இந்நூலை வெளியிட்டுள்ள கலை ஒளி முத்தையாபிள்ளை ஞாபகார்த்த குழுவினரையும் அவர்களது சமகால பணியையும் எண்ணிப் பார்க்கும் போது; மாத்தளை அருள்மிகு அம்பிகையின் அருளில் திளைத்து அம்பாள் புகழ் கூறும் நல்நூல்களைப்பதிப்பித்தவரும் மாத்தளை இளைஞனாக இருந்து இன்று கொழும்பில் மலையக பிரமுகராக உயர்ந்திருக்கும் அன்புத்தம்பி எச்.எச். விக்கிரமசிங்க நம் இளைய தலைமுறையினருள் சமுதாய பிரக்ஞையும், ஆழ்ந்த சமூக உணர்வுமிக்கவர்களில் குறிப்பிடத்தக்க முன்னோடியாவார்.

அறுபதுகளின் நடுப்பகுதியில் மலையகத்தில் உத்வேகத்துடனும், தீரத்துடனும் தமிழ் இலக்கிய உணர்வினையும், சமுதாயப்பற்றினையும் ஊட்டி வளர்த்த மலையக இளைஞர் முன்னணி உணர்உலைக் கூடத்தில் இலட்சிய வார்ப்பட்டதில் வார்த்தெடுக்கப்பட்ட இளைஞர்களில் இன்றும் இளமை குன்றாது இலட்சியம் மங்காது சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றார்.

அமரர் நவாலியூர் சொக்கநாதனின் மாத்தளை முத்துமாரியம்மன் குறவஞ்சியை பலரும் மறந்து போயிருந்த நிலையில் இவ் அரும் பொக்கிஷம் பேணப்படுவதுடன், இளைய தலைமுறையினர் கற்றறிந்து பயன்பெறும் வகையில் முப்பதாண்டு கால இடைவெளிக்குப் பின்னர் அச்சிட்டு தனது இறை பற்றையும், மலையகப் பற்றையும் நிலை நாட்டியவர். அவருக்கு இருக்கின்ற மலையக உணர்வு எல்லையற்றது. மலையகம் பற்றிய இவரது நேசத்தை எண்ணி நானே வியந்திருக்கின்றேன். பலர் தமது வாழ்க்கைச் சூழலுக்கேற்ப, தமது நடவடிக்கைகளை மாற்றிக் கொள்வார்கள். எத்தனையோ மலை நாட்டவர்கள் தம் மலைநாட்டுத் தொடர்புகளை மறந்து விடுவதோடு மறுதலித்து விடுவதும் உண்டு. ஆனால் விக்கி அப்படியல்ல ! தான் உயர உயர தனது மலைநாட்டுப் பணியை விரிவுபடுத்தியும், மேம்படுத்தியும் செயல் புரிந்திருக்கின்றாரேயொழிய தன்னை மலையகத்திலிருந்து விலக்கிக் கொள்ளவில்லை. இத்தகைய இளைஞர்களின் சமூக உணர்விற்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் வித்திட்டவன் என்ற நிலையில் இவர்களது நிலையின் உயர்வையும் பணிவின் பொலிவையும் கண்டு இறும்பூதெய்கின்றேன். இந்த மனநிலையை அப்பட்டமாக வெளிப்படுத்துவதில் தவறில்லை எனக் கருதுகின்றேன்.

மலையக பத்திரிகை முன்னோடி கலை ஒளி முத்தையா பிள்ளை அவர்களின் நினைவாக மலையகத்தில் ஒரு பாரிய சிறுகதைப் போட்டியினை நடாத்தி மலையக புனைகதைத்துறைக்கு ஒரு புதிய பரிணாமத்தை ஏற்படுத்தியமை ஒரு சாதனையாகும்.“

மலையக பரிசுக்கதைகள்” என்ற சிறுகதை தொகுதி இன்றைய மலையக உணர்வுகளை பிரதிபலிக்கும் தலை சிறந்த வெளியீடாகும்.

இதனைப் போலவே மலையக சிறுகதை முன்னோடி அமரர் என்.எஸ்.எம். ராமையாவின் "ஒரு கூடைக் கொழுந்து" என்ற நூலை மீண்டும் பிரசுரம் செய்தமை விக்கியின் இலக்கிய ஆர்வத்தினை விடவும் சமூகப்பற்று மேலோங்கி நிற்பதை குன்றின் மேல் இட்ட தீபமாக மிளிரச் செய்கின்றது.

மற்றவர் மலையக சமூகத்தின் ஆத்மாவாய், உணர்ச்சி நரம்பாய், இரத்தக்குழாயாய், மூச்சாய், விழிகளாய், சமூகத்தின் காவலரணாய் நிற்கும் மு.நித்தியானந்தன். மலையகம் பற்றிய நித்தியின் பணி தனி ஓர் ஆய்வுக்குட்பட்டதாகும். அமரர் கலை ஒளி முத்தையா பிள்ளையின் புதல்வரான இவர் தனது தந்தை தொடக்கி வைத்த மலையக இலக்கிய பணியில் அயராது உழைத்து வருவது கண்டு மனம் மகிழ்கின்றேன். 125-ஆண்டுகளுக்கு முன் வெளி வந்த ஆபிரகாம் ஜோசப் எழுதிய "கோப்பிக் கிருஷிக் கும்மி" என்ற மலையகத்தின் முதல் நூல் பற்றிய ஆய்வு மலையக இலக்கிய வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை தோற்றுவித்துள்ளது. அவரது அயராத ஆராய்ச்சி தேடலும் பல்வேறு சான்றாதாரங்களின் துணையுடன் அவற்றை அவர் பரிசீலனை செய்யும் கோணமும் மலையகத்தின் தலையான விமர்சகராக, அவரை நிலைப்படுத்தியுள்ளது "கூலித் தமிழ்" பற்றிய கட்டுரை அவரது பலமான சமூகவியல் அறிவின் நுட்பத்தை வெளிப்படுத்தியுள்ளது.

மலையக இலக்கியம் பற்றி ஐரோப்பாவில் புலம் பெயர்ந்த தமிழ் சமூகத்தின் மத்தியில் அவர் ஆற்றிவரும் கருத்துரைகள் ஐரோப்பாவில் மலையக மக்கள் பற்றிய புதிய சிந்தனைகளை தோற்றுவித்துள்ளது. ஒரு பதுளைக் காரனின் இலக்கியப் பதிவான "துன்கிந்த சாரலிலே" என்ற ஆய்வு அவரது அறிவுத்திறனுக்கும் மலையகம் மீதுகொண்டுள்ள தீராதபற்றுக்கும் சான்றாகும். இத்தகையோர் தொடர்ந்தும் மலையக மக்களின் எதிர்கால வரலாற்றைச் சிருஷ்டிக்க வேண்டுமென்பதே எனது அவா. இத்தகைய இலக்கிய மேதைகளை மீண்டும் மலையகம் அரவணைத்துக் கொள்வது எந்நாளோ.

இந்த வற்றாத மலையகத் தொண்டு வரிசையில் மாத்தளை வடிவேலனின் "மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும்" என்ற நூல் வெளிவருகின்றது. வரலாறு மனிதனுக்கு மட்டுமல்ல மாரியம்மனுக்கும் உண்டென்பதை அசாத்திய துணிச்சலுடன் முன்வைக்கிறார் மாத்தளை வடிவேலன். இந் நூல் உருவில் சிறிதாயினும், ஆன்மீகத்தத்துவம், வழிபாட்டு நெறிமுறைகள், ஆலய அமைப்பு முறை புராதன ஐதீக வழிபாட்டு நடைமுறைகள் போன்ற பாரிய கருப் பொருள்களையும் தொட்டு பார்க்கின்றது.

மலையகச் சிறுகதைத்துறையில் தன் ஆளுமை மிக்க முத்திரையினைப் பதித்து, எழுத்தின் வளத்தால் கடல் கடந்த நாடுகளிலும் கௌரவம் பெற்றவர். மலையக நாட்டார் வழக்காற்றியல் பற்றிய தேடலை முன்னெடுத்ததுடன், மக்களின் பாரம்பரிய கலைச் செழுமையினை கலா நயமான கூத்துகள், இலக்கியங்கள் வழக்காறுகள், பண்பாட்டு விழுமியங்கள், பற்றியும் முதல் நூலை வெளியிட்டு பெருமை சேர்த்தவர்.

மலையக சமுதாயத்தை ஏதோ கல்வி அறிவு குன்றிய பிற்படுத்தப்பட்ட சமுதாயம் மட்டுமே என்று குருட்டுத்தனமாகக் கணித்து விடாமல் மலையகம் முழுவதும், ஆரம்ப காலம் தொட்டே கவிஞர்களும், எழுத்தாளர்களும், வைத்தியர்களும், சோதிடர்களும், சிற்ப, ஓவிய வல்லுனர்களும், கைவினைக் கலைஞர்களும் இருந்தனர் என்ற உண்மையை நாம் மறந்து விடாமல் நினைவில் நிறுத்திக் கொள்ள இத்தகைய வெளியீடுகளும் பணிகளும் நமக்கு உதவுகின்றன.

தமிழர் வழிபாட்டு முறைகள் ஆரிய தெய்வீக கோட்பாடுகள், கிராமிய வழிபாட்டுப் பாரம்பரியங்கள் போன்றவற்றை விரிவாக நோக்காது ஒரு கலப்பட கண்ணோட்டத்திலேயே இங்கு எடுத்தியக்கப்பட்டிருக்கின்றது. இது மிகவும் சிக்கலான ஆய்வுத்துறை எனினும் நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று ஒரு அசாத்திய துணிச்சலுடன் தான் இந்த தீமிதிப்பை, முத்துமாரியம்மனை முன்நிறுத்தி நடத்தி இருக்கிறார்.

மலையக மக்களின் வழிபாட்டு பாரம்பரியங்கள் முறையாக ஆய்வு செய்யப்பட வேண்டும். மலையகத் தெய்வங்கள் பற்றியும் மலையக மக்களின் சமய நெறிகள், சமய நம்பிக்கைகள், சடங்குகள் பற்றியும் விரிவான ஆய்வுகளை மேற்கொள்ள பல வாய்ப்புகள் உண்டென்பதை இந்த முன்னோடி நூல் எடுத்துக் காட்டுகின்றது. கவாத்து சாமி கும்பிடுதல், சில மரங்களை தெய்வீக மரங்களாக கருதிக் கும்பிடுதல் தீமிதித்தல், மிருகங்களைப் பலி இடுதல், மதுபானங்களை படைத்தல், சுருட்டுப் படைத்தல் போன்ற பல்வேறு பாரம்பரியங்கள் பற்றி ஆய்வு செய்ய வேண்டும். மலையக நாட்டார் வழக்காற்றியல் ஒரு பெரும் கலைச்சுரங்கமாகும். இதிலிருக்கும் பாடல்கள் அனைத்தும் இலங்கையின் மத்திய பிரதேசத்தில் இருந்திருக்க வேண்டிய வெறும் வனாந்தரத்திற்குப் பதிலாக ஒரு யௌவனமிக்க நந்தவனத்தையும் அந்த நந்த வனத்தைப் உருவாக்கிய பிரமாண்டமான மனித உழைப்பின் மகோன்னதத்தையும் பிரதிபலிக்கும் வரலாற்றுச் சாட்சியங்களாக மிளிர்வன.

மலையக மக்களின், மானுடவியல், சமூகவியல் சார்ந்த இந்த ஆய்வு ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியிருக்கின்றது. தமிழகத்திலிருந்து இங்கு வந்து வேரூன்றிய பின் நமக்கு ஒரு தனித்துவம் ஏற்பட்டு விடுகின்றது. எப்படி இந்தியாவிலிருந்து இங்கு கொண்டு வந்து நடப்பட்ட தேயிலை இன்று “சிலோன் டீ” என்ற ஒரு சிறப்பு மகுடத்தைப் பெற்று விட்டதோ அதுபோல் மலையக சமுதாயம் தமது சிறப்பு முத்திரையினைப் பதிக்க வேண்டும். மலையகம் அனைத்திலும் வழங்கி வரும் நாட்டார் பாடல்கள் மலையக மக்களின் எழுச்சிகள், சந்தோஷங்கள், துயரங்கள், காதல் சோகத்தை மலைநாட்டார் பாடல்கள் மிகவும் அற்புதமாக வெளிக்காட்டுகின்றன. மலையகத்திற்கு கிடைத்த இந்த அரும்பெரும் பண்பாடைத் தொகுக்கும் பணியில் இளைய தலைமுறையினர் ஈடுபடவேண்டும்

கொழும்பு — இர. சிவலிங்கம்

# மலையகத்தின் மாரியம்மன் வழிபாடும் வரலாறும்

## சில குறிப்புகள்

மகாவலித்தாய்க்கு நீர் கொண்டு சேர்க்கும் அம்பன் கங்கையின் ஊற்றைப்போல மலையகத்தில் அருள் வெள்ளம் பொங்கிப் பிரவகிக்கும் புனித ஆலயம் மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம். நிர்க்கதியாக வந்த மலையகத்தின் எங்கள் மூத்த குடியினருக்கு அபயம் கொடுத்து அருள் வழங்கியவள் எங்கள் அன்னை முத்துமாரி. கதியற்று வந்தோர்க்கெல்லாம் மாத்தளை மாதா தன் அருட்கரம் நீட்டி ஆசி வழங்கியிருக்கிறாள்.

நான்கு புறமும் கோட்டை அரண்களென நிற்கும் பெரும் மலைத்தொடர்கள், மலைகளிலிருந்து சுரந்தோடும் சிற்றாறுகள், இயற்கை அன்னையின் கருணை முகம், ஆட்சியுரிமை கோரியவர்களிலிருந்து அரசியல் உரிமைகள் அனைத்துமே நிராகரிக்கப்பட்டவர்கள் வரை அனைவரையும் மாத்தளைப் பிரதேசம் தாங்கியிருக்கிறது. புகலிடம் தேடி வந்தோரின் காப்பரணாகத் திகழ்ந்திருக்கிறது; கிளர்ச்சிக்காரர்களின் பாடிவீடாகவும் மாறியிருக்கிறது.

அனுராதபுர ராஜ்யத்தை விட்டு வலகம்பாகு மன்னன் மாத்தளையிலேயே புகலிடம் தேடியிருக்கிறான். இலங்கையின் ராஜதானிகளுக்கு வாரிசுரிமை கோரியவர்களும் ராஜ்யத்தின் பெரும் அதிகாரிகளும் மாத்தளையிலேயே தங்கள் வாழ்விடங்களை அமைத்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். 12ஆம் நூற்றாண்டில் கஜபாகு மன்னனும் ஸ்ரீவல்லபனும் தங்களின் நீதி விசாரணைகளை மாத்தளை மண்ணிலேயே நடத்தியிருக்கின்றனர்.

ஆனால் மாத்தளை புதிரான பூமி. விசித்திரங்களின் வண்ணக்கலவை. ஆதரவற்றோருக்கு அபயந்தந்த மண்ணில் கொடூரங்களும் நிகழ்ந்திருக்கின்றன. சதித்திட்டம் தீட்டியதாகக் கருதப்பட்ட பிரதானி எகலப்பொலவின் மனைவியும் குழந்தைகளும் கடைசிக் கண்டி மன்னனால் கோரமாகக் கொலை செய்யப்பட்டமை, 1983 ஜூலை-இனக் கலவரத்தின் போது அம்பாள் பவனி வரும் அழகு சிந்திரத்தேரும் ஏனைய ரதங்களும் எரிந்து பத்தாண்டுகள் தேர்த் திருவிழாவை நிறுத்தியமை இப் பிராந்தியத்தின் ரத்தக்கறை படிந்த வரலாறுகள்.

மாத்தளையிலிருந்து வடக்கே விரியும் ராஜபாட்டை சிங்கள அரசியல் சரித்திரத்தின் பெரும் பகுதியைப் பற்றிப் பேசவல்லது.

பிரமிப்பூட்டும் மாத்தளையின் இயற்கை அழகு சீவர ஆடை போர்த்த துறவிகளையும், மயக்கியிருக்கிறது. குகைக் கோயில்களின் ராணியாக மாத்தளை திகழ்ந்திருக்கிறது. இலங்கையின் மத்தியில் நங்கூரவடிவில் திகழும் மத்திய மலைநாட்டின் உள்ளே புகுவதற்கு மாத்தளைதான் எளிதான வாயில்களைத் திறந்து வைத்தது. சரித்திர காலத்திலிருந்தே சிறந்த வர்த்தக மையமாக மாத்தளை நகர் விளங்கியிருக்கிறது. பெருஞ்சாலையாயும், நகராயும் அமைந்ததால் மாத்தளையை "சாலைநகர்" என்றும் சொல்வார்கள்.

பௌத்த கலாச்சாரத்தின் பீடமாகவும் மாத்தளை விளங்கியுள்ளது. வண. ஸ்ரீ. ராகுல போன்ற புலமை மிக்க ஞானிகள் பல்வேறு ஆய்வுகளை நடாத்திய ஞான பூமி. இன்றும் இந்த பாரம்பரியம் 338 பௌத்த விகாரைகளில் பாதுகாத்து பேணப்பட்டு வருகிறது. அதே சமயம் மேதகு ஸ்ரீ. ராகுல காலத்தில்-அலுவிகார விகாரையில் தமிழ் மொழியும் கற்பிக்கப்பட்டு வந்துள்ளது.

318,415 பௌத்தர்களும், 44,135 இந்துக்களும், 49,565 இஸ்லாமியர்களும் 8,419 கிறிஸ்தவர்களும் 2,070 கிறிஸ்து மதத்தின் ஏனைய பிரிவினரும் 108 வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களும் ஒன்றுபட்டு இணைந்து காலங்காலமாக வாழ்ந்த பெரும் பதி இது.

545 கிராம நிலதாரிப் பிரிவுகளையும் 1485 கிராமங்களையும் கொண்ட மாத்தளைப் பிரதேசம் மொத்தம் 422,712 மக்களைக் கொண்டது. 1994ம் ஆண்டுப் புள்ளிவிபரப்படி இலங்கையில் காணப்படும் 2,297,80 லட்சம் இந்துக்களில் 44135 பேரே மாத்தளையைச் சேர்ந்த இந்துக்களாவர். எனினும் மலையகத்தின் முதல் தெய்வமாகவும் இந்துக்களின் சக்திவாய்ந்த ஆலயமாகவும் பண்பாட்டுமையமாகவும் மாத்தளை முத்துமாரியம்மன் கோயிலே சிறந்து விளங்குகிறது. அம்மனின் பெயர் சொல்லித்தான் அம்பன் கங்கையும் வற்றாத ஜீவ நதியாக பாய்கிறது.

*"ஏனென்று கேட்க நாங்கள் யார் ?*
*நாங்கள் உழைக்கவும் சாகவுமே பிறந்தவர்கள்"*
களுத்துறை தோட்டத்தில் ஒரு தொழிலாளியின்
கல்லறையில் பொறிக்கப்பட்டுள்ள வரிகள்.

இவ்வாறான துன்ப துயரங்களை மட்டுமே அன்றும் இன்றும் மலையக மக்கள் அனுபவிக்க நேர்ந்தது தான் நமது துயரம் தோய்ந்த வரலாறாகும். மலை போல வந்த துயரங்களை எல்லாம் மலையகமக்கள் துணிவோடும் நம்பிக்கையோடும் எதிர்கொள்வதற்கு மாத்தளை மாரியம்மன் பேரரணாகத் திகழ்ந்திருக்கிறாள்.

இந்த முத்துமாரியம்மையின் தெய்வீக திருக்கோலத்தில் சிந்தை இழந்து போன கவிஞர் நவாலியூர் சு. சொக்கநாதன் மாத்தளை முத்துமாரியம்மன் குறவஞ்சி தமிழில் பாடி 1964-ம் ஆண்டு மாத்தளை முத்துமாரியம்மனின் திருப்பாதங்களுக்குச் சமர்ப்பித்தார்.

பழந் தமிழ் இலக்கியத்திலும் பத்திச் சுவையிலும் ஆழ்ந்த புலமை கொண்ட கவிஞர் சொக்கநாதனின் குறவஞ்சி என்ற அந்த பக்தி பாமாலையை அமரர் கலை ஒளி முத்தையா பிள்ளையின் நினைவாக பங்குனி 1993-ல் அம்மனின் ஆசியுடன் வெளியிட்டு வைத்தோம்.

அமரர் கலைஒளி முத்தையாபிள்ளையின் நினைவாக மலையகச் சிறுகதைப் போட்டி ஒன்றினை நடத்தி 1994ல் "மலையகப் பரிசுக் கதைகள்" என்ற தலைப்பில் நாங்கள் வெளியிட்ட சிறுகதைத் தொகுப்பு மலையகத்தின் புதிய எழுத்தின் தொகுப்பு என்ற வகையில் இன்றும் பேசப்பட்டு வருகிறது. அமரர் கலைஒளி முத்தையாபிள்ளையின் 7வது ஆண்டின் நினைவாக,"மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும்" என்ற இந்நூல் வெளிவருவது நமக்கு மிகுந்த மனநிறைவைத்தருகிறது.

இந்த நூலை எழுதிய மாத்தளை வடிவேலன் மலையக இலக்கியத்தில் மாத்தளையின் பெயரை அழுத்தமாகப் பதித்த எழுத்தாளர். எந்த நெருக்கடியான சூழலுக்குள்ளும் மலையகத்தின் சிறப்பினை வெளிக்கொண்டு வருவதில் அவர் அயராது உழைத்து வருபவர். சிறுகதை, நாவல் ஆகிய சிருஷ்டி இலக்கியத்துறையில் தன் ஆளுமையை வெளிப்படுத்தியிருக்கும் இவர் மலையகத்தின் பாரம்பரியக் கலைகள் பற்றிய ஆராய்ச்சியிலும் முன்னோடியாகத் திகழ்பவராவார். ஆத்மார்த்த ஈடுபாட்டுடனும் ஆராய்ச்சியின் பலத்துடன் மாத்தளை வடிவேலன் ஆக்கியிருக்கும் இந்நூல் முத்துமாரியம்மனுக்கு மட்டுமல்ல, மலையகத் தாயின் மணி மார்பிலும் சூடப்பட்ட நல்லாரமாகும்.

மலையக மக்கள் எங்கே வாழ்ந்தாலும் அவர்களின் வாழ்வோடும் போராட்டத்தோடும் தன்னை இணைத்துக் கொள்வதில் எப்போதுமே முன்னிலையில் நிற்கும் திரு. இர. சிவலிங்கம் இந்த நூலுக்கு அணிந்துரை தந்திருக்கிறார். புலம்பெயர்ந்த மலையகத் தமிழர்கள் தமிழக நீலகிரியில் அரச நிர்வாகத்தின் கோரக் கரங்களில் சிக்கி அவஸ்தையுற நேர்ந்த போதும், அடக்கி ஒடுக்கப்பட்ட போதும், அவர்களின் உரிமைக்காகப் போராடினார் என்பதற்காக இந்திய சிறைக்குள் தள்ளப்பட்டு கொடும்

வதையை அனுபவித்த போதும் கொண்ட கொள்கையில் இவர் துவண்டு போகவில்லை.

மலையகத்தின் முன்னோடி கல்விமானும் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆளுமையோடு எழுத, பேச வல்லவரும் செழுமையான அரசியல் அனுபவம் நிறைந்தவருமான திரு. சிவலிங்கம் அவர்கள் இன்று மலையகத்தில் முகிழ்த்திருக்கும் எழுச்சிக்கும் அரசியல் விழிப்புணர்விற்கும் ஆணிவேராகத் திகழ்ந்தவர். இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் பரந்த அனுபவத்தின் பின்னணியில் நம்மிடையே பணியாற்ற வருவது நமக்கெல்லாம் புதிய தெம்பை ஊட்டுகிறது.

இந்த நூல் வெளியிட நல்லாசிகள் வழங்கிய ஜெயந்தி நகர் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் அறங்காவலர் தேசபந்து விஸ்வ பிரசாதினி, ஸ்ரீ.வி.டி.வி. தெய்வநாயகம்பிள்ளை அவர்களுக்கும் அழகாக அச்சிட்டு தந்து உதவிய சைவப் பெரியாரும் அச்சுக் கலையில் நிபுணத்துவம் பெற்றவருமான திரு. பொ. விமலேந்திரன் அவர்களுக்கும் புகலிட ஆய்வாளர் திரு. மு. நித்தியானந்தன் அவர்களுக்கும் அம்பிகை அருள் புரிவாராக!

காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் அருள் ஆசியுடன் இலங்கையில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட இந்து சமய கலாச்சார அமைச்சின் பொறுப்பை முதன் முதலில் வகிக்கும் பாக்கியத்தைப் பெற்ற மாண்புமிகு.செ. இராஜதுரை அவர்களால் 1986-ல் உருவாக்கப்பட்ட இந்து சமய கலாச்சார திணைக்களம் பல்வேறு நற்பணிகளை சிறப்புடன் ஆற்றிவருகின்றது.

எமது பணிகளுக்கு பக்கபலமாக இருந்து வரும் இந்து சமய கலாச்சார திணைக்கள அதிகாரிகள் குறிப்பாக உதவிப் பணிப்பாளர் திரு.வி. விக்கிரமராஜா உட்பட அனைவருக்கும் அம்பிகையின் அருள் கிட்டுவதாக.

*அன்பும் அமைதியும் சாந்தியும்*
*கொண்டு மலையகம் செழிப்பதாக....*

எச்.எச். எம். விக்கிரமசிங்க
கலை ஒளி முத்தையாபிள்ளை நினைவுக்குழு

# மாரியம்மன் வழிபாடு உலகெங்கும் பரவட்டும்

மலையகம் தமிழ் வளம் பெற்று வருகின்றது. தமிழர் வாழ்வும் சிறந்து வருகின்றது. மலையகத்தின் இலக்கிய ஆர்வத்தை கலை ஒளி முத்தையாபிள்ளை நினைவுக்குழு வளர்த்து வருகின்றது. தமிழகத்தில் இருந்து வந்த கலைப் பொக்கிஷங்கள் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன.

மலையகத்தில் மாரியம்மன் வழிபாடு தோன்றி வளர்ந்த வரலாறு பற்றி மாத்தளை வடிவேலன் எழுதியுள்ளார். இவர் இந்து சமய கலாச்சாரத் திணைக்களத்தில் சிறப்பாகப் பணிபுரிபவர்,

கலைஒளி முத்தையாபிள்ளை நினவுக் குழுவில் எச்.எச்.விக்கிரமசிங்க ஆணி வேராக நின்று உழைத்து வருகின்றார். மலையக இலக்கியங்கள் மேலும் தோன்ற வேண்டும். அவற்றை அனைவரும் படித்துப் பயன் பெற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் தம்பி விக்கி !

மாத்தளையின் தமிழ் பெருமை மலையகத்திலிருந்து இலங்கை முழுவதும் ஏன் தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் பரவும் வகை செய்யும் கலை ஒளி முத்தையாபிள்ளை நினைவு குழுவினரின் சேவை மேலும் மேலும் பெருக நமது ஜிந்துப்பிட்டி முருகன் கிருபை செய்வாராக.

அன்று தொட்டு பூர்வீகமாக மாரியம்மனை அறியாத தமிழர்களே இல்லை. முக்கியமாக தமிழகம் கூட போற்றும் வகையில் மாரியம்மன் வழிபாட்டு வரலாற்றை எழுதிய மாத்தளை வடிவேலனின் ஆற்றலைப் போற்றுகின்றேன்.

நூல் ஆசிரியர், வெளியிட்டாளர்கள், வாங்கிப் படிப்போர் அனைவருக்கும் அம்பிகை அருள் புரிவாராக.

வி.ரி.வி. குறூப்,
267, செட்டியார் தெரு,
கொழும்பு-11

தேசபந்து விஸ்வப் பிரசாதினி
வி.ரி.வி. தெய்வநாயகம் பிள்ளை
*அகில இலங்கை சமாதான நீதிவான்*

# மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும்

*சக்தி வழிபாட்டின் தொன்மையும் சிறப்பும்*

அண்ட சராசரங்கள் அனைத்தின் தோற்றத்திற்கும் அவற்றின் இயக்கத்திற்கும், பெருக்கத்திற்கும் சக்தியே முழுமுதற் காரணமென்பதை நம் முன்னோர்கள் நன்கறிந்திருந்ததுடன், அச்சக்தியைப்போற்றி வழிபட்டும் வந்துள்ளமை வரலாறாகும். சிவவழிபாட்டினைப் போன்றே சக்தி வழிபாடும் தொன்மையானதாகும். இலங்கை லெமூரியா கண்டத்திற்குட்பட்டு இந்தியாவுடன் இணைந்திருந்த காலத்திலேயே இங்கிருந்த ஆதிக்குடிகள் சைவ சமய தெய்வங்களை வழிபாடு செய்துள்ளமையினை அறியக்கூடியதாக இருக்கின்றது.

தாய்மை பல்வேறு அம்சங்களின் ஊற்றுக்கண்ணும் உறைவிடமுமாகும். இதில் தெய்வீகத்தைக் கண்டவர்கள் நம் முன்னோர்களாவர். இதனால் தான் சிந்து வெளியிலிருந்து இற்றை வரைக்கும் சக்தி வழிபாடு மேலோங்கியே வளர்ந்து வருகின்றது. தாய்வழி – பெண்வழி சமுதாய அமைப்பு ஆதியானது போல தாய்மை வழிபாடும் தொன்மையானதாகவும் உலகளாவிய பாரம்பரியத்தை உடையதாகவும் விளங்குகின்றது.

தாய்த் தெய்வ வழிபாட்டின் தோற்றத்தை இந்திய சிந்துவெளி நாகரீக வழிபாட்டுச் சின்னங்களிலேயே அறியலாம். சிந்து வெளி ஆய்வுகள் பெண் தெய்வ வணக்கத்தினை நன்கு உறுதி செய்கின்றன. இது போல் "சுமேரிய" நாகரீகத்திலும் பெண் தெய்வ வழிபாடு நன்கு நிலை பெற்றிருந்தமையினை அறியக் கூடியதாகவுள்ளது. சுமேரியரது பெண் தெய்வங்களாக "நிந்து" "நின்மா", "ஈணான்", "ஸ்தார்" ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் "ஈணான்" "ஸ்தார்" ஆகியோரின் ஆண் சகாக்களாக "டுமுகி" , "தமுஸ்" ஆகியவை குறிப்பிடப்படுகின்றன.

சுமேரியரால் "யூரினோம்" அல்லது "இயாசி" ஆகிய பெண் தெய்வங்களும் வணங்கப்பட்டதாக தெரிய வருகின்றது. இது போல் யூதர்கள் படைப்புத்தெய்வமாக யாஹோவாவையும், எகிப்தியர் "ஐஸீஸ்" சையும் பபிலோனியர் "நியாமத்தையும்" ரோமர் "வீனஸ்யையும்" வணங்கியுள்ளனர். இவை அனைத்தும் பெண் தெய்வங்களேயாகும். சிந்து வெளியில் அகழ்வின் போது கண்டெடுக்கப்பட்ட பெண் உருவங்கள்; முத்திரைகள் அக்கால தாய்மை இன விருத்தியில் முக்கிய பங்கு கொண்ட அன்னையின் சிறப்பு; விவசாய சமூகத்தில் இவை பெற்றிருந்த முக்கியத்துவம் என்பனவற்றை புலப்படுத்தும் சான்றாக மிளிர்கின்றன. சிந்து வெளி

வழிபாடுகளில் வளம்பல அளிக்கும் தரையினைப் பெண்ணாக உருவகித்து வழிபாடு செய்யும் "தரைப்பெண்" வணக்கமும் நிலைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்து சமயம்; சைவ சமயம் என்றழைக்கப்படும் சனாதன தர்மம் மிகவும் தொன்மையானது. "ஷண் மதம்" என்ற வழிபாட்டு நெறிகளை உள்ளடக்கியது. காணபத்தியம் விநாயகரையும், சௌரவம் சூரியனையும், சைவம் சிவனையும், சாக்தம் சக்தியையும், வைஷ்ணவம் மகா விஷ்ணுவையும், கௌமாரம் முருகனையும் முதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் பிரிவுகளாகும்.

இறைவனைத்தாயாக வழிபடும் மரபு தொன்மையானது. எல்லாம் வல்ல இறைவனுடைய திருவருளைத் தாயாக வழிபாடு செய்யும் நெறி சாக்தமாகும். இந்து மதத்தின் உட்பிரிவுகளில் ஒன்றாகிய "சாக்தம்" சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொண்டது. வேத காலத்திலேயே சக்தி வழிபாடு இருந்தது. என்பதற்கு "ரிக்" வேதத்தில் சில குறிப்புகள் உண்டு. தேவி ஸுக்தத்தில் உஷஸ் – இராத்ரி – அதிதி – வாக்புரந்தி – திஷக – ஈரை வாருணி போன்ற பெண் தெய்வங்களின் குறிப்புகள் காணப்படுகின்றன. இதிலிருந்து ரிக்வேத காலத்திற்கும் முன்பிருந்தே சக்தி வழிபாடு; தாய்த் தெய்வ வழிபாடு நிலவியிருந்ததை உணரலாம். வாக் தேவியை முழுதும் புகழும் சூத்திரம் "ரிக்" வேதத்திலே உண்டு.

கேனோப நிடதம் உமாதேவியின் துணையினால் இந்திரன் பிரமத்தை அறிந்தான் என்று கூறுகின்றது. வாஜசனேய சம்ஹிதையில் உமை உருத்திரனின் சகோதரியாக சொல்லப்பட்டிருக்கிறாள். ஸ்ரீ கண்டரும் பட்ட பாஸ்கரரும் "ஓம்" என்ற சொல்லினின்று தோன்றியதே "உமா" என்ற சொல் என்பார்.

சேர் ஜான் மார்ஷல் சிந்து வெளி அகழ்வாராய்ச்சியின் போது கிடைக்கப்பட்ட பெண் தெய்வ சிலைகளை ஆதாரமாகக் கொண்டு சக்தி வழிபாடு கி.மு. 4000 ற்கும் முற்பட்ட காலம் பழமையுடையது என்று குறிப்பிடுகின்றார். சிந்து வெளி பகுதியில் கிடைத்த தேவியின் சிலைகளைப் போன்றே துருக்கி, சிரியா, பாலஸ்தீனம், சைப்பிரஸ், எகிப்து, கீறீஸ் முதலான இடங்களில் கிடைத்த சிலைகளும் ஒத்திருக்கின்றன. சிந்து வெளி தீரத்திலும் சுமேரியாவிலும் இவ்வழிபாடு ஒன்று போலவே இருந்திருக்கின்றது. இவ்விரு நாடுகளிலும் தேவியின் வாகனம் சிங்கமேயாகும். போருக்குரிய தெய்வமாகிய அவள் கன்னியாகவும்; மனைவியாகவும் மலைகள், காடுகளிலே வசிப்பவளாகவும் கருதப்படுகின்றாள்.

சக்தி வழிபாட்டினைப் பற்றி கி.பி. 4–ஆம் நூற்றாண்டிற்குப் பின் பல தந்திர நூல்கள் எழுந்தன. இவற்றின் எண்ணிக்கை அறுபத்தி நான்கு ஆகும். இந் தந்திர

நூல்கள் தேவ நெறிகளுள் கர்ம காண்டம் விதித்த சடங்குகளின் வளர்ச்சியையே பெரிதும் கூறுகின்றன என்பர். சியாமளா ரகசியம், சார திலகம் காளிகா தந்திரம், சூல சூடாமணி, குலார்ணவம் போன்ற சாக்த தந்திர நூல்கள் சாக்த சமயப்பிரிவாகிய வாமா சாரம் தக்ஷிணா சாரம் பற்றி சிறப்பாகக் கூறுவன.

குப்தர் காலத்திலும் சக்தி வழிபாடு சிறப்புப் பெற்றது விளங்கியதோடு பெண் தெய்வங்களுக்கு சிறப்பான பல கோயில்கள் நிர்மாணிக்கப்பட்டமையினையும் அறியக் கூடியதாக இருக்கின்றது. வங்காளம் அசாம் ஆகிய பிரதேசங்களில் இன்றும் சாக்த சமயத்தினர் உளர்.

தாய்மைக்கு தனியுரிமை கொடுத்துப் பேணும் சமயம் இந்து சமயம். திருஞான சம்பந்தப் பெருமான் "தோடுடைய செவியன்..." என்றும் "அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே..." என்று திருமாழப் பாடியில் எழுந்தருளியிருக்கும் இறைவனையும் வேண்டித் துதிக்கின்றார். இவ்வாறு தாயாக தத்துவமாகவும் இறைவனை நெஞ்சுருக நினைத்து "அம்மையே அப்பா..." என்று துதித்து வழிபடுவது நம்மவர் மரபு. "அன்னை மணிக்கையின் ஆணையைக் காட்டினால் அனலையும் விழுங்கிடுவோம்" என்று பின் வந்த பாரதியும் பாடுகின்றான்.

நாம் எல்லாம் வல்ல பரம் பொருளைச் சிவன் என்றும் அப்பரம் பொருளின் அளவு கடந்த ஆற்றலை சக்தி என்று துதிக்கின்றோம்.

*"தன்னிலமை மண்ணுயிர்கள் சாரத்தரும் சக்தி*
*பின்னமிலா னெங்கள் பிரான்"* – உமாபதி சிவாச் சாரியாரின் இக் கூற்று சக்தியோடும் மண்ணுலக உயிர்களோடும் இறைவன் கலந்தும் பின்னமில்லாது இருக்கும் பேராற்றலைப் புலப்படுத்துகின்றது. வைதீக சமயங்களில் ஒன்றான சாக்த சமயத்தின் நூல்களான தேவி உபநிடதங்களும், தேவி பாகவத புராணமும் மந்திர தந்திர நூல்களும்; சாக்த கிரகந்கள் பலவும்; ஆதியில் இருந்த ஒரே பொருள் அருள் மயமான பராசக்தி தான் அவளிடமிருந்துதான் சராசரங்கள் யாவும் தோன்றின என்று பகர்கின்றன. மனிதன் முதன் முதலாகக் கடவுளைத் தாய் உருவிலேயே வழிபடத் தொடங்கியுள்ளான் என்பதையே சக்தி வழிபாடு எடுத்தியம்புகின்றது எனலாம்.

உலக வாழ்வின் உண்மையை ஒப்புக் கொள்ளும் தெய்வ நெறிக் கொள்கையாகிய சைவ சித்தாந்தம் ; பரம் பொருளை சிவம் என்றும் ; சிவன் என்னும் சொல் பேரின்ப வடிவினன் எனவும்; தூய இயற்கை உணர்வினன் எனவும் எத்தகைய மாறுதலும் இன்றிச் செம்பொருளாய் நிற்பவன் எனவும் கூறி அம் முதல்வன் பெண், ஆண், அலி என்னும் பகுப்பைக் கடந்து நிற்போனாயினும் பெண்ணாகவும் அல்லாதாகவும் இருந்து அருள் புரிவான் என்று கூறும்.

*"அறுவகை சமயத்தார்க்கும்*
*அவரவர் பொருளாய் வேறும்*
*குறியது உடைத்தாய் வேத ஆகமங்களின்*
*குறியிறந் தங்கு*
*அறிவிடை அருளாள் மன்னி*
*அம்மையோடு அப்பனாகி*
*செறிவொளியாது நின்ற சிவனடி*
*சென்னி வைப்போம்* – சித்தியாரின் இப்பாடல் எல்லா வழிபாடுகளும் எம் பிரான் பரமசிவத்தை முழுமுதற்கடவுளாக வழிபடும் தன்மையதே என்பதையே உணர்த்துகின்றது.

மனம் வாக்குக்கு எட்டாத, நிர்க்குணமான, கட்டுக் கடங்காத, கட்டுப்படாத கட்டு இல்லாத பரம்பொருளை பழந்தமிழர் "கந்தழி" என்றார்கள். நிரூபாதிகஸம் வித் ரூபமான ப்ரம்ஹம் – பிரபஞ்சத்தை சிருஸ்டிக்கின்றது என்றால், அது தொழிற்படுத்துவது எது? ஒரு மனிதன் ஒரு காரியத்தைச் செய்ய ஆற்றல் உடையவனாக இருக்க வேண்டுவது போல இந்த சொரூப விச் ராந்தியாய் இருக்கும் ப்ரம்ஹத்தில் அக்கினியில் சூடு போல அபின்னமான ஆற்றல் ஒருங்கிக் கிடக்கின்றது. அந்த ஆற்றல் தான் சக்தி என்பது.

இந்த சக்தியை பெண்பாலாகக் கூறுவது மரபு. ஆற்றல் பெண்ணாகும் போது அதனை உடைய வஸ்துவை ஆண்பாலாகக் கருதும் நிலை ஏற்படுகின்றது. உண்மையில் சிவம், சக்தி என்பது வெவ்வேறு வஸ்துக்கள் அல்ல. ஒரே பூரண வஸ்துவின் இரண்டு பரிணாமங்களேயாகும். சத்தியின்றி சிவமில்லை. சிவமின்றி சக்தியில்லை. ஆற்றலையும் அதனை உடையவளையும் இரண்டாகப்பிரிக்க முடியாது. அருவமாய் இருக்கும் சிவத்திலிருந்து சக்தியின் அதிஸ்டானத்தால் பிரபஞ்சமாய் விரியும் நியதியில் ஒவ்வொரு படியிலும் ஒவ்வொரு நிலையிலும் சக்தி சிவத்தை அதிட்டிப்பதால், பல்வேறு பெயர்களால் அவள் அழைக்கப்படுகின்றாள். எனவே பராசக்தியின் ரூபபேதங்கள் அநேகம்.

*சக்திக்கும் சிவத்திற்குமுள்ள உறவை திருமூலர்,*
*"வாயும் மனமும் கடந்த மனோன்மணி*
*பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை*
*ஆயும் அறிவும் கடந்த அரசனுக்குத்*
*தாயும் மகளும் தாரமும் ஆமே"* என்று கூற, இமவான் மகட்குத் தன்னுடைய கேள்வன் மகன், தகப்பன், தமையன் என மணிவாசகப் பெருமான் நான்காவது சம்பந்தத்தையும் கூறுகிறார். இவ்வாறு பராசக்தியானவள் சிவத்திற்குத் தாயாகவும், மகளாகவும், மனைவியாகவும் சகோதரியாகவும் இருந்து தொழிற்படுத்துகின்றாள்.

அவருடைய சேர்க்கையாலேயே இறைவன் பிரபஞ்சமாய் விரிந்து, இருந்து ஒடுங்குகின்றான். மேலும் சக்தியின் அருளாலேயே உயிர்கள் சிவத்தை அறியவும் அடையவும் முடியும். இதனையே சைவசித்தாந்த சாத்திரங்கள் "சத்திநிபாதம்" என விளக்குகின்றன.

அனைத்துப் பொருள்களையும் தாய்மை நிலையில் எண்ணுவதும் வழிபடுவதும் தமிழர் பண்பாடு. அன்பு காட்டுவதிலும் அருள் புரிவதிலும் தாய்மை நிலையே தலையானது. இறைவன் உயிர்களுக்கு அருள்புரியும் கருணைச் சிறப்பை தாய்மை நிலையாக உருவகிப்பர். இறைவனின் அருட்சக்தியே தாய்த்திருக்கோலம். அன்னையின் திருக் கோலத்தில் நிகழ்த்தப்படும் வழிபாடு இறைவனின் கருணைச் சிறப்பை உயிர்கள் பெறுவதற்காக நிகழ்த்தப்படும் வழிபாடாகும். பிறவகைத் திருக்கோல வழிபாடுகளை விட இறையருட் சத்தியாக விளங்கும் அம்மையின் திருவுருவ வழிபாடு நிகழ்த்துவோருக்கு இறைவன் அருள் முழுமையாக கிட்டும். ஒரே பரம் பொருளை தத்தம் இயல்பிற்கும் பக்குவத்திற்கும் ஏற்ப எந்த உருவத்திலும் வழிபடும் நிலை இந்து சமயத்தில் சிறப்பாகக் காணப்படுகின்றது.

இறைவன் படைத்தல் காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் ஒவ்வொரு மூர்த்தியாக இருந்து செய்கின்றான். இறைவன் ஐந்துவகை மூர்த்தியாக இருந்து ஐந்தொழில்களையும் நிகழ்த்தும் போது இறைவனின் அருள் சக்தியும் திருமகளாக, கலைமகளாக, மலைமகளாக, மகேஸ்வரியாக, மனோன்மணியாக, திருக்கோலம் கொள்கின்றது. தத்துவ வழக்கில் இவ்வாறு ஐவகைத் திருக்கோலங்கள் விளங்கிய போதிலும் உலக வழக்கில் கலைமகள், திருமகள், மலைமகள் என்ற மூன்று தேவியரின் திருக் கோலங்களே பெரிதும் வழிபாடு செய்யப்படும் நிலையையே காண்கின்றோம்.

இறைவன் படைத்தல் தொழிலை பிரமனாகச் செய்கின்றான். பிரமனுக்குத் துணையான சக்தியாக சரஸ்வதி அமைகின்றாள். காத்தல் தொழிலை திருமாலாக இருந்து செய்யும் போது திருமாலுக்குத் துணையாக விளங்கும் சக்தி இலட்சுமி. அழித்தல் தொழிலை உருத்திரனாக நின்று இயற்றும் போது துணையாக இருக்கும் சக்தி உமையாகும். இதுபோல மகேஸ்வரனுக்குத் துணையாக மகேஸ்வரியாகவும் சதாசிவத்திற்கு துணையாக மனோன்மணியும் அமைகின்றனர். உலகில் வாழ்வதற்குத் தேவையான கல்வி, செல்வம், வீரம் மூன்றையும் வேண்டி கலைமகள், திருமகள், மலைமகள் மூவரையும் மக்கள் துதிப்பதில் வியப்பில்லை. மக்கள் இவ்வாறான திருக்கோலங்களை வழிபாடு செய்தாலும் இவை அனைத்தும் இறைவனின் அருட் சக்தியாகிய பராசக்தியேயாகும்.

கலைமகள் கலைகளுக்கு அரசியாவாள். நாமகள், பாமகள், கலையரசி, கலாவல்லி எனவும் போற்றப்படுபவள். இவளின் திருக்கோலம் நான்கு கரங்கள் கொண்ட மனித உருவாக அமைந்துள்ளது. இந்நான்கு கரங்களும் வீணை ஏடு, எழுத்தாணியும்; படிகமாலை என்பனவற்றை ஏந்தியுள்ளன. இவற்றில் ஏடும், எழுத்தாணியும் இலக்கியம் எழுத்து என்பனவற்றையும் வீணை கலைகளையும் ; படிக மாலை தூய்மையும் உணர்த்தும். கலை மகளின் ஆடை வெள்ளாடை. இருப்பிடம் வெண்டாமரை. எனவே கலைமகளின் வடிவம் கலை. அறிவு தூய்மைக்குரியது. படைப்புத் தொழில் அறிவுடன் பொருந்திய இயல்பினது.

நான்கு வேதங்களையும் அவள் நான்கு கரங்களாகவும் அவள் முகத்தை பிரம்ம வித்தையாகவும் எண்ணையும், எழுத்தையும் அவள் இரு கண்களாகவும் இசையையும் இலக்கியத்தையும் இரு மார்பகங்களாகவும், புராண இதிகாசங்களை அவள் இரு கால்களாகவும் ஓங்காரப்பிரணவமே; திருக்கரத்தில் ஏந்திய வீணையென கலைமகளின் உருவச் சிறப்பை உருவகப்படுத்தியும் விவரிப்பர். கலைமகளுக்குரிய வெண்மை வண்ணம் சத்குணத்தை உணர்த்தும்.

திருமகளுக்கு அலை மகள் என்ற பெயரும் உண்டு. இவளது நான்கு திருக்கரங்களும் மலர்களில் சிறந்த; "பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை" என்னும் தாமரை மலரை ஏந்தியுள்ளன. தாமரை மலர் செம்மையைக் குறிக்கும். செம்மையான வாழ்விற்கு செல்வம் அவசியமாகும். திருமகள் செல்வத்திற்குரிய கடவுள். பாற்கடலை கடைந்தபோது அலைகளுக்கிடையே; அமுதகலசத்தோடு திருமகள் தோன்றினாள் என்பது புராணமாகும். திருமகளை ஆதிலெட்சுமி தான்ய லெட்சுமி, வீரலெட்சுமி; கஜலெட்சுமி, சந்தான லெட்சுமி; விஜய லெட்சுமி, வித்யா லெட்சுமி, தன லெட்சுமி என அட்ட லெட்சுமிகளாகவும் வணங்குவர். வைஷ்ணவி, நாராயணி என்பனவும் திருமகளின் திரு நாமங்களாகும். திருமகளுக்குரிய வண்ணம் செம்மை; இது இரஜோ குணத்தை உணர்த்தும்.

வீரத்திற்குரிய தெய்வம் மலைமகள். "இமவான்" என்னும் மலையரசன் மகளாய்ப் பிறந்தமையாள் மலைமகள் என்ற பெயர் வழங்குகின்றது. தக்கன் மகளாகப் பிறந்தமையால் தாட்சாயிணி எனப் பெயர் பெற்றாள். பரம சிவன் உருத்திரன் என்பவற்றிற்குரிய பெண்பாற் பெயர்களாக பார்வதி, உமை என்பன வழக்கிலுள்ளன. மலைமகளுக்குரிய வண்ணம் நீலம் அல்லது கரிய நிறமாகும். கருமை வண்ணம் தமோகுணத்தை வெளிப்படுத்தும். வேதங்களுக்கு தலைவியானமையால் வேதவல்லி என்றும்; சிவனோடு இணைந்த சக்தியாக விளங்கும் போது சிவ சக்தி என்ற பெயர்களையும் பெறுகின்றனள்.

இறைவனின் அருட் சக்தியாகிய பராசக்தியின் பல்வேறு திரு மூர்த்தங்களில் அரக்கர்களோடு போர்புரிந்ததாகக் கூறப்படும் போர்க்கோல வடிவங்களாக; துர்க்கை, காளி, மகிடாசுரமர்த்தனி நிதம்ப சூதனி, சண்டேசுவரி என்பன விளக்கப்பட்டுள்ளன. சினம் மிகுந்த தேவியின் திருக்கோலம் காளி எனப்படும். ஓங்காரம் என பிரணவ சொரூபமாக விளங்குவதால் "ஓங்காரி" என்றும் சினமும் ஆங்காரமும் கூடிய நிலையில் ஆங்காரி எனவும்படுகிறாள்.

எல்லாம் வல்ல பரம்பொருளின் இயங்கும் தன்மையினை சக்தியென்று துதிக்கின்றோம். இச் சக்தியை பெண்ணாக, தாயாக; தாய்மையாக வழிபடுகின்றோம் அவ் அன்னையின் திருக்கோல மகிமைகளுக்கு பல்வேறு நாமங்களை சூட்டி வழிபடுகின்றோம். பஞ்ச கிருத்தியமாகிய ஐந்தொழில்களும் சிவ சக்தியின் மூலமே நிகழ்வன. சிவமும் சக்தியும் ஒன்றுபட்ட நிலையே சங்சா தேகார்த்தரூபியான அர்த்தநாரீஸ்வரர்; அர்த்தநாரீஸ்வரி தோற்றமாகும்.

சிவ சக்தியானது பகற்பொழுதில்; சிவப் பரம்பொருளின் வலப்பாகத்தின் சிவாத்மகமாகி அடியவர்களுக்கு ஞான வைராக்கிய சாதனங்களையும்; அச்சிவ சக்தியானது. இராப்பொழுதில் சிவ பரம் பொருளின் இடப்பாகத்தில் சக்தியாத்மகமாகி அடியவர்களுக்கு புத்தி, முத்தி மாங்கல்யமாகிய மங்கள சாதனங்களை அருளுவதுமாகுமென்று சுலோகங்கள் கூறுகின்றன.

அம்மனும் அப்பனும் மங்கையோர் பாகனுமான இறைவனை சக்தியாகக் கண்டு பல்வேறு நாமங்களில் வழிபடும் நம்மரபில் இன்று மாரியம்மன் என்னும் திருநாமத்தால் செய்யும் வழிபாடு மேலோங்கியும்; சிறந்தும் பரந்தும் காணப்படுகின்றது. மகாகவி பாரதி அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம் என்று பாடியதற் கொப்ப இறைவனின் அருட் சக்தியாகிய பராசக்தியை; மாரியம்மன் தெய்வத் திருக்கோலத்தில் மக்கள் பெரும் வழிபாடு புரிவதைக் காண்கின்றோம்.

சக்தி தத்துவத்தை பின்வருமாறு பெரியோர் விளக்குவர்.

"பிரகதாரணிய உபநிடதம் சக்தி தத்துவத்தைப் பற்றிச் சிறப்பாகக் கூறுகிறது. படைத்தல் தொழில் செய்கின்ற இறைவனுக்கு மூவகைச் சந்ததிகள் உண்டு. அவை தெய்வங்கள், மனிதர்கள், பேய்கள் எனப்படும். அவை இறைவனிடம் சென்று வாழ்வதற்குரிய வழிகளைக் கேட்டுத் தெரிந்து கொள்கின்றன. அவை

இறைவனிடம் சென்றபோது இறைவன் தா,தா,தா என்று மூன்று முறை கூறினார். தா என்றால் தா (Dama) அல்லது தன்னடக்கம் என்பது பொருள். தெய்வங்கள் தேவலோக இன்பத்திலே ஆழ்ந்திருப்பதால் அவர்களுக்குத் தன்னடக்கம் வேண்டும் என்னும் பொருள்படத் 'தா' என்று கூறினார். மனிதர்களுக்கு, தா என்றால் தானம் என்று பொருள். அவர்கள் பெரும் பொருளீட்டுவதில் காலங் கழிக்கிறார்களாதலின் அவர்கள் தானம் செய்யவேண்டும் என்னும் பொருள்படத் 'தா' என்று கூறினார். பேய்கள் கொடுமை செய்து கொண்டிருப்பதால் அவற்றை நோக்கித் தயையுடன் இருங்கள் என்று அறிவுரை புகட்டினார்."

"மேற்கூறிய தெய்வ, மனித, பேய்க் குணங்கள் மனிதர்களிடம் அமைந்திருக்கின்றன. தெய்வ குணமுடையவர்கள் தன்னடக்கமில்லாமல் இன்பம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். மனித குணமுடையவர்கள் ஆசையினால் பொருளீட்டிக் கொண்டிருக்கின்றனர். பேய்க் குணமுடையவர்கள் தங்கள் சக்தியைத் தீய வழிகளில் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். நல்ல வழிகளில் சக்தியைப் பயன்படுத்தினால் பெரிய சாதனைகளைச் செய்யலாம். ஆகையினால் சக்தியிருப்பதனால் தீமை எதுவுமில்லை. மனிதனைச் சக்தி மிகுதியாகவுடைய ஒரு மின்சுழற்சிப் பொறி (Dynamo) என்று கூறலாம். மனிதனிடம் அமைந்திருக்கும் உயிர்ச் சக்தியானது கிளர்ச்சி செய்கிற, திரும்பவும் எழுகிற தன்மை வாய்ந்தது. அதனை அடக்கவும் முடியாது; அழிக்கவும் முடியாது. அந்தச் சக்தியை நல்ல வழிகளில் பயன்படுத்துவதில் தான் சிக்கல்கள் அமைந்திருக்கின்றன."

"இந்தியத் தத்துவத்தில் சக்தி என்பது தெய்வீகமானது, தீமை தருவதன்று எனக் கூறப்படுகிறது. எல்லா உயிரினங்களிலும் சக்தி அமைந்திருக்கிறது என்று சங்கரர் கூறுகிறார். அந்தச் சக்தியின் நோக்கம் சிவசக்தியை அடைவது. மந்திரசக்தி என்பது உச்சரிக்கும் வார்த்தைகளில் அடங்கியிருக்கிறது. ஆன்ம சக்தியினால் மனிதன் விதியையும் வெல்ல முடியும் என்ற கருத்து, இந்திய நாட்டில் நிலவி வருகிறது. இந்தியத் தத்துவத்தில் சக்தி என்பது உடல் சார்ந்த தன்மையினும் மேலானது. அரசர்க்குரிய சக்தியும், கவிஞரின் சக்தியும், திறமைமிக்கவரின் சக்தியும் காரியத்தைத் தோற்றுவிக்கிற காரணத்திலடங்கிய சத்தியும் அதனுள் அடங்கும். பிரமனின் சக்தி சரசுவதி என்றும், திருமாலின் சக்தி இலக்குமி என்றும், சிவனின் சக்தி பார்வதி என்றும் சொல்லப்படும். சக்தி என்னும் கொள்கை இந்தியத் தத்துவத்தில் சிறப்பாக வழங்கப்படுகிறது. இராமானுசர் மாயா சக்தி வியக்கத்தகுந்தது என்று கூறுகிறார். சங்கரர் அதனை அறியாமை என்றும், மயக்கத்தை உண்டுபண்ணுகிறதென்றும், உலகமாகத் தோற்றமளிக்கின்றதென்றும்

குறிப்பிடுகிறார். கிருட்டிணன் கீதையிலே அருச்சுனனிடம் கோழைத்தனத்தை விட்டு எழுந்து போர்புரியத் தூண்டுகிறார். மேலும் அவர், வலிமையுடையவர்களிடம் வலிமையாக இருக்கிறார் என்று கூறுகின்றார். நல்ல செயல்களிலீடுபடும் சக்தியை, தீய செயல்களின் சக்தியிலிருந்து பிரித்துணர வேண்டும். இராவணன் யாருக்கும் தலை வணங்கமாட்டேன் என்று கூறியது, அழிவுக்கு முன்தோன்றும் அகந்தையைக் குறித்து நின்றது. இராமனின் சக்தியானது அறத்தை நிலைநாட்ட, அமைதியைக் காக்கப் பயன்பட்டது.

"சாந்தோக்கிய உபநிடதம் சக்தியில்லாவிடில் உலகைக் காக்க முடியாது என்று கூறுகிறது. மேலும் அது, ஆன்மாவிலிருந்து வரும் சக்தியையும், உண்மையிலிருந்து வரும் சக்தியினையும் குறிக்கிறது. மகா நாராயண உபநிடதம், உயிர்ச் சக்தியிலிருந்து வலிமையும், வலிமையிலிருந்து தவமும் நோன்பும் வருகின்றன என்று கூறுகிறது. உபநிடதத்தில் கூறப்படும் ஒசசு (Osas), தேசசு (Tesas), ஆகியவை உடல், மனம் ஆகியவற்றில் சேர்க்கையால் ஏற்படுகின்ற சக்திகளாகும்."

சிவனுடன் சிறப்பாக சம்பந்தப்பட்ட தெய்வம் சக்தியாகும். இச்சக்தியின் மூர்த்தங்கள் பலவாகும். சக்தி வழிபாட்டின் விளைவைப்பற்றி சக்கரம் அல்லது யந்திரம் என்ற பட உருவத்தில் காண்பிக்கப்படுகின்றது. இவ்வித சக்கரங்களில் ஸ்ரீ சக்கரம் மிகவும் முக்கியமானது.

பாரத நாடு முழுவதுமே அன்னை சக்தியின் பீடங்களாகத் திகழ்கின்றன. "பீட நிர்மயா" என்னும் புனித நூல் சக்தி பீடங்கள் 51 என்று கூறுகின்றது இதில் தமிழ் நாட்டில் காஞ்சி புரம், மதுரை, திருவானைக்கா, திருக்குற்றாலம், திருவாரூர் கன்னியாகுமரி ; அம்பத்தூர் ஆகிய சக்தி தலங்கள் விளங்குகின்றன.

*முத்துமாரியம்மன் அம்பிகை - மாரி*

தமிழ் நாட்டில், சக்தி வழிபாடு சங்க காலத்திலிருந்தே தொடர்ந்து வருவதை நாம் காணலாம். சங்க இலக்கியங்களில் காளி, துர்க்கை பற்றிய செய்திகளைக் காணக்கூடியதாக உள்ளது. துர்க்கை என்ற "கொற்றவை" வடிவம் வெற்றியைத்தரும் தெய்வமாக குறிப்பிடப்படுகிறாள். பன்னிரு திருமுறைகளில் திருமந்திரம் சக்தியைப்பற்றியும்; சாக்த மதத்தின் பல்வேறு அம்சங்களைப் பற்றியும் கூறியுள்ளது. அம்மன் வழிபாட்டை இலக்கியங்களில் மட்டுமன்றி, குகைக் கோயில்களிலும் கட்டுமானக் கோயில்களிலும் காணக்கூடியதாகவுள்ளது.

சோழர் காலத்தில் தஞ்சையிலும்; தாரா சுரத்திலும்; சிதம்பரத்திலும் அம்மன் ஆலயங்களும், சிலை வடிவங்களும் மிகுந்து காணப்படுகின்றன. மதுரையில் மீனாட்சியம்மனும் காஞ்சியில் காமாட்சியம்மனும், குமரி பகவதி அம்மனும்; சக்தி வழிபாடு தமிழகத்தில் காலம் காலமாக வளர்ந்து வந்துள்ளமைக்கு ஆதாரமாக விளங்குபவை. தஞ்சையில் நாயக்கர், மராட்டியர், சோழர் காலத்திலும் பல அம்பிகை ஆலயங்கள் அமைக்கப்பட்டு சக்தி வழிபாடு மேலோங்கி வளர்ச்சி பெற்றிருந்தமை இன்றளவும் காணக்கூடியதாகவுள்ளது.

*எங்கெங்கு காணினும் சக்தியடா – தம்பி*
*ஏழு கடல் அவள் வண்ணமடா – அங்குத்*
*தங்கும் வெளியினிற் கோடி அண்டம் – அந்த*
*தாயின் கைப்பந்தென ஓடுமடா –*

அன்னை சக்தியே மாரி. அங்கிங் கெனாதபடி எங்கும் நிறைந்தவள். அவள் எங்கு தானில்லை! அவளின்றி எதுவுமே இயங்காது. நீரிலும் நெருப்பிலும் விண்ணிலும், மண்ணிலும், காற்றிலும் உயிருள்ளவை, உயிரற்றவை எங்குமே நிறைந்தவள்.

ஆதியும் அந்தமும் இல்லாதவள். பிறப்பு, இறப்பு இல்லாதவள் உலக மக்கள் மீது கொண்ட பெருங் கருணையினால் பிறக்கிறாள். வாழ்கிறாள். நல்லோருக்கு தீங்கு விளைவிக்கும் பொல்லாதவரை அழிக்கிறாள். ஊரும், உறவும் கடந்த அன்னைக்கு புராணங்களும்; இதிகாசங்களும் உருவும், உறவும், ஊரும் பகர்கின்றன. இதுவும் மக்களின் மனங்களிப்புற அன்னை விளையாடும் திருவிளையாடலேயாகும்.

பரம்பொருளான சிவனுக்கு மனைவியான சக்தியை பார்வதி என்றும் அவர்களது திருக்குமாரர்களை விநாயகர், முருகன் என்றும், உமை, மகா விஷ்ணுவின் சகோதரி என்றும், அவர்கள் உறையும் லோகம் சிவலோகம் என்றும் சிவன் சாபத்தினால் அன்னை பார்வதி உலகில் அவதரித்து சிவனை நோக்கி தவம் செய்து மீண்டும் சிவபெருமான் திருவடிகளை அடைந்தார் என்றும் தேவர்கள்,

முனிவர்கள் வேண்டிக் கொண்டதற்கிணங்க அசுரர்களை அழிக்க அம்பிகை பல அவதாரங்களை எடுத்தார் என்றும் புராணங்கள் கூறுகின்றன.

அபிதான சிந்தாமணி முத்துமாரியம்மனைப் பற்றி 1296–ஆம் பக்கத்தில் பின்வருமாறு கூறுகின்றது. "யமனிடம் இருக்கும் தேவதை இவள். ஜமதக்னி ரிஷியின் பத்தினியாகிய இரேனுகை, ஜமதக்னி முனிவர் கார்த்த வீரியன் புத்திரராலிறக்க உடன் தீப்புக்க இவளது தேகத்தை வேகுமுன் இந்திரன் வருணனைக் கொண்டு மழை பொழிவித்துத் தணிவித்தனன். ரேணுகை தரித்திருந்த வஸ்திர முழுதுமெரிந்து தேகத்திக் கொப்புள மரும்பியது. ரேணுகையெழுந்து வஸ்திரமில்லாமையால் அவ்வனத்திலிருந்த, வேம்பின் தலைகளை ஆடையாகத் தரித்துக் கொண்டு, அருகிருந்த புலைச்சேரியடைந்து; தன்பசிக்கு ஏதேனுந் தரக்கேட்டனள்".

"அவர்கள் இவள் யாரோ வேதியப்பெண் என்று எண்ணித் தங்கள் ஆகாரத்தைத் தராது, பச்சரிசிமா, வெல்லம், இளநீர், பானகம் முதலிய தந்து உபசரித்தனர். பின்பு அவ்விடம் நீங்கி வண்ணார வீதி வந்து அவர்கள் கொடுத்த வஸ்த்திரத்தை தரித்துக்கொண்டு, ஜமதக்கினி ரிஷியிடம் வந்து துயரும் போது, தேவர்கள் தரிசனந் தந்து, துயர் மாற்றினர். சிவமூர்த்தி இவளை நோக்கி நீ சத்தியம், சமமாதலால், நீ பூமியிலிருந்து கிராமத்தில் உண்டாகும் தீமைகளை விலக்க, கரம் தந்து நீ கொண்ட தீக்கொப்புளம் உலகத்து உயிர்களுக்கு, அம்மைக் கொப்புளங்களாகும் எனவும் அதனாலுண்டாம் துன்பம் தணிய, நீ தரித்த ஆடையாகிய வேப்பிலையே அதற்குரிய, ஔஷதமாகவும், நீ புசித்த பச்சரிசிமா, வெல்லாம், இளநீர் உனக்குரிய நிவேதனமாகவும் உன்னை ஆராதிப்போர் தீமையை விலக்கவும், ஆராதியாதோரை, உன்னருகிருக்கும், சண்டாளரூபத்தை உன்னருள் ஆக்ரஷித்துக் கொண்டு, வருந்துக என்றும், வரந்தந்து, மறைந்தனர். அதனால் இவள் முத்துமாரி என்று பெயர் பெற்றுக் கிராமதேவியாயினள். இவள் சரித்திரங்களை ரேணுகையைக் காண்க" – என்பதாக.

தட்க்ஷன் என்ற மன்னனின் மகளாகப் பிறந்து தாக்ஷாயணி என்ற நாமத்துடன் வாழ்ந்த அன்னை தன் கணவனாகிய பரமேஸ்வரனைத் தந்தை மதிக்காமல் தன்னை அவமானப்படுத்தியதால்; தீயில் குளித்து மாண்டாள். அவளது உடலைத் தந் தோளின் மீது போட்டுக் கொண்டு பரமசிவன் கோரநர்த்தனம் ஆடினார். அவருடைய ருத்திரத்தினால் அண்டசராசரங்கள் யாவும் வெப்பத்தினால் தகித்தது. இதைத்தடுத்து நிறுத்த மகாவிஷ்ணு தன்னுடைய சக்கரப்படையினால் அம்பிகையின் உடலைச் சேதித்தார். அவ்வுடல் 51 பாகங்களாகப் பிரிந்து பாரத நாட்டின் பல்வேறு இடங்களில் விழுந்து சக்தி பீடங்களாயின, என்பது புராண வரலாறு. அம்பிகையின்

அங்கங்களின் தன்மைக்கேற்ப அந்தந்த இடங்கள் பிரபலமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அம்பிகையின் பாதம் – கன்னியாகுமரி, கண் மதுரை, இதயம் காஞ்சி; அபயஹஸ்தம் பொம்பாய் ஆகிய இடங்களில் இருப்பதாகவும் கூறுகின்றனர்.

மாரி – என்றால் – மழை. மழையைப் போன்று வெப்பத்தைத் தணிப்பவள். வெப்ப நோய்களாகிய அம்மை முதலியவற்றை தீர்த்து வைப்பவள். நல்மழை பொழிந்து, பயிர் பச்சைகள் செழிக்கச் செய்து; மக்களையும், கால் நடைகளையும் காப்பவள். அம்பிகையை மாரி மகமாயி என்றும் அழைப்பர். மாரி மகமாயி மழைக்குரிய தெய்வமாகக் கொள்ளப்படுகிறாள். கைமாறு எதிர்பாராமல் மழையாகப் பொழிவது; மேகத்தின் தன்மையாகும். மாரியின்றி பயிர் இல்லை. பயிர் இன்றி உயிர் இல்லை. மழை மேகமாக உயிர்களுக்கு அருளைப் பொழிவாளென்றே பக்தர்கள் அம்பிகையை துதிக்கின்றனர்.

சாக்தம் சக்தியைப் போற்றும் நெறி. சக்தியே படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலுக்கும் மூலப்பொருள் என்று கூறுவர். அம்பிகையின் திருவிளையாடல்களைப் பற்றி அபிராமியந்தாதி விளக்கமாகக் கூறுகின்றது. முத்துமாரியம்மனை கிராம புறத்தெய்வமாகவும், அதே வேளையில் உயர் சமய மரபில்; ஆகமவிதிப்படி அமைந்த ஆலயங்களிலும் வழிபடுவதை இன்று காணலாம்.

தமிழகம், இலங்கை, மலேசியா ஆகிய கடல் கடந்த நாடுகளிலெல்லாம் இன்று சக்தி வழிபாட்டுக்குரிய பெரும்பான்மை திருக்கோலமாக விளங்குவது மாரியம்மன் திருக்கோலமேயாகும். மாரியம்மன், காளியம்மன் துர்க்கையம்மன் ஆகிய தெய்வங்கள் ஆதியில் கிராமபுறங்களில் வழிபாடு செய்யப்பட்ட கிராமத் தெங்வங்களாவே விளங்கின. கிராமப்புறங்களில் இத்தெய்வத்தை அங்காளம்மன், அங்காள பரமேஸ்வரியம்மன், முப்பத்தம்மன், பச்சையம்மன், பார்வதியம்மன் வெம்புலியம்மன், சோழாபுரியம்மன், எல்லையம்மன், மாதங்கியம்மன், முத்துகாளியம்மன், சோடியம்மன், காத்தாயியம்மன், குந்தாளம்மன், காளியம்மன், பங்காருகாமாட்சியம்மன், பச்சைகாளி, பவளக்காளி, சியாமளாதேவியம்மன், செங்கமலநாச்சியம்மன், செல்லியம்மன், திரௌபதியம்மன், மல்லாயியம்மன், கனகதுர்க்கையம்மன், மனோன்மணியம்மன், பொற்கொடியம்மன், படையார்த்தம்மன், கங்கையம்மன், காட்டேரியம்மன், அரியாத்தம்மன், காளிகாம்பாள், பேச்சியம்பாள், ஸ்ரீபுவனேஸ்வரியம்மன், அன்னபூரிணியம்மன், அம்பாபவானியம்மன், ஸ்ரீ துர்க்காதேவியம்மன், சிவகாமியம்மன், கருமாரியம்மன், கண்ணகியம்மன், பூமாரியம்மன் கடல் நாச்சியம்மன், துர்க்கையம்மன், வீரமாகாளியம்மன், பத்தினியம்மன், வட்டபாறையம்மன், கோணாரியம்மன், தொட்டிச்சியம்மன், பச்சைதண்ணியம்மன், சீதையம்மன் மூகாம்பிகை, பண்ணாரியம்மன், கோணியம்மன்

எனப் பல்வேறு பெயர்களால் எல்லைத் தெய்வமாக, காவல் தெய்வமாக வழிபட்டு வருகின்றனர்.

இன்று மாரியம்மனை கருமாரி, முத்துமாரி, இசைக்கிமாரி, சின்னமாரி, சந்தனமாரி, பெரியமாரி, தண்டுமாரி எனவும் வழிபடுவதைக் காண்கின்றோம். மராட்டியர்களின் குலதெய்வமான அம்பாபவானி வழிபாடு மராட்டியார் காலத்தில் தஞ்சை பகுதியினை அடைந்ததாக தெரியவருகிறது. எல்லையம்மனை மராட்டியர்கள் "எல்லம்மா" என்று அழைக்கின்றனர். தமிழ்நாட்டிலும், ஆந்திராவிலும், கருநாடகத்திலும் எல்லம்மா கோயில்கள் உள்ளன. தஞ்சையில் சியாமளா தேவியம்மன் வழிபாடு பதினாறு கோயில்களில் செய்யப்படுகிறது. காஞ்சிகாமாட்சியம்மன் கோயிலில் சியாமளா தேவிக்கு தனிச்சன்னதி உண்டு. கலைஞர்கள் மிகுதியாக உள்ள தஞ்சையில் இவ்வழிபாடும் மிகுதியாக காணப்படுகிறது. காளியம்மன் வழிபாடு சோழர்காலத்திலே புகுத்தப்பட்டது. தஞ்சையில் விஜயாலயன் "நிசும்பசூதனி" என்று அழைக்கப்படும் உக்கிரகாளியம்மனுக்கு கோயில் எடுத்துள்ளார்.

தஞ்சையில் காத்தாயியம்மன் கரகத்தில் ஆவாதனம் செய்யப்பட்டுள்ளாள்; தேவர்கள் வேண்ட பண்டுகாசுரனை அழிக்க பங்காடுகாமாட்சியம்மன் அவதரித்தாள் என்றும் கூறப்படுகிறது. மராட்டியர் காலத்தில் தஞ்சை ராஜகோபால்சாமி வீதி காளி கோயிலில் பெண்களைப் பலியிடும் வழக்கம் இருந்ததாகக் கூறப்படுகின்றது. கோடியம்மன் கோடி உருவம் எடுத்து சோழமன்னனுடைய வேண்டுகோளுக்காக கொள்ளிக் கட்டையும் கையுமாக சந்துருகோமனை அழித்ததாகவும் இதனால் இப்பெயர் பெற்றதாகவும் கூறப்படுகின்றது. அம்மாள் ஆலயங்களில் முத்துமுனி, வால்முனி, கொடுமுனி காட்டேரி, லாடமுனி, கருப்பன்னசாமி, மதுரை வீரன் ஆகியோருக்கும் இடமளிக்கப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

துர்க்கை, காளி முதலிய சக்தியின் போர்க்கோல வடிவங்களைப் போல மாரியம்மனின் திருக்கோலத்தையும் போர்க்கோல வடிவமாக மாராசுரனை அழித்த புராணக்கதை கூறுகின்றது. அம்மை தீயோரை அழித்து நல்லோரைக் காத்தமை இதன் வாயிலாக விளக்கப்பட்டுள்ளது. அசுரர் தீமைகளின் உருவமாகும். அசுரர்களை அழிக்கப் போர் செய்தமை உலக நன்மைக்கேயாகும். போர்க்களத்தில் அம்மையின் திருக்கோலம் துர்க்கையாகக் காட்சி தருகின்றது. சினம் மிகுந்த தேவியின் திருக்கோலம் காளி எனப்படும். ஆன்மாக்கள் அனைத்திற்கும் செல்வங்களை அருளும் திருக்கோலம் பவானி எனப்படும். அம்பாள் தாருகன் மகிஷாசுரன் முதலான அசுரர்களை அழித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. மகிஷாசுர மர்த்தனியாக விளங்கும் அன்னை பசிப்பிணி போக்கும் அன்னபூரணியாகவும் திகழ்கின்றாள்.

துர்க்கை, மகிடாசுரமர்த்தினி, நிதம்பசூதனி, சண்டிகேசுவரி ஆகியனவும் பராசக்தி பல்வேறு திருமூர்த்தங்களில் அரக்கர்களோடு போர் புரிந்ததாகக் கூறப்படும் போர்க்கோல வடிவங்களாகும். துன்பத்தை துடைப்பவள் துர்க்கை.

இன்று மாரியம்மனின் போர்க கோலத் திருவுருவை எழுந்தருளச் செய்து வழிபடுவதில்லை. மாரியம்மனின் திருவுருவம் கருணை பொங்கும் அன்னையாகப் படைக்கப்பட்டு வழிபாடு செய்வதையே காண்கின்றோம். மதுரையில் மீன் போன்ற கண்களைப் பெற்று மீனாட்சியாகவும் , காஞ்சியில் சிவனிடம் காதல் கொண்ட கண்களைப் பெற்று காமட்சியாகவும், காசியில் விசாலமான கண்களைப் பெற்று விசாலாட்சியாகவும் திகழ்கின்றாள். இவ்வாறே திருக்கடையூரில் அழகுடைய பேருருவத் திருக்கோலத்தில் அபிராமியாகவும் தில்லையில் சிவனிடத்தில் காதல் கொண்ட பெண்ணரசி சிவகாமியாகவும் அன்னை அருளாட்சி செய்கின்றாள்.

மாரியம்மனின் திருவுருவத்தில் நான்கு கரங்கள் உள்ளன. இந்நான்கு கரங்களின் கபாலம், கத்தி, பாசம், உடுக்கு ஆகிய நான்கு பொருட்களை ஏந்தியுள்ளாள். இதில் உடுக்கு என்பது படைத்தல் தொழிலையும், கபாலம் அழித்தல் தொழிலையும் உணர்த்துகின்றன. கையில் ஏந்திய பாசம் உயிர்கள் தீயநெறிகண் செல்லாதவாறு தடுக்கவும் அத்தீமைகளை அழித்து ஒழிக்கவும் பயன்படுகின்றன.

இவ்வகையில் தீயோரை அழித்துத் தீய நெறிகளை வெறுத்து விலக்கிச் செயல்புரியும் இவ்விரு கருவிகளும் உயிர்களைக் காக்கும் தொழிலுக்கு உரியனவாகக் கொள்ளபடும். அம்மனின் திருக்கரங்களில் ஏந்திய கருவிகள் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் குறிப்பால் உணர்த்துகின்றன. மாரியம்மனுக்கு மூன்று திருக்கண்கள் அமைந்துள்ளதும், தலையைச் சுற்றிலும் தீப்பிழம்புகள் எரிவதாக அமைந்துள்ளது. பரம்பொருளாகிய இறைவனோடு அவன் அருட்சக்தியாகிய அம்மைக்குள்ள தொடர்பு நிலையைச் சுட்டி அம்மையின் பரம்பொருள் தன்மையை உணர்த்துகின்றன.

குலப் பெண்கள் தம் கற்பின் பெருமையால் தெய்வீக நிலைக்கு உயர்த்தப்படுகின்றார்கள். பின்னர் தெய்வமாகவும் அவதாரமாகவும் போற்றப்படுகின்றார்கள். கண்ணகி கதை இதற்கு நல்லதோர் உதாரணமாகும். நிலப்பிரபுத்துவம் முதலான அதிகார வர்க்கத்தின் கொடுமை, அடக்கு முறை – பகைகள், சாதி மீறிய காதல் என்பனவற்றினால் – ''கொடுமையில் உதித்த தெய்வங்களாக ''நாட்டார்'' வழக்காற்றில் இடம் பெறும் அம்மன்களாக'' பொன்னுமாரியம்மன் பேர்த்தி அம்மன், புதுப்பட்டி அம்மன் முதலானவைகளை இனம் காணமுடியும். இவர்கள் தம் இன பந்துக்களாலும் சில வேளை அச் சிற்றூர்களை சேர்ந்தவர்களாலும் வழிபாடு செய்யப்படுகின்றனர்.

*மலையகத்தில் மாரியம்மன்*

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொட்டே இலங்கை சிவ பூமியாக விளங்கியமைக்கு சான்றுகள் பல உள்ளன. இலங்கை மன்னன் இராவணன் ஒரு சிவ பக்தன். இப்புண்ணிய பூமியில் தொன்று தொட்டு இந்து சமயம் மாண்புடன் விளங்கி வந்தமையால்; இச்சமய வழிபாட்டு முறைகளும் சிறப்பு பெற்று வந்துள்ளன. ஸ்ரீ ஆஞ்சநேயர் வழிபட்ட காலி நகரிலுள்ள சிவன் கோயில், தேவன் துறையென்றும் இன்றைய "தெவுந்தரயில்" அமைந்துள்ள விஷ்ணு ஆலயம், கதிர்காமம் என்பன வெல்லாம் இப்பாரம் பரியத்தினையும்; தொன்மையினையும் உலகிற்கு எடுத்தியம்பும் வண்ணம் விளங்குவனவாகும்.

ஈஸ்வர ஆலயங்கள் ஐந்தில் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம் ஆகிய நான்கும் நம் நாட்டில் அமைந்து, இலங்கை ஈஸ்வரமயமானது என்பதற்கு சான்று பகருகின்றன. இத்துணை சிறப்புகள் வாய்ந்த ஈழநாட்டில் சக்திவழிபாடும், அதனோடு தொடர்புடைய ஆலயங்களும், வழிபாட்டு நெறி முறைகளும், கலாசார பண்பாடும் சங்கங்களும் பண்டு தொட்டு இன்றுவரை காணக்கூடியதாகவுள்ளது. இலங்கைத் திருநாட்டில் வடகிழக்குப் பகுதிகள் தாயகமாக கொண்டு வாழும் தமிழர் பிரதேசங்களுக்கு வெளியே மத்திய மலைநாட்டிலும், பிறதாழ் நிலப்பகுதிகளிலும் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல், வரலாற்று காலத் தொன்மை வாய்ந்த கோயில்களை உட்படுத்திய பகுதிகளிலும் இற்றைவரை இந்துசமய வழிபாடு சிறப்புற்று வழங்கி வருகின்றது. நவீனகாலத்தில் மலைநாட்டில் இந்திய வம்சாவளி தமிழ்மக்கள் குடியேறி பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையினை ஆரம்பிப்பதற்கு முன்னரே இப்பகுதிகளில் பல நிரந்தர குடியிருப்புக்கள் இருந்ததோடு; இந்து சமய கோயில்களும், கலை கலாசார பாரம்பரியங்களும் உச்சநிலையில் விளங்கியுள்ளன. இவைகளுக்கு அரசராயிருந்தோரும், அரசமட்டத்திலும், பேராதரவு நல்கியுள்ளனர். பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையினை ஆரம்பித்த தமிழ் மக்கள், இப்பகுதிகளில் பல புதிய இந்துசமய வழிபாட்டுத் தலங்களை உருவாக்குவதற்கு முன்னரே பல இந்து சமய கோயில்கள் சிறப்புடன் விளங்கின. இவைகளில் சிவன், பிள்ளையார், முருகன், காளி, அம்பாள், பத்தினி, வைரவர் ஆகிய தெய்வங்களின் கோயில்கள் முக்கியமானதாகும்.

சோழர்காலத்தில் "ஜனநாதமங்களம்" என்ற இன்றைய பொலன்னறுவையில் சிவன்கோயில் கட்டப்பட்டது. இங்கு எழுந்தருளிய அம்மன் வானவன்மாதேவியாவாள். இங்கு காளி கோயிலும் அமைக்கப்பட்டது. ஸ்ரீ பதி கிராமமே இன்றைய பதவிய பகுதியாகும். நாளந்தகெடிகேயும் சைவச்சிறப்புக்கு சான்றாகும். இவற்றைத் தவிர கண்டி, குருநாகல், மிகுந்தலை, அங்வெல்ல, அநுராதபுரம், கெகிராவ, புத்தளம், சிலாபம், மாத்தளை பகுதிகளில் பெருந்தோட்ட குடியிருப்புகளுக்கு முன்னரே அம்மன் பிள்ளையார், முருகன், ஐயனார் ஆலயங்கள் சிறப்புற்று விளங்கியுள்ளன.

ஆங்கிலேயர் காலத்தில் இலங்கையின் மத்திய மலைநாட்டில் கோப்பி, தேயிலை, றப்பர் ஆகிய பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இங்கு வந்து குடியேறிய தென்னிந்திய தமிழ் மக்களின் வருகை இந்நாட்டரசியலில்; சமூகபொருளாதார, கலாசார பண்பாட்டு வரலாற்றில் புதியதொரு சகாப்தத்தை தோற்றுவித்தது.

ஆங்கிலேயருக்கு பெருந்தோட்டங்களை உருவாக்க; காடுகளை அழித்து பாதைகளை அமைக்க; தோட்டங்களை நன்கு பராமரித்து விருத்தி செய்ய பெருந்தொகையான "வேலைப்பட்டாளம்" தேவையாக இருந்தது. இந்த கேள்வியினை நிறைவேற்றக்கூடியவர்களாகவும் சகல வகையிலும் பொருத்தமானவர்களாகவும் அன்று தென்னிந்திய தமிழ்த் தொழிலாளர்கள் விளங்கினர்.

தமிழ்நாட்டின் இராமநாதபுரம், புதுக்கோட்டை, திருநெல்வேலி காரைக்கால், மதுரை, திருச்சி, தஞ்சை, சேலம், கோயம்புத்தூர், ஆற்காடு சென்னை, காஞ்சி முதலான பகுதிகளிலிருந்தும் சித்தூர், விசாகப்பட்டினம் போன்ற தெலுங்கு பகுதிகளிலிருந்தும் திருவனந்தபுரம் கொச்சி போன்ற கேரளப்பகுதிகளிலிருந்தும் தோட்டங்களில் கூலி அடிமைகளாக தொழில்புரிய; ஆசைவார்த்தைகள் காட்டி அழைத்துவரப்பட்டமக்களில் அநேகர்; பிரயாணத்தின் கஷ்டமான தன்மை, நோய்கள், பழக்கமற்ற சீதோஷ்ண நிலை என்பனவற்றினால் தோட்டம் வந்து சேருவதற்கு முன்னரே மாண்டு மடிந்தனர்.

எனினும் இவர்கள் சொந்த நாட்டில் நிலவிய வறுமை பஞ்சக் கொடுமை, அடக்கு முறை, சமுதாயக் கொடுமை என்பனவற்றினாலும் நாட்டைவிட்டு வெளியேறுதல் இலகுவான நடைமுறையாக அமைந்தமையாலும் தொடர்ந்தும் இலங்கையை நோக்கி வந்து குழுமிக் கொண்டே இருந்தனர். **1793 – ஆம்** ஆம் ஆண்டு வீசிய புயலைப்பற்றியும் அதற்கு பின்னர் ஏற்பட்ட பஞ்சத்தைப் பற்றியும் பாடப்பட்ட "புயல் காத்துப் பாட்டும் பஞ்ச கும்மியும்" என்ற நூலில் பரிதாபி வருஷப் பஞ்சக்கும்மி என்ற பாடலில் எழுபத்தியொன்றாம் பாடல் இவ்வாறு அமைந்துள்ளது.

*"கெண்டிச் சீமைக்குப் போய் மண்டலத்தில் சனம்*
*அண்டிப் பிழைக்காது அவதிப்பட்டு*
*கெடும்பாடு பட்டலைந்து*
*கொடுங்காலக் கொடுமையெல்லாம்*
*நெடுங்காலம் வந்ததென்று வினவினாரே"*

ஆள் திரட்டும் கங்காணிமார்களினாலும், பெரிய கங்காணிகளினாலும் கபடமாக ஆசை வார்த்தைகள் காட்டி அழைத்து வரப்பட்ட தமிழ் மக்கள் வெகுதூரம்

நடந்து வந்தும் "இடையிடையே கஞ்சித் தொட்டிகளில் பசிக்கு கஞ்சியினை அருந்தியும்" பின்னர் பாய்மரக்கப்பல்களில் ஏற்றப்பட்டு மன்னார், அரிப்பு சிலாபத்துறை, ஆனைவாசல் ஆகிய துறைகளில் இறக்கப்பட்டு கொடிய வனாந்திரங்களை கடந்து, விஷஜந்துக்களின் தொல்லைக்குட்பட்டு மலையகத்தை அடைந்தனர்.

இடையில் பலர் வெப்பு நோய்களுக்கு ஆளாகினர். அம்மை நோய் கண்டு பெரும்பாலானோர் மாண்டு மடிந்தனர். காட்டுச்சுரம் பிடித்து அல்லலுற்றனர். இந்நிலையில் திரும்பி ஊர்ப் போய் சேரமுடியாத வகையில் திக்கற்றவர்களுக்கு தெய்வமேதுணை என்ற நம்பிக்கையில்; அம்பிகையை வேண்டி துதித்தனர். தம் சொந்த கிராமங்களில் குல தெய்வமாக வைத்து துதித்த அம்பிகையை தம்மை காக்கும்படி வேண்டிக் கொண்டதுடன்; உயிர் தப்பி தோட்டம் போய் சேர்ந்தால் அம்மனுக்கு கோயில் கட்டி வழிபாடு செய்வதாகவும் நேர்த்தி செய்து; "தம் உயிரை காக்கும்படி" வேண்டிக் கொண்டனர். பின்னர் இதன்படியே தோட்டங்களில் "அம்மனை நிலை நிறுத்தி" கோயில் அமைத்தனர். சிலர் தம் குல தெய்வமான அம்மன்; மாடன், முனி முதலியோர் தம்முடன் கூட வந்ததாகவும் நினைத்துக் கொண்டனர்.

இதனோடு மட்டுமன்றி, ஆரம்பத்தில் விதைப்பு, அறுவடை, ஓய்ந்த காலங்களில் வந்து திரும்பி போனோர், பின்னர் நிரந்தரமாக வாழும் நிலமைகள் ஏற்பட்ட போது தம் வழிபாட்டிற்குரிய கோயில்களை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இராமநாதபுரம், தஞ்சாவூர், சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, புதுக்கோட்டை, ஆற்காடு திருச்சிராப்பள்ளி, சென்னை ஆகியதமிழக மாவட்டங்களிலும் சித்தூர் முதலான தெலுங்கு மாவட்டம் உட்பட திருவிதாங்கூர், கொச்சி, மலபார் ஆகிய கேரளப் பகுதிகளில் இருந்தும் இடம்பெயர்ந்தோர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் கிராமிய ஏழை விவசாயிகளாவர். கடின உழைப்பாளிகளாக விளங்கிய இவர்கள், கலை உணர்வு மிக்க மாந்தர்களாகவும் நீண்ட பாரம்பரியத்தினை உடைய இந்தியக் கிராமங்களின் நிலைக்களனாகவும் விளங்கினர்.

நாட்டுப்புற இசைக்கலையின் நாயகர்களான இவர்கள்; கிராமிய ஆட்டங்கள், கூத்துக்கள் என்பனவற்றை நடத்திக் காட்டுவதிலும் கைதேர்ந்தவர்களாக விளங்கினர். அருச்சுனன் தபசு முதலான அருங்கலைக் கூத்துக்களை நெறிமுறையோடு ஆடும் இயல்பினைப் பெற்றிருந்தனர். பொன்னர் சங்கர் கூத்து, காமன் கூத்து போன்ற புராணப் பொக்கிஷங்களை கலா நயத்தோடும் பக்திச் சிரத்தையோடும் சடங்குமுறைகள், சம்பிரதாயங்கள் பிசகா வண்ணம் நடத்திக் காட்டும் ஆற்றலையும்; ஆளுமையையும் கொண்டிருந்தார்கள். நாட்டுப்புற

இசைக்கலையின் ஊற்றுக்களாகவும் உழைப்போடு சங்கமித்த தப்பு முதலான வாத்தியக் கருவிகளை நன்கு பயன்படுத்தக் கூடியவர்களாகவும் விளங்கினர்.

இவர்கள் காடுகளை அழித்துத் தோட்டங்களை உருவாக்கி; பின்னர் அத்தோட்டங்களையே உலகமாகக் கொண்டு வாழும் நிலை ஏற்பட்டது. முன்னர் மூடிய அமைப்பினைக் கொண்ட ஒரு தோட்டமே அவர்களது உலகம். வெளி உலகத்துடனோ அயலிலுள்ள கிராமத்தவருடனோ தொடர்புகள் கொள்ளும் வாய்ப்பு அரிதாகவே வழங்கப்பட்டது. இந்நிலையில் அவர்களுடைய 'நன்மை தீமைகள்' அனைத்தும் தோட்டம் என்ற வரம்புக்குள்ளேயே சங்கமமாயின. அந்நிலையில் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற பண்பினைக் கொண்ட இம்மக்கள் தம் மரபிற்கு ஏற்ப தோட்டங்களுக்குள்ளேயே ஆலயங்களை அமைத்தனர்.

இவ்வாலயங்களில் பெரும்பாலானவை ஐதீகமானவைகளாகும். ஆலயங்கள் என்பதை விட இவர்கள் தெய்வத்தை நிலை நிறுத்திய இடமெனலாம். இது ஒரு மரத்தடியாகவோ, அல்லது ஒரு கல்லுத் திண்டில் முக்கோண வடிவில் அமைந்ததுமான; ஒரு கல்லை நாட்டி வைத்ததாகவோ அல்லது ஒரு வேலையோ, பலி கொடுக்கும் புறம்பான இடமாகவோ, நீர் நிலையாகவோ கூட இருக்கலாம். சிலவேளைகளில் இது ஒரு பாரிய மரவடியாகவோ அமைந்தது. நீண்ட காலத்திற்குப் பின்னர் இந்த ஸ்தானங்கள் கோயில்களாக நிர்மாணிக்கப்பட்ட வரலாறும் உண்டு. இன்று நாம் காணும் பல ஆலயங்களின் வேர்கள் இவையேயெனலாம்.

தோட்டத்தில் கங்காணிமார் 'பெரட்டி' லுள்ளபடி கங்காணிமார்களுக்குக் கீழுள்ளவர்களுக்குக் கோயில் கட்டி வழிபட இடம் பிரித்துக் கொடுக்கப்பட்டிருந்தது போல, அவரவர்களுக்குத் திருவிழா எடுக்கும் காலமும் ஒதுக்கப்பட்டிருந்தது. ஒரு கங்காணியின் பெரட்டிலுள்ள தொழிலாளர் சாமி கும்பிட்டுத் திருவிழா நடத்திய பின்னர் மற்றக் கங்காணியின் பெரட்டில் இருப்போரின் கோயிலில் காப்புக் கட்டித் திருவிழா நடத்தப்படும் முறையும் நிலவியது. இவற்றில் பெரிய கங்காணிமார்களின் முக்கியத்துவத்தைக்காட்ட போட்டியாக உபய ஊர்வலங்கள் நடத்தப்படுவதும் உண்டு. ஈற்றில் எல்லோருமாக இணைந்த பெரும் திருவிழாவினை நடத்துவதும் உண்டு. இதுபோல் தோட்டத் தொழிலாளர்களிடையே மந்திரதந்திரங்களைக் கற்றுத் தேர்ந்த பூசாரிமார்கள் உடுக்கடித்து "மண்டு" வைத்து சாமியை வரவழைத்து குறிசொல்லக் கூடியவர்கள். கரகம், காவடி பாலிக்கக் கூடியவர்கள், வேல்குத்தக் கூடியவர்கள் முதலானவர்களோடு இவற்றையெல்லாம் ஐதீக முறைப்படி வழி நடத்தக் கூடிய பக்திமான்களும் இருந்தனர். இவர்களில் அநேகர் கங்காணிமார் அந்தஸ்தை உடையவர்களாக விளங்கினர்.

இவ்வழிபாட்டு இடங்கள் சடங்குகள் செய்து, நேர்த்திக் கடன்களை நிறைவேற்றி வழிபடும் இடங்களாக அமைவதோடு; சிலம்பாட்டம், கோலாட்டம், ஒயிலாட்டம், கும்மி, கரகம் முதலான ஆட்டங்களைப் பயிலும் கலையரங்குகளாகவும்

மிளிர்ந்தன. அத்துடன் பெரிய எழுத்து இராமாயணம் முதலான புராண வாசிப்புகளை நிகழ்த்தும் இடங்களாய் விளங்கியதோடு; பெரியோர் நல்லதங்காள் கதை முதலானவற்றை நிகழ்த்தும் இடங்களாகவும் திகழ்ந்தன. அத்துடன் இங்கு தாம் பயின்ற ஆட்டங்களை ஆலயத் திருவிழாக்களின் போதும், உற்சவங்கள் களியாட்டங்களின் போதும் ஆடியும்; அரங்கேற்றியும் மகிழ்ந்தனர்.

தோட்டங்களில் காணப்படும் வழிபாட்டுத்தலங்களை பின்வருமாறு வரிசைப்படுத்தலாம். ஸ்ரீ முத்துமாரியம்மன்; காளியம்மன், முருகன், பிள்ளையார், இராமர், விஷ்ணு, கிருஷ்ணன், பெருமான், மாடசாமி முனியாண்டி, வைரவர், இடும்பன், முன்னடையான், ரோதை முனி, மதுரை வீரன், சிந்தாகட்டி, கறுப்பண்ணசாமி, கவாத்துசாமி, ஏழுகன்னியர் கலேபண்டார தெய்வம், ஐயனார், அழகுமலையான், என்பன. இவற்றுடன்; ஊமையன் கோயில், சமாதிகள் அடங்கிய தென்புலத்தார், நாகதம்பிரான், அரசமரம், கருடாழ்வார் வழிபாடுகளும் உண்டு. இவ்வாறு தோட்டமக்கள் பல்வேறு தெய்வங்களை வணங்கிய போதிலும் மாரியம்மன் வழிபாடே மலையக வழிபாடு என்று கூறும் அளவிற்குத் தோட்டங்களில் மாரியம்மன் வழிபாடே மிகுந்தும் சிறந்தும் காணப்படுகின்றது.

மலையகத்தின் பல பகுதிகளிலும் தெரிவு செய்யப்பட்ட ஆலயங்களில்; மாவட்ட ரீதியாக; பின்வரும் வகையில் இவ் ஆலயங்கள் விளங்குகின்றன.

| மாவட்டம் | தெரிவு செய்யப்பட்ட ஆலயங்களின் தொகை | மாரியம்மன் ஆலயங்கள் |
|---|---|---|
| கண்டி | 92 | 57 |
| மாத்தளை | 35 | 27 |
| கேகாலை | 55 | 46 |
| பதுளை | 103 | . 36 |
| இரத்தினபுரி | 37 | 30 |
| நுவரெலியா | 300 | 225 |
| களுத்துறை | 48 | 45 |
| குருநாகல் | 11 | 8 |
| கொழும்பு | 60 | 41 |
| மொனராகலை | 13 | 07 |

இப்புள்ளி விபரங்கள் மலையகத்திலுள்ள ஆலயங்களின் மொத்தத் தொகையன்று, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட குறிப்பிட்ட ஒரு தொகை ஆலயங்களில் அம்மன் ஆலயங்களின் அதிகரித்த எண்ணிக்கையினைக் காட்டுவதேயாகும். இதனைத் தவிர வடமேல் மாகாணத்தின் சில பகுதிகளில் மறைந்தும் கவனிப்பாரற்றும் சில

ஆலயங்கள் உள்ளன. இவை அங்குள்ள கிராம மக்களினால் வழிபாடு செய்யப்படுகின்றன. தோட்டப்பகுதிகளில் இக்கட்டுரைக்காக வகை செய்யப்படாத ஆலயங்கள் பலவற்றிலும் அம்மன் ஆலயங்களே அதிகம் எனலாம். மலையகத்தில் இவ்வாறு விளங்கும் அம்மன் வழிபாட்டினைப் பின்வரும் முறைகளில் நோக்கலாம்.

(அ) தோட்டப்பகுதிகளில் இருக்கும் ஆலயங்களில் ஐதீகப்படி அதாவது மரபு வழியில் நடைபெறும் பூசைகள். அங்கு நடைபெறும் வழிபாடுகளும் சடங்குகளும் திருவிழாக்களும் கொண்ட கிராமிய நெறி.

(ஆ) தோட்டங்களுக்கு வெளியே மலையகத்தின் நகர்பகுதிகளிலும்; ஒரு சில தோட்டங்களிலும் ஆகம முறைப்படி அமைந்த ஆலயங்களில் நடைபெறும் பூசைகளும் உற்சவங்களும்.

(இ) வழிபாட்டு மரபுகளும் ஆகம விதிகளும் கலந்த நிலை, இவற்றோடு மலையக தாழ் நிலப்பகுதிகளில் தோட்டங்கள் என்ற நிலை மாறி தோட்டமாகவோ கிராமமாகவோ இல்லாது இன்று தமிழ்மக்கள் வாழும் பகுதிகளில் கிராம மக்கள் வழிபடும் பத்தினி அம்மன்; காளியம்மன் வழிபாடுகளையும் உள்ளடக்கலாம்.

தோட்டங்கள் தோறும் மாரியம்மனுக்கு வழிபாடு செய்து; மாரியருளால் மழை பொழிந்து வெம்மை தணிந்து அம்மைநோய் வராமல் இருக்கத் திருவிழா எடுக்கின்றனர். அம்மை கொப்புளங்களை முத்து என்றே அழைக்கின்றனர். இதனால் அம்மனை முத்துமாரி என்றே வணங்குகின்றனர். அம்மை கண்டவரை அம்மை பாத்திருக்கு என்றே கூறுவர். அம்மனை பயபக்தியுடன் வேண்டி நேர்த்திக் கடன் வைப்பர் "ஆரு கடன் நின்றாலும் மாரிகடன் ஆகாது" என்று அம்மனை நேர்த்தியை தவறாது செய்து முடிப்பர். அம்மன் அருளால் கொப்புளங்கள் இறங்க வேண்டும் என்பதை,

*"சிரசில் முத்தையம்மா தற்காத்து*
*நீ யிறக்கும்*
*முகத்தினில் முத்தையம்மா முன்னதாய்*
*நீ யிறக்கும்*
*கழுத்தினில் முத்தையம்மா கட்டழகி*
*நீ யிறக்கும்*
*தோளில் முத்தையம்மா துரந்தரியே*
*நீ யிறக்கும்*
*மார்பில முத்தையம்மா மாதாவே*
*நீ யிறக்கும்*

*வயிற்றினில் முத்தையம்மா வடிவழகி*
*நீ யிறக்கும் .......*

என்று மாரியம்மன் தாலாட்டில் பாடுகின்றனர். அம்மை கண்டவருக்கு வேப்பிலை படுக்கையினையே உபயோகிக்கின்றனர். இளநீரையே அருந்தக் கொடுக்கின்றனர். நோயுள்ளவருக்குத் துன்பம் தெரியாமல் இருக்க அம்மனுக்கு சாந்தி செய்ய மாவிளக்கு எடுக்கின்றனர்.

தமிழர் வாழ்க்கை; தமிழகத்திலிருந்த; ஐந்து வகையான நிலங்களின் பாகுபாட்டிலேயே தொடங்கி வளர்ந்து வந்துள்ளமையினை நாம் காண்கின்றோம். காடும் காடு சார்ந்த பகுதி முல்லை நிலமாகும். மலையும் மலை சார்ந்த பகுதி குறிஞ்சி நிலம். பாலை நிலமான வரண்ட நிலத்தில் வாழும் மக்களுக்கு வளமான தொழில்கள் கிடைப்பது குறைவு. எனவே, அவர்கள் தம் நிலத்தின் ஊடாகச் செல்லும் மக்களிடம் வழிப்பறி செய்தனர். இத்தொழிலுக்கு வீரம் தேவை. எனவே குறிஞ்சித் தெய்வமான முருகனின் வேல் முதலானவைகளை கொற்றவைக்கு அளித்து வீரவணக்கம் செய்தனர். இவ்வகையில் கொற்றவை பனைவரை அழிக்க – வல்லமை, வெற்றி தரும் ஆற்றல் மிகு ஆவேச அன்னையாக விளங்குவதை காணலாம்.

இயற்கை வளமாகி மழைவளம் குறைந்தமண்ணில் வாழ்ந்த மக்கள் மழைவளம் வேண்டி மாரியைத் துதித்தனர். இவ்வகையில் மாரி உழைக்கும் வர்க்கத்தினரின் தெய்வமாகவும் விளங்குகின்றாள். பயிர்ச்செய்கைகள் துளிர்க்கவும் மாடு, கன்றுகள் வாழவும்; மழை வேண்டும். எனவே, பூசைகள், சடங்குகள் செய்வதோடு, ஆடியும், பாடியும் மழையைத் தரும்படி மாரியை வேண்டினர்.

*"வாறாளாம் வாறாளாம் மகமாயி – அவள்*
*மாசி மகத்தில் உதிச்சவளாம்*
*வாறாளாம் வாறாளாம் மகமாயி – அவள்*
*வாடிய பயிருக்கு மழை தருவாளாம்"*
*என்று மழை வேண்டியும் மழை பெய்த பின்னர்*

*"மாரி மகமாயி எங்கமுத்து*
*மாரி மணிமந்திரகேசரியே*
*எங்க முத்துமாரி."*

*"மொடுமொடுன்னு மழை பெய்ய*
*முச்சந்தி நீரும் பாய்ந் தோட*
*முடுக்காய் நிக்கிற முத்தாளுக்கு*
*முருகு மின்னுது பாருங்கடி" –*

என்று பெண்கள் பாடுவதாக உள்ளது. இன்னும் தோட்டப் புறங்களில் கோடை வரட்சி ஏற்பட்டால் பெண்கள் வெள்ளிக்கிழமைகளில் "குளித்து முழுகி" அம்மன் கோயிலைச் சுற்றிமழை வேண்டி ஏழு பேர் அல்லது ஒன்பது பேர் நிறைகுடத்து நீரை வலம் வந்து ஊற்றுவர். இதுபோல் உடலில் அலகு பூட்டி உடலை வருத்தி அம்மனை வழிபடுவர். தாம் அறியாமல் ஏதும் பிழை செய்திருப்பின் பொறுத்தருளுமாறு அன்னையை வேண்டித்துதிப்பர். முன்பு போர்க்களத்திலும் தாம் ஆடிய வேட்டையின் போது அம்பு பட்டு வேதனைப்படும் உயிர்களைப் போலத் தாமும் அலகு முனைகளால் குத்தப்பட்டுத் துன்பப்படுவர். துயர்நீங்க அம்பாளின் அருட்கருணையினை வேண்டித் துதிப்பர். நாக்கு முதல் உடலின் பல பாகங்களிலும் அலகு பூட்டப்படும்.

பண்டைக் காலத்தில் வீரர்கள் வேள்வித் தீ வளர்த்து ஆகுதி சொரிந்து அம்மையை வழிபடும் முறை இருந்தது. இதனையொட்டி இன்று அன்னையின் ஆலயங்களில் தீ மிதித்தல் என்னும் "பூக்குழி" இறங்கும் முறை நடைபெறுகின்றது. அம்பாளின் அருள் வெந்தணலைப் பூக்குழியாக மாற்றி விடும் என்பது நம்பிக்கையாகும். அம்பிகை பெண்களுக்கு மங்கள வாழ்வை அளிப்பதால் மா விளக்கு ஏற்றும் வழிபாடு சிறப்பாக உள்ளது. இன்று பெண்டிரும் பக்தி மேலீட்டால் தீ மிதிப்பில் ஈடுபடுவதைக் காணலாம். தீ மிதிப்பை இன்று நேர்த்திக் கடனுக்காவும் நிகழ்த்துகின்றனர். உடப்பு திரௌபதை அம்மன் ஆலயம், மாத்தளை ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயம் ஆகியவற்றில் சிறந்து விளங்கும் இத் தீ மிதிப்பு வைபவம் தற்போது பிற தெய்வ ஆலயங்களிலும் நடைபெறுகின்றது.

பெண்கள் குடும்பத்தில் அமைதி நிலவவும், நல்வாழ்வு பெறவும் அம்பாளின் அருள் வேண்டி மாவிளக்கு எடுக்கின்றனர். இதனை நேர்த்திக் கடனாகவும் நிறைவேற்றுவர். பச்சை அரிசி மாவு, சர்க்கரை, பால் ஆகியவற்றைக் கலந்து உருண்டையாகப் பிடித்து, அதன் உச்சியில் குழித்து நெய் அல்லது எண்ணெய் ஊற்றி விளக்கு முகங்களில் குங்குமம் இட்டுத் திரியை ஏற்றி வைப்பதே மாவிளக்காகும். அம்மனின் சந்நிதியில் கிழக்கு முகமாக த் திரியினை எரியும் படியாக வைத்து அர்ச்சனை செய்வர். அம்மன் வழிபாட்டுடன் வேப்பிலை இணைந்துள்ளதுபோல் வேப்பிலைக்கரகமும் கரகமெடுத்தலும் இணைந்து காணப்படுகின்றது. கரகத்தில் அம்மன் எழுந்தருளி மக்களை ஆட்கொள்வாள் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை. அம்மன் ஆலயங்களில் கரகம் பாலித்தலும், சக்தி கரகம் எடுத்தலும் மிக முக்கியமான சடங்குகளாகும். சக்தி கரகத்தை எடுப்போரே அன்னையாக அருள் பாலிப்பார். காவடி ஊர்வலத்தைப் போல கரக ஊர்வலமும் சிறப்பாக அமையும். அம்மன் சினம் கொண்டு அம்மை, வைசூரி போன்ற நோய்களை ஏற்படுத்தும் போது அவற்றை அவள் கருணையாலே தணிக்கப் பக்தியோடு கரகம் எடுப்பதுடன் வேப்பிலை தேரும் இழுப்பர். அம்மனுக்காக தீச்சட்டி ஏந்தி ஆடிவருவதும் மரபாகும்.

## *மலையகத்தில் பெருந்தோட்டப் பகுதிகளில் ஐதீக முறையிலான மாரியம்மன் வழிபாடு*

மாரியம்மனைத் தெய்வமாக; சக்தியாக; அருள்மிகு அன்னையாக வழிபடும் மரபும், சமய தத்துவங்களும் இவ்வாறு நெறியோடு விளங்கும் வேளையில்; இதற்கு எவ்வகையிலும் ஊறு ஏற்படா வண்ணமும் குறைவு படாத விதத்திலும் குறிப்பாக மலையகத்தில் பெருந்தோட்டப் பகுதியில் வாழும் மக்களினால் மிகவும் ஆழமான வேர் கொண்டதும்; பக்தி சிறப்பு மிக்கதும் கலாபூர்வமானதும்; நம்பிக்கையின் அடித்தளத்தில் எழுந்ததும்; கிராமிய நெறி முறைகளில் பிணைந்ததுமான ஓர் உன்னத வழிபாட்டு முறையினை பின்பற்றுவது சிறப்புடன் குறிப்பிடத்தக்கதாகும்.

பெருந்தோட்டங்களில் தொழில்புரிவதற்காக அழைத்து வரப்பட்ட மக்கள் வறுமையில் வாடிய போதிலும், தென்னிந்திய கிராமிய பண்பாட்டின் பிரதிநிதிகளாகவும், அதே கிராமிய சமய நெறிமுறைகளின் நிலைக்களமாகவும், காவலர்களாகவும் விளங்கிய; உயர்ந்த கலைஞானம் கொண்டவர்களாகத் திகழ்ந்தனர்.

இந்தப் பண்பாட்டு அம்சம் அவர் வாழ்க்கையின் எல்லாத் தலங்களிலும் வெளிப்பட்டு விளங்கி நின்றமை குறிப்பிடத்தக்கது. தாய் நாட்டில் பல்வேறு இன்னல்களினால் நலிவுற்று புலம்பெயர்ந்த மக்கள்; வெளிநாடுகளில் துன்பங்களுக்கும் தொல்லைகளுக்கும் உட்பட்டு வாடிச் சோர்ந்து; தாம் கங்காணிமார்களின் ஆசை வார்த்தைகளை நம்பி ஏமாற்றப்பட்டு விட்டோம் என்ற உண்மையை உணர்ந்த வேளையிலும் திரும்பிதாய் நாட்டிற்கு செல்லாது; தெய்வ நம்பிக்கையோடு சொல்லொணாத் துயர்களில் தவித்துக் கொண்டு மலை நாட்டை நோக்கி; திறக்கப்பட்ட தோட்டங்களில் பணி புரிவதற்காகவும் புதிய தோட்டங்களை உருவாக்குவதற்காகவும் நம்பிக்கையோடு பயணம் செய்தவேளையில் அவர்கள் முன்நின்றதெல்லாம் மாரியம்மன் என்னும் தெய்வமே ஆகும்.

தாம் சென்று குடிபுகுந்த தோட்டங்களிலெல்லாம் இவ்வாலயங்களை அமைத்தனர். ஆரம்ப நிலையில் இவை கோவில்களாகவோ, ஆலயங்களாகவோ அமையவில்லை. குடும்ப; குல; ஊர்த் தெய்வங்களை நினைத்து தாமிருந்த இடங்களில் வழிபட்டமையே இதன் தொடக்கம் எனலாம். வழமையாக வருடந்தோறும் அல்லது விஷேட தினங்களில் தமது குடும்ப ; குல; ஊர்; எல்லைத் தெய்வமாக வழிபட்ட மாரியம்மனுக்கு அங்கு செல்ல முடியாத நிலையில் இங்கேயே சடங்குகளையும் பூசைகளையும் நடத்தினர். இன்று கூட தோட்டத்தொழிலாளர் மத்தியில் ''வீட்டு மாரியம்மன்'' கொண்டாடும் வழக்கம் உண்டு. இவ் வீட்டு மாரியம்மனுக்கு பெட்டைக் கோழி கறி சமைத்துப் படைப்பர்.

இவ்வாறு பூசைகள் நடத்தி வழிபட்ட இடங்கள் நாளாவட்டத்தில் பொது வழிபாட்டு தலங்களாகப் பரிணமித்து சிறு கோவில்களாகின. இக் கோவில்கள்

சிலவற்றில் தமிழ் நாட்டில் தாம் வழிபட்ட ஆலயங்களில் இருந்து "பிடி மண்ணையோ அல்லது வழிபாட்டுக் கல்லையோ; தலவிருட்சம் என்று குறிப்பிடக்கூடிய மரத்தின் கிளையினையோ நாட்டி வழிபாட்டடை தொடங்கினர் என்று தெரியவருகின்றது. சில வேளைகளில் ஒருவர் கனவில் அம்மன் வந்து "நான் உன்னுடைய குல தெய்வமென்றும் உன்னையும் உமது குடும்பத்தினையும் காப்பதற்காக கூட வந்துள்ளதாகவும்; தற்போது "இந்த இடத்தில் அல்லது இந்த மரத்தடியில் குடியிருப்பதாகவும் அங்கு தன்னை நிலைநிறுத்தி வழிபடுமாறு; கூறியதாகவும் அதன்படி கோயிலமைத்து வழிபட்டனர் என்றும் கூறுவர்.

சில வேளைகளில்; ரம்மியமான இயற்கை எழில்மிகுந்த மலையகத் தோட்டங்களில் நீரோடைகள் பாரிய ஆலமரங்கள் வேம்பு மரங்கள், கற்பாறைகள் நிறைந்த பகுதிகளில் கோவில்களை அமைத்தனர். அத்துடன் தாம் வேலை செய்யும் மலைப்பகுதிகளிலும் தம்மை ஆபத்துகள் இன்றி காக்க வேண்டுமென ஆங்காங்கே முடக்குகளிலும்; சரிவுகளிலும் கூட சிறுசிறு ஆலயங்களை அமைத்ததோடு அவற்றுக்கு வருடந்தோறும் பலியிட்டும் விசேட பூசைகள் நடத்தியும் வழிபட்டார்கள். இவ்வாறு ஒரு தோட்டத்தில் பல அம்மன் ஆலயங்கள் அமைந்திருந்த போதிலும் பொதுவாக மக்கள் செறிந்திருக்கும் லயங்களைக் கொண்ட பகுதிகளில் விளங்கும் கோயில்களே பூசைகள் வழிபாடுகள் நிறைந்தனவாகவும் ஏனையவை "காட்டுச்சாமிகளாகவும்" கணிக்கப்பட்டன. நயீனா தீவு நாகபூஷனி அம்மன் ஆலயத்தைப் போன்று தோட்டங்களிலுள்ள பல கோயில்களில் நாகங்கள் குடிகொண்டு அற்புதம் விளைவித்துள்ளன.

பொதுவாக இவ்வாலயங்களில் தினமும் காலை; மாலை ஆகிய வேளைகளில் கிரமமான பூசைகள் நடைபெறுவதில்லை. எனினும் கிரமமான பூசை நடைபெறும் ஆலயங்களும் இருக்கின்றன. பல தோட்டங்களின் ஆகமவிதி முறைப்படி அமைந்த ஆலயங்கள் இருப்பதோடு அங்கு சிவாகம முறைப்படி பூசைகளும் வழபாடுகளும் நடைபெறச் செய்கின்றனர். நூரி தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் போன்ற பலவற்றை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். எவ்வாறாயினும் எல்லா ஆலயங்களிலும் வெள்ளி, செவ்வாய் கிழமைகளில் விசேட பூசைகள் நடைபெறுவதுடன் வழிபாடும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும். காலையில் பூசை நடைபெறாத சிறு கோவில்களில் மாலையில் பூசை நடைபெறுவதும் உண்டு. தோட்டப்புற ஆலயங்கள் பெரும்பாலானவற்றில் பூசாரி அல்லது ஒரு முதியவர் அல்லது தேசிகர் என்போரே பூசையினை நடத்துகின்றனர். ஒரு சில ஆலயங்களில் பிராமணக் குருக்களும் இருப்பது குறிப்பிடத்தக்கது. பல ஆலயங்களுக்கு விசேட பூசைகளின் போது பிராமணக் குருக்கள் அழைத்து வரப்படுகின்றனர்.

பூசாரி என்பவர் பரம்பரையாக சேவை செய்பவராகவோ அல்லது அருள் வந்து சாமி ஆடக்கூடியவராகவோ குறி சொல்லக் கூடியவராகவோ இருப்பார். இவர்களில் பெரும்பாலானவர்கள் மந்திர உச்சாடனங்களையோ சுலோகங்களையோ சொல்லுவது இல்லை. பொங்கல் முதலான நைவேத்தியங்களைப் படைத்து தீப தூபங்களை காட்டி எல்லோரையும் ஒரு முகமாக வழிபாட்டினை செய்ய கூடிய நிலையை உருவாக்குவதே இவர்கள் பணியாகும். பூஜை முடிய தீர்த்தம், பூ, விபூதி முதலான பிரசாதங்களையும் வழங்குவர். சிலர் அருள் வந்தாடி பக்தர்களுக்கு குறி சொல்வதும் உண்டு.

தோட்டங்களில் பல்வேறு காலங்களில் அம்மனுக்கு பாரிய திருவிழாக்கள் நடைபெறுவதைக் காண்கிறோம். ஆகம விதிமுறைப்படி அமைந்த ஆலயங்களில் மாசி மகோற்சவமே வருடாந்த மகோற்சவமாக அமைகின்றது. ஆனால் பல தோட்டங்களில் பங்குனி உத்தரம்; சித்திரை திருவிழா; ஆடி, ஆவணி பூசைகளையே வருடாந்த மகோற்சவங்களாக சிறப்பித்துக் கொண்டாடுகின்றனர். இத் திருவிழாக்கள் 3,5,9 தினங்களென என பலவாறாக அமைகின்றன. இவற்றை நிர்ணயிப்பதில் தோட்ட மக்களின் பொருளாதார நிலையே அடைப்படைக் காரணமாக அமைகின்றது. எனினும், வருடம் முழுவதும் அம்மனையும்; அம்மன் கோவிலையும்; அம்மன் திருவிழாவையும் உள்ளடக்கிய; ஒரு திருவிழா வட்டத்தில் தோட்டத்து மக்கள் சஞ்சரிப்பதைக் காணலாம்.

நோத் மாத்தளை தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் கதிர்காமத்தில் நீர் வெட்டு முடிந்ததன் பின்பு; அங்கிருந்து தீர்த்தம் கொண்டுவரப்பட்டு இங்கு கொடியேற்றப்படுகின்றது. இத் திருவிழா; முதல் நாள் ஆற்றில் 'கரகம்பாலித்தல்" என்னும் நிகழ்ச்சியோடு தொடங்குகின்றது. தோட்டத்திலுள்ள பெரியோர்கள் அடங்கிய சனக் கூட்டமொன்று அன்றுமாலை ஆற்றங்கரையை அடையும். அங்கு மணல் மேடையில் மூன்று கரகங்கள் பாலித்து வைக்கப்பட்டிருக்கும். இவற்றின் நடுவிலிருப்பது சக்தி கரகமாகும். கரகத்தை எடுக்க விரும்பும் ஆடவர் குளித்து ஈர வேஷ்டியுடன் அம்பாளைத் துதித்தபடி வரிசையாக நிற்பர். அப்போது அம்மன் மீது துதிப்பாடல்கள் பாடப்படும். சக்தி கரகத்தை எடுக்க இருப்பவருக்கு அருள் வந்தாலும் கூட அவர் அங்குள்ள பெரியோர்களால் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் மதிப்பை எடுத்தாக வேண்டும். பெரியோர்கள் அம்மடையிலுள்ள ஒரு பூவையோ அல்லது அரிசியையோ, கற்கண்டையோ ஏதோ ஒரு பொருளை; இரகசியமாக முடிவு செய்து மதிப்பாக குறிப்பர். அருள் வந்து மதிப்பினை எடுப்போரே சக்தி கரகத்தை எடுக்கும் பேற்றினை பெறுவார். அதன் பின்னர் கரக ஊர்வலம் கோவிலை வந்தடையும். இதனை 'குடி அழைத்தல்' என்றும் கூறுவர். இதன் பின்னர் காப்புக்கட்டுதல் முதலிய சடங்குகள் நடைபெறும். இதுவே கொடியேற்றமாகும்.

அம்மன் திருவிழாவில் கரக ஊர்வலம் ஒரு முக்கிய திருவிழாவாகும். சக்திக் கரகமும் ஏனைய கரகங்களும் மக்கள் வாழும் இல்லங்களுக்குச் சென்று திரும்பவும் கோவில்களுக்கு வருவதே கரக ஊர்வலமாகும். ஆட்ட கரகத்தைப் போல் சக்தி ஊர்வலம் ஆடி களிப்பூட்டும் நிகழ்ச்சியாக அமையாது பக்தி மயப்பட்ட ஒரு நிகழ்வாகவே இது விளங்கும். சக்திக்கரகம் இல்லந்தோறும் வரும் வேளையில் வீடுகளை சுத்தம் செய்து மாவிலை, வேப்பிலைத் தோரணங்கள் கட்டி, கோலமிட்டு அழகுபடுத்தி வைப்பர். நிறைகுடத்தில் மஞ்சள் நீர் வைத்து சக்தி கரகமேந்தியோரின் பாதங்களை கழுவி, வணங்கி விபூதிப் பிரசாதம் பெறுவர். கரக ஊர்வலத்தின் போதும், அம்மன் தேரில் எழுந்தருளி வரும் போது; துள்ளுமா, மாவிளக்கு என்பன எடுக்கும் போதும் பெண்கள் குரவையிட்டு, கும்மியடிப்பர் கும்மியடிக்கும் பெண்கள் பாடிப்பாடி கும்மியடிப்பர். ஆண்கள் கோலாட்டம் அடிப்பர். கும்மியடிக்கும் போது பெண்களின் ஆட்டம் ஒரு காலு இரண்டு மிதியாகவும், மறு காலு நாலு மிதியாக அமையும். கோலாட்டம் பதினாறு வகையான அடிகளைக் கொண்டது. இவற்றில் கட்டடி, தாமரை அடி, சதுரஅடி யுத்த அடி , பஞ்சாட்சர யுத்த அடி, கலம்பகம், ஓயில் அடி, நடை அடி என்பன எட்டு வகை அடிகளாகும். பின்னல் கோலாட்டம் தனிவகையாகும். கும்மியடித்தல் விநாயகர் காப்புடனேயே தொடங்குவது குறிப்பிடத்தக்கது.

*"முந்தி முந்தி விநாயகரே*
*முப்பத்தி முக்கோடி தேவர்களே*
*நூற்றி முப்பது கும்பிடும் போடுகிறேன்*
*காத்து இரட்சிக்க வேணுமையா*
*சீர்வளம் பெற்ற குயில் கூவும்*
*நல்ல செங்கதிர்காமம் ஆறுமுகம்*
*கதிரேசன் மேளங்கள் அன்று*
*கொண்டாடிய வாசகமே*
*சிந்தைக்கு சொந்த விளைவாக்கி*
*தமிழ் செய்யும் முறைகளை போற்றி*
*மங்கையர் எல்லோரும் வாருங்கடி*
*வந்து மாணிக்க கங்கை நீராடுங்கடி*
*சிங்கார மா பணி பூட்டுங்கடி*
*கவி சிறந்த குங்குமம் தீட்டுங்கடி*

இவ்வாறு விநாயகர் பாடல் குமரக் கடவுளையும் இணைத்துப்பாட பின்வரும் கும்மிப்பாடல்,

*"ஒரு சுத்து மாரி, மாரி வேப்பமரம் அரகரா*
*நந்தவனம் நடுநரி பூந்தோட்டம்*

நரி சேதி சொல்ல மாரி
மாரி வருகுதம்மா அரகரா
மாரியம்மன் கோயில்ல சப்பரத்து மேல
சரஞ்சரமா மாலை எடுத்துவைக்கும் காலை
இருபுறமும் காந்தம் எழுந்திருந்து கலகலக்கும்
நாகரத்தினம் போல
மாயவரு கோயில்ல சப்பரத்து மேல
சரஞ்சரமா மாலை எடுத்துவைக்கும் காலை
எழுந்திருந்தா கலகலக்கும்
நாகரத்தின முத்து மாலை
காளியம்மா கோயில்ல
சரஞ்சரமா மாலை
எடுத்து வைக்கும் காலை
இருபுறமும் காந்தம்
எழுந்திருந்தா கலகலக்கும்
நாகரத்தின முத்து மாலை
கட்டை புள்ளை தாராவே
காணங்கோழி முதுவழகி
முத்தான சிமிக்கி போடுறம் நாங்க
மெல்ல மெல்ல வர கொஞ்சம்
செப்புக்குடத்திற்கு உள்ளே இருக்கும்
சித்திரை புத்திரரை கண்டாச்சி
எடுத்து உடுத்திர மீனாட்சி
ஏதோண்டம் போடுவா சொக்கலிங்கம்
மஞ்சள் சீலையாம் மாராப்பாம்
மடி நிறைந்தது மல்லிகைப்பூ
கொண்டை பெருத்த மாரியம்மா
கொண்டு போறேன் கூட மல்லிகைப்பூ"

இவ்வாறு; கும்மிப் பாடல்களைப் பாடி கும்மியடித்துப் பெண்கள் மகிழ்வர்.

மாரியம்மன் வழிபாட்டுடன் தொடர்புடைய முக்கிய அம்சம் அம்மை நோய். பார்த்தலாகும். இதனை நோய் என்று சொல்வதே பிழை என்று வாதிடும் பாங்குடையோர் தோட்டத்து மக்கள். அம்மை கொப்புளங்களை முத்து என்றே நம்புவர். அம்மை கோபம் கொண்டே முத்துக்களை இறைத்ததாகவே கூறுவர். அம்மனை இந்த கருத்திலேயே முத்துமாரி என்று கொள்வர். அம்மனுக்கு வேண்டடத்தகாத பிழை செய்த விடத்து, அவள் கோபம் கொண்டு முத்துக்களை

போட்டதாகக் கூறுவர். இம் முத்துக்கள் இறங்க அம்மை கண்டவரை தனியே வேப்பிலை படுக்கையில் இருக்கச் செய்வதும் வீடுகளை வேப்பிலையால் நிறைப்பதையும் காணலாம். சிலர் மிகவும் கடுரமாக நோய் கண்டிருப்பின் ஏழு அல்லது ஒன்பது நிறை குடங்கள் வைத்து அம்மனை இறங்கும்படி வேண்டுவர். அடுப்பில் எண்ணெய் வைத்து பொரியல் முதலான சமையல்களையும் நடாத்த மாட்டார்கள். எவ்விதமான வாத்தியங்களையும் இசைக்க மாட்டார்கள். அம்மனை இறங்கும்படி வேண்டி மாரியம்மன் தாலாட்டு பாடுவது வழக்கமாகும்.

இம்மாரியம்மன் தாலாட்டு விநாயகர் துதியுடன், வெண் செந்துறை, சரஸ்வதி துதி என்பவற்றுடன் மாரியம்மன் துதி என்ற எளிய ஓசைச் சத்தத்துடன் அமைந்தது. இப்பாடல்களில் அம்மனின் பிறப்பு, அவளின் உருவங்கள் கரகத்தின் சிறப்பு அம்மனின் பெருமைகள் என்பன எடுத்து விபரிக்கப்பட்டுள்ளதுடன் அம்மை முத்தை இறக்கும்படியும் பாடப்பட்டுள்ளது.

பின்வரும் வரிகளில் இப்பாடலின் தன்மையை உணரலாம்.

*கன்ன புரத்தாளே காரண சவுந்தரியே*
*காரண சவுந்தரியே நாரணனார் தங்கையம்மா*
*நாரணனார் தங்கையம்மா நல்ல முத்து மாரியரே*
*நல்லமுத்து மாரியரே நாககன்னி தாயாரே*
*உன் கரகம் பிறந்ததம்மா கன்னனூர் மேடையிலே*
*உன்–வேம்பு பிறந்ததம்மா விஜய்நகர் பட்டணமாம்*
*உன் சூலம் பிறந்ததம்மா துலங்குமணி மண்டபத்தில்*
*உன்–அலகு பிறந்ததம்மா அயோத்தி நகர் பட்டணமாம்*
*உன்–பிரம்பு பிறந்ததம்மா பிச்சாண்டி சந்நிதியாம்*
*உன்–உடுக்கை பிறந்ததம்மா உத்திராட்ச பூமியிலே*
*உன்–பம்பை பிறந்ததம்மா பளிங்குமா மண்டபத்தில்*
*உன்–கருத்து பிறந்ததம்மா கஞ்சகிரியிந்திரபுரம்*
*உன்–மருளர் தழைக்கவம்மா வையங்கனிடேற*
*உன்–குமாரவர்க்கந் தான்றழைக்க கொம்பனையே மாரிமுத்தே!*

இதுவுமது

*பொரியோ வெழும்பி நீ பூரித்து ஆலித்து*
*ஆலித்து நீயெழும்பி ஆத்தாளிறக்கம்மா*
*சிரசினில் முத்தையம்மா தற்காத்து நீ யிறக்கும்மமா*
*முகத்தினில் முத்தையம்மா முன்தாய் நீயிறக்கும்*
*கழுத்தினில் முத்தையம்மா முன்தாய் நீயிறக்கும்*
*கழுத்தினில் முத்தையம்மா கட்டழகி நீயிறக்கும்*
*தோளினில் முத்தையம்மா துரந்தரியே நீயிறக்கும்*

*மார்பினில் முத்தையம்மா மாதாவே நீயிறக்கும்*
*வயிற்றினில் முத்தையம்மா வடிவழகி நீயிறக்கும்*

அம்மை இறங்கிய பின்னர்; மஞ்சள் நீருற்றி அம்மன் கோயிலில் பொங்கல் வைத்து பூசை செய்வர். தண்ணி ஊத்துவது ஒரு சடங்காகும்.

அம்மன் நோய் கண்டவருக்காக "மடிப்பிச்சை எடுப்பது மற்றொரு சடங்காகும். தீவிர நோய் கண்ட ஒருவருக்காக ஒருவர் மடிப்பிச்சை எடுப்பேன் என்று நேர்த்திக்கடன் வைத்துக் கொண்டால் அவர் வீடுகளுக்கு முன் நின்று முந்தாணியை ஏந்தி மடிப்பிச்சை தாருங்கள் என்று கேட்டு பிடியரிசி பெற்று வருவார். இப்படி கிடைத்த அரிசியை பொங்கலிட்டு பூசை செய்து பிறருக்கும் வழங்கி நேர்த்திக்கடனை முடிப்பர்.

"துள்ளுமா" என்பது பச்சரிசியை ஊற வைத்து இடித்து சர்க்கரையோடு வேப்பிலையையும் கலந்து அம்மனுக்கு படைத்து பின்னர் பிறருக்கு வழங்குவதாகும். இதனையும் நேர்த்திக் கடனாகச் செய்வர்.

அம்மன் ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக்களின் போது கரகம் எடுப்பதோடு காவடி, சப்பரம் என்பனவும் எடுப்பர். சப்பரத்தை வண்டிகளில் வைத்து இழுப்பதும் உண்டு. சக்திக்கரத்துடன் ஆடி வருவோர் வேப்பிலைக் கொத்தை வீசி வீசி ஒயிலாட்டமாக ஆடி வருவதும் உண்டு. இப்படி ஆடி வருவோர் தண்டை கொலுசு, பாதசலம்; கச்சை மணி முதலியவற்றை அணிந்து பம்மை, உடுக்கு, தப்பு முதலியவற்றை இசைத்து ஆடி வருவர். அம்மனுக்கு நேர்த்தி வைத்து கண்ணடக்கம் வைப்பர். சிவப்பு நிற பட்டினையே வெகுவாக சாத்துவர். அம்மன் திருவிழாக்களின் போது அருள் வந்தவர், சாட்டை எடுத்து ஆடுவதும் உண்டு இச் சாட்டை கற்றாளை நாரினால் செய்யப்பட்டு கரிய நிறம் பூசப்பட்டிருக்கும். அம்மன் சாட்டை எடுத்து ஆடும் போது பேய் பிடித்து ஆடுவோரை சாட்டையினால் அடித்து பேயோட்டுவதும் உண்டு.

தோட்டங்களில் கோடைக் காலங்களில் அம்மனை குளிர்வித்து; மழையை வேண்டி சடங்கு நடத்துவதுண்டு. இதனை பூக்குடம் என்பர். ஒன்பது இருபத்தியொன்று ஆகிய ஒற்றைப்பட, நிறை குடங்களை ஏந்திய பெண்கள் குரவையிட்டபடி அம்மன் மீது பாடல்களை பாடிக்கொண்டு அம்மன் கோயிலைச் சுற்றி நீரை ஊற்றுவர். சில இடங்களில் அம்மனுக்கு முதல் குடத்து நீரை ஊற்றுவர் ஏனைய குடங்களை கோயிலைச் சுற்றி ஊற்றுவர்.

அம்மன் கோயில் திருவிழாக்கள்; இரதோற்சவம், அன்னதானம் என்பன வற்றுடன்; பாலித்த கரகங்களை ஆற்றில் விடும் "குடிவிடுதல்" என்னும் தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெற்றாலும் இறுதியில் "இடும்பன்" பூசை நடைபெறும் இடும்பன் பூசை செய்வது திருவிழாவை காத்துக் கொடுத்தமைக்காகும்.

இடும்பனுக்கு மச்ச மாமிசங்கள் படைப்பதுமுண்டு. இடும்பனுக்காக நான்கு திசையும் எலுமிச்சம்பழம் வெட்டி வீசப்படும் உண்டு. அம்மன் திருவிழாக்களில் தீட்டுள்ளோர் கலந்து கொள்ள மாட்டார்கள்.

அம்மனை; உடுக்கடித்து; வருந்தி அழைத்து "சாமி பார்ப்பது" வழக்கம். அம்மன் பூசாரி மீது வந்து; அழைத்த குடும்பத்திற்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களையும், அத்துன்பங்களைக் நீக்க நிறைவேற்ற வேண்டிய சடங்கு முதலான பூசைகளை பற்றி எடுத்துக் கூறுவதும் உண்டு. இதன்படி பூசாரியின் துணையோடு பூசைகளை நடத்துவர். மலையகத்தில் நடைபெறும் அம்மன் திருவிழாக்கள் தனியாக பூசை சடங்குகளோடு நிறைவு பெறுவதில்லை. கரகாட்டம், காவடி ஆட்டம், சிலம்பாட்டம், ஒயிலாட்டம், கும்பி கொட்டுதல் ஆகிய சிற்றாட்டங்களும் ஆடப்பெற்று கலைத்துவமாக நிகழும்.

இவ்வாறு அம்மன் வழிபாடு மலையத்தில் பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கையோடு இரண்டரக் கலந்ததாக அமைந்துள்ளது. மலையக மக்களின் வாழ்வோடு வாழ்வாக பின்னிப்பிணைந்து விட்ட மாரியம்மன் வழிபாடு கலைகளின் வளர்ச்சிக்கும் காலாக அமைந்துள்ளது. ஆண்கள் பக்திப் பிரவாகத்துடன் பயங்கரமான வெட்டறிவாள் கத்தியில் ஏறி நின்று, கேள்விகளுக்கு அருள் வந்து பதில் கூறுவது முதல் பெண்கள் நம்பிக்கையோடு விரதங்கள் பிடித்து தொழுது ஆடிப்பாடி தம் வாழ்க்கையை முத்துமாரி அம்மனுக்கே அர்ப்பணித்து பணிகின்றனர். பாற்குடம் ஏந்துதல், தீக்குளி என்னும் பூக்குழி இறங்கல் இப்படி எத்தனை எத்தனையோ சமய சடங்காசாரங்கள் அவர்தம் வாழ்வியலோடு இணைந்து காணப்படுகின்றன.

யாழ்ப்பாண கலாசாரத்தை கந்தபுராண–கந்தஷஷ்டி கலாசாரமென்பர் பெரியோர். இதுபோல் கிழக்கு மாகாண கலாசாரத்தை மகாபாரத கலாசாரமென்று கூறும் வழக்கமும் உண்டு. இவ்வகையில் மலையகக் கலாசாரம் மாரியம்மன் கலாசாரமென்றால் அது மிகையாகாது.

மலையக அம்மன் திருத்தல வழிபாட்டுடன் ஒப்பிட்டு நோக்கக்கூடிய மற்றொரு பிரதேசம் வடமேல் மாகாணமாகும். இங்கு இந்திய வம்சாவழியினர் அம்மன் வழிபாட்டில் ஈடுபட்டு திளைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இங்கு அம்மன் வழிபாட்டில் திரௌபதை அம்மன் முக்கியத்துவம் பெறுவதும், மகாபாரத செல்வாக்கு மேலோங்கி இருப்பதும் நோக்கத்தக்கது. வடமேல் மாகாணத்தையொட்டிய நீர்கொழும்பு பகுதியிலும் அம்மன் வழிபாடு மேலோங்கியுள்ளது. நாட்டுக்கோட்டைசெட்டியார் வழிவந்த அறங்காவலர் திரு. பத்மநாதன் செட்டியார் உட்பட திரு. எம். ஏகாம்பரம், திரு. மயில்வாகனம், பி. ஜெயராம் ஆகியோர் இங்கு தெய்வீக திருப்பணிகளை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

## *ஆகம விதியிலான வழிபாடு*

மலையகத்தின் பெருந்தோட்டத்துறை பகுதிகளில் அம்மன் வழிபாடு மேற்குறிப்பிட்ட வகையில் நடைபெறும் வேளையில்; இவ் ஆலயங்களின் வளர்ச்சியாகவும், பல்வேறு தோட்டங்களை இணைக்கும் சந்திப் பட்டணங்களிலும் மலையகத்தின் பிரதான நகரங்களிலும் அமைந்துள்ள பல அம்மன் ஆலயங்கள்; படிப்படியாக வளர்ச்சி பெற்று, இன்று ஆகம விதிப்படி அமைக்கப்பட்ட தேவஸ்தானங்களாகவும் நித்திய, நைமித்திய, காமிகம் எனப்படும் பூசைகளையும் வார உற்சவம் முதல், முக்கிய விசேட தினங்களில் நடத்தப்பட வேண்டிய பூசைகள், கிரிகைகள், திருவிழாக்கள் உட்பட பல திருவிழாக்களையும் சமய சமூகத்திருப்பணிகளையும் இனிதே நிறைவேற்றுவது; பெருமைக்கும் போற்றுதலுக்கும் உரியதாகும்.

திருக்கோயிலின் அமைப்பை பெரியோர் பல்வேறு விதமாக விளக்கிக் கூறுவர். இறைவன் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் வீற்றிருக்கின்றான் என்பதை எல்லா மனிதர்களும் அறியும் தன்மை கொண்டவர்கள் அல்லர். எனவேதான் அடியார்களின் உடலாக ஆலய அமைப்பு கற்பனை செய்யப்பட்டு வெளிப்படையாகக் காட்டப் பெற்றுள்ளதாக சான்றோர் கூறுவர்.

இவற்றை "ஹிருதய கமலப் பிரஸ்தாரம்" "சரீரப் பிரஸ்தாரம்" என இரு வகையாக ஆகமங்கள் கூறும். ஹிருதயப் பிரஸ்தாரமாக அமைக்கப்பட்டிருப்பது சிதம்பரமாகும். பெரும்பாலான ஆலயங்கள் "சரீரப் பிரஸ்தார வகையினைச் சேர்ந்தவையாகும். சரீரத்திலுள்ள ஆறு ஆதாரங்களான மூலாதாரம் ஸ்வாதிஸ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பனவற்றை முறையே கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்நபனமண்டபம், அலங்காரமண்டபம், சபாமண்டபம், ஆகிய வடிவமாகக் கூறுவர்.

நமது ஆலய அமைப்பினை பிரபஞ்சத்தின் மாதிரி உருவம் என்று ஒப்பிட்டும் கூறுவதுண்டு. பஞ்ச பிரகாரங்களைப் பஞ்ச பூதங்களென்றும் அதற்குள் நுண்ணிய பொருளாக இறைவன் உள்ளான் என்றும் விளக்குவர். ஆலயம் என்னும் சின்னத்தின் மற்றொரு பகுதியாக இரதம் விளங்குகின்றது. உடலை இரதம் என்றும் அதில் வீற்றிருப்பவனே ஆத்மா. புத்தி தான் சாரதி. மனமே கடிவாளம். பஞ்சேந்திரியங்களே குதிரைகள். விஷயங்களே அவை செல்லும் இடமாகும்.

கோயிலில் இருக்கும் எல்லாக் கோபுரங்களையும் விட இராஜகோபுரம் உயர்ந்ததாக இருக்கும். ஸ்தூல லிங்கம் என்று கூறப்படும் இராஜகோபுரம் பிரபஞ்சத்திலுள்ள அனைத்தையும் விளக்கும் கோட்பாட்டை உருவகப்படுத்தி விளங்குகின்றது. இன்று மலையத்தில் இவ்வாறு ஆகம விதிகளுக்கமைந்து, இராஜகோபுரம், இரதோற்சவம் முதலியன கொண்ட பல முத்துமாரியம்மன்

திருக்கோயில்கள் உள்ளன. இவற்றுள் தலைநகரையும் உள்ளடக்கிய மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம், கொட்டாஞ்சேனை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம், தட்டாரத் தெரு துர்க்கையம்மன் ஆலயம், நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம், ஆவெலிய ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில், வரக்காப்பொலை முத்துமாரியம்மன் கோயில், கிரிமெட்டிய முத்துமாரியம்மன் கோயில், தெல்தோட்டை முத்துமாரியம்மன் கோயில், டிக்கோயா முத்துமாரியம்மன் கோயில் நீர் கொழும்பு ஸ்ரீ முத்து மாரியம்மன் கோயில் நூரித்தோட்டம் முத்துமாரியம்மன் கோயில் உட்பட வேறு பல ஆலயங்களும் அடங்கும்.

இவற்றுள் மலையத்தில் தலைசிறந்து விளங்கும் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன், நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் கம்பளை ஸ்ரீ முத்துமாரியம்மன், அம்மன்ஆகிய ஆலயங்களில் நடைபெறம் வழிபாடுகளையும் வரலாற்றையும் நோக்கும் போது மலையகத்தில் இன்று ஆகம விதிப்படி விளங்கும் அம்மன் ஆலயங்களின் சிறப்பினைக் காட்டக் கூடியதாக இருக்கும்.

இன்று தேவஸ்தான அந்தஸ்தில் விளங்கும் மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம் ஆதியில் பன்னாகம் என்றழைக்கப்பட்ட சிற்றூரில் சிறு கோயிலாக விளங்கியது என்பர். பல் + நாகம் பன்னாகமாகும். நாக வழிபாடு உலகின் பல பாகங்களிலும் காணப்பட்டது போல் நம் நாட்டிலும் நடைபெற்று வந்துள்ளது. பன்னாகத்தில்; பல தலைகளை உடைய நாகமொன்று இவ் அம்மனை பூஜித்து வழிபட்டதாக ஒரு கர்ண பரம்பரைக் கதை உண்டு. இதுபோல் இவ் அம்மன் சிறுமியாகவும் வேறு பல்வேறு திருக்கோலங்களிலும் காட்சி கொடுத்து, தான் இவ்விடத்தில் எழுந்தருளி அருள் செய்வதாகவும் தனக்குக் கோயில் அமைக்கும்படி கூறியதாகவும் சொல்லப்படும் பல கர்ணபரம்பரைக் கதைகளைப் பெரியோர் கூறக் கேட்கலாம். மலையகத்தில் வடக்கு வாயிலெனத் திகழும் மாத்தளை மாநகர் ஆதியில் "பன்னாகம்" என்று அழைக்கப்பட்ட போது; வடக்கிற்கும் மலைநாட்டிற்கும் செல்லும் "அடிப்பாதை" "கறுத்தை ரோட்டு" ஆகிய வழிகளில் அமைந்த முக்கிய ஊராகும். இவ்வூரில் பண்டு தொட்டு தமிழ்க் குடிகள் விவசாயம், மந்தை வளர்ப்பு, வியாபாரம் ஆகியவற்றைச் செய்து சீரும் சிறப்புடன் வாழ்ந்ததுடன்; சக்தி வழிபாட்டிலும் திளைத்துள்ளனர். அவர்கள் வாழ்ந்த கிராமங்கள் ஆட்டுப்பட்டி, தாம்பரவள்ளி ஆகிய தமிழ் பெயர்களால் அழைக்கப்பட்டதுடன் முருகன் , காளி, பிளைளையார், ஸ்ரீ அழகர் பெருமான், சித்திர புத்திரர், ஸ்ரீ விஷ்ணு, ஸ்ரீ இராமர் ஆகிய தெய்வங்களுக்கும் கோயில் அமைத்து வழிபாடு செய்துள்ளதுடன் யாத்திரிகர்களுக்காக பல மடங்களையும் அமைத்தனர்.

மாத்தளை மாநகர் மஞ்சு தவழ் மலைகளை அரணாகக் கொண்டது. அது சுது கங்கை முதலான தீர்த்தங்கள் பாய்ந்தோடும் சிறப்பினையுடையது. சங்க

இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள குறிஞ்சி, முல்லை மருதம் என்னும் மூவகை நிலங்களையும், வளங்களையும் உள்ளடக்கிய புண்ணியபூமி. தேயிலையும் இரப்பரும் செந்நெல்லும் முக்கனிகளும் தென்னை, கமுகு, கொக்கோ கோப்பி, மிளகு, மூங்கில் என்னும் பயிர் சோலைகள் நிறைந்து இரத்தினங்கள் தத்திக்கும் திவ்விய பூமி.

இத்தகைய சிறப்புகள் ஒருங்கே அமையப்பெற்ற மாத்தளை நகரில் அன்னை முத்துமாரி குற்றாலம் என ஏழு அருவிகள் கொட்டும்; குஞ்சரம் சாய்ந்தது போல் உருவுடைய அழகுமலைக் குன்றுகளுக்குக் கிழக்கே கோயில் கொண்டருளியுள்ளாள்.

மலைநாட்டில் அமைந்த பெருந்தோட்டங்களுக்கு வந்த மக்கள், மலையகத்தின் வடக்கு வாயிலெனத் திகழும் மாத்தளை நகரில் அன்று சிறு குடிலில் அமைந்திருந்த இவ் அம்மனைத் தொழுது, இப்பகுதியில் ஓய்வெடுத்து,பின்னர் நம்பிக்கையோடு மலையத்தின் பல பகுதிகளுக்கும் சென்றுள்ளனர். இவ் ஆலயத்தின் வளர்ச்சியினையும், இவ் வளர்ச்சிக்காக அருந் தொண்டாற்றிய அடியவர்களினதும்; சமூகங்களினதும்; அளப்பெரும் சேவைகளை ஆலயத் திருப்பணியோடு ஒட்டிய தனிநூலில் சிறப்பித்துப் போற்றவிருப்பதால், இந்நூலில் அவை இடம் பெறாமல், அம்மனின் வழிபாடும், வழிபாட்டுடன் தொடர்புடைய வரலாறும் விபரிக்கப்படுகின்றது.

ஒரு தேசப்படத்தை நம் மனம் போன போக்கில் எப்படி வரைய முடியாதோ, அவ்வாறே ஓர் ஆலயத்தின் அமைப்பு விதியையும் நம் விருப்பம் போல் மாற்ற முடியாது. இது போலவே நம் ஆலயங்களில் கையாளப்படும் கிரியைகளும் தத்துவத்திற்கு விளக்கமாக அமைந்துள்ளன. மாத்தளை ஸ்ரீ முத்துமாரிம்மன் ஆலயத்தில் இவ்விரண்டும் ஆகமவிதிப்படி நடப்பது குறிப்பிடத்தக்கது. நித்திய பூசையான காலை திருவனந்தல் பூசை முதல் சாயரட்சை பூசை, சாம பூசை ஆகிய நித்திய உற்சவங்கள் கிரமமாக நிறைவேற்றப்படுகின்றன. வார உற்சவம், விசேஷ தினங்களில் உற்சவங்களும் சிறப்பாக நடத்தப்படுகின்றன. முக்கிய விசேஷ தினங்களான தைப்பொங்கல் தைப்பூசம், நவராத்திரி உற்சவம், கந்தசஷ்டி உற்சவம் என்பன சிறப்பாக நடத்தப்படுகின்றன.

இவ் ஆலயத்தில் சித்திரை வருடப்பிறப்பு; விசேட பூஜையுடன் உள் வீதி பவனியோடும், சித்திரா பூரணை ஸ்ரீ சக்ரயந்திர பூஜை, இரவு உள் வீதி பவனியுடனும் நடைபெறுகின்றது. ஆனியில் ஸ்ரீ மாணிக்கவாசகர் குருபூஜை, இரவு உள்வீதி பவனியுடனும் நடைபெறுகின்றது. ஆனியில் ஸ்ரீ மாணிக்கவாசகர் குருபூஜையும் ஆனி உத்தரமும் காலை 6.00 மணிக்கு நடேசபிஷகமும் இரவு உள்வீதி பவனியும் இடம் பெறும். ஆடி மாதத்தில் ஆடிவேல், ஆடிப்பூரம் ஆகிய பூஜைகள் சிறப்பாக நடத்கப்பட்டு உள்வீதி பவனியும் நிகழ்த்தப்படும். இவ் ஆலயத்தின் உற்சவ விஞ்ஞாபனத்தை நோக்கும் போது பூரணை தினத்தன்று ஸ்ரீ சக்ர யந்திர பூசை

முறையாக நடைபெறுவது தெரிய வரும். ஆவணியில் விநாயக சதுர்த்தி ஸ்நபனாபிஷேகம், ஸ்ரீ முத்துமீனாட்சி சமேத சோமசுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் உட்பட உள்வீதி பவனியும் இடம் பெறுகின்றது.

புரட்டாதி நவராத்திரி விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுவதுடன் காலை எட்டு மணிக்கு நூற்றெட்டு சங்காபிஷேகமும் நடைபெற்று, மாலை ஐந்து மணிக்கு ஸ்ரீ சக்ர யந்திர பூஜை, மாலா மந்திர ஓமம், தீபாரதனையும் நடைபெறுகின்றன. இவ் உற்சவத்தில் ஒன்பதாம் நாள் மகிடா சூரசம்சார உற்சவம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. வடமாகாணத்தில் நல்லூர் வீரகாளி அம்மன் கோயில், திண்ணைவேலை பத்திரகாளி அம்மன் கோயில் ஆகிய இரண்டில் நடைபெறுவது போல் இது இங்கு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. மலையகத்தில் பிற ஆலயங்களில் இவ்வாறு நடைபெறுவதாகத் தெரியவில்லை. மகிடாசுரனின் காட்டெருமை வடிவத்திற்காக ஆலயங்களில் வன்னி மரம் அல்லது வாழை மரத்தை நாட்டி அதனை வெட்டி மகிடாசுரனைத் தேவி சங்காரித்ததாகப் பாவனை செய்து திருவிழா செய்வர். இது விஜயதசமி அன்றே நடைபெறுவது வழக்கம். "மானம்பூ" திருவிழா எனப்படும் இது ஆன்மாக்களை அநாதியாகவே பிடித்துவரும் ஆணவ மலத்தை அழிப்பது என்னும் தத்துவ விளக்கத்தைக் கொண்டது. புரட்டாதி சனீஸ்வர மகாயாகம், ஐப்பசியில் சுமங்கலி தீப பூஜை, கேதாரகௌரி விரதத்தின் லட்சார்ச்சனை, நூற்றெட்டு சங்காபிஷேகம், சதுஷ்சஷ்டி உபகார பூஜை, லட்சார்ச்சனை ஓமம், ஸ்ரீ சக்ர யந்திர பூஜை, அர்ச்சனை ஓமம் என்பன மிகச்சிறப்பாக நடைபெறுகின்றன.

கேதார கௌரி விரத லட்சார்ச்சனை, விரத நூல் வழங்கல், கந்தஷஷ்டி சூரசம்சாரம் என்பன மக்கள் வெள்ளமென திரள நடைபெறும் உற்சவங்களாகும்.

ஸ்ரீ வள்ளி தேவசேனே சமேத சண்முகர் திருக்கல்யாண உற்சவம் என்பன ஐப்பசியில் நிகழ்த்தப்படுகின்றன. சண்முகர் அபிஷேகம் குமாராலய தீபம் என்பனவற்றுடன் கார்த்திகையில் விநாயக ஷஷ்டி 21 நாள்கள் நடப்பதுடன் இருபத்தியொரு நாள்களும் தினசரி காலை பத்துமணிக்கு நூற்றியெட்டு சங்காபிஷேகமும் மாலையில் லட்சார்ச்சனையும் நடைபெறுகின்றன. அத்துடன் கணபதி ஓமம் , அதிகாலை திருவெம்பாவை பூஜை, மாலை சோமவார பூஜை என்பனவும் சிறப்பாக நடைபெறுகின்றன.

மார்கழியில் திருப்பள்ளி யெழுச்சி பூஜை, சுவர்க்க வாயில் ஏகதாசி விஷேட பூஜை, அதிகாலை திருவாதிரை நடேசர் அபிஷேகம், ஆர்த்திரா தரிசனம் ஆகிய உற்சவங்கள் நடைபெறுகின்றன. தைமாதத்தில், தைப்பூசம் தைப்பொங்கல் ஆகிய உற்சவங்களும் நூற்றியெட்டு சங்காபிஷேகமும் உள்வீதி பவனியும் இடம் பெறுகின்றன.

பஞ்சரதம் அசைந்து வர பாவையர்கள் வடம் பிடிக்க மஞ்சு தவழ்மாத்தளையில் மாசிமகம் சிறந்திடும் என்னும் கவிஞர் கூற்றுக்கொப்ப , மாசிமக இரதோற்சவம் மலையகத்தில் மட்டுமன்றி இலங்கை முழுவதிலும் நடைபெறும் தேர்த்திருவிழாக்களுக்கு தலையானதாக இவ் ஆலயத்தில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

நித்திய பூஜைகளில் குறைபாடுகள் இருந்தாலும் நீக்கும் பொருட்டு நைமித்திய எனப்படும் பிரும்ம உற்சவம் (மாசிமகோற்சவம்) நடைபெறுவது வழக்கமாகும். இவ் ஆலயத்தில் இது மாசி மகோற்சவமாக நடைபெறுகின்றது. இந்த உற்சவம் ஆகம முறைப்படி நடக்கும் முத்துமாரியம்பாள் பூசையாகும்.

துவஜாரோகணம் கர்மாரம்பம் சாந்தி முதலியன நடைபெற்றுத் துவஜ ஊர்வலம் (கொடி) மாசிமக கொடியேற்றம்; (துவஜாரோகணம்) மாலையில் ஸ்தம்பபூஜை வெளிவீதி உற்சவம் என்பனவற்றுடன் மாசி மகோற்சவம் ஆரம்பமாகி கொடி இறக்கத்துடன் இருபத்தி ஐந்து தினங்கள் நடைபெறம். கொடியேற்றம் படைக்கும் தொழிலைக் குறிக்கும் வேட்டை திருவிழாவரை நடக்கும் திருவிழாக்கள் காத்தல் தொழிலையும் பஞ்ச இரதோற்சவம் அழித்தல் தொழிலை அதாவது ஆணவம் முதலான மலங்களை அழிக்கும் தொழிலைக் குறிக்கும். அருளல் தீர்த்த உற்சவத்தையும், கொடி இறக்கம் மறைத்தல் தொழிலையும் குறிக்கின்றன. இவை யாவும் இவ் ஆலயத்தில்; ஆகம விதிமுறைப்படி சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாலயத்தில் நடைபெறும் மகோற்சவம், மாசி மகமாகும் மாசி மகத்தில் பஞ்ச ரதோற்சவம் தேர் வெளிவீதி உற்சவமாகும். மாசி மகத்தின் சிறப்பினை பின்வருமாறு கூறலாம் தக்கன் உமாதேவியாரை மகளாகப் பெற தவஞ்செய்து வரம் பெற்றிருந்தான். எனவே அம்பிகை "காளிந்தி" நதியில் ஒரு தாமரைப் பூவில் வலம்புரிச் சங்கு வடிவாய் இருந்தாள். மாசிமகத்தன்று தக்கன் வேதவல்லியுடன் நீராட வந்த போது, வலம்புரிச் சங்கைக் கண்டு எடுத்தான். அச்சங்கு அழகிய பெண் குழந்தையாக மாறியது. உமையே குழந்தையாக வந்த தினமான மாசிமகத்திலேயே இங்கு பெருவிழா நடப்பது குறிப்பிடத்தக்கது.

இப்பஞ்ச ரதபவனியில் அம்பிகை சித்திரத் தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாளிக்கின்றாள். பஞ்ச இரதங்களும்; மாத்தளை நெடும் வீதியில் பூரணகும்பம், மாவிலை, தென்னோலை, கமுகு வாழை தோரணங்கள் அசைந்தாட, பக்தர்களின் அரோகா கோஷம் எழுந்து எட்டுத்திக்கையும் நிறைக்க; அடியார்களின் கூட்டுப்பிரார்த்தனைகள், பக்திப் பாடல்கள் தெய்வீகக் கானமாக செவிகளில் பாய பக்தர் கூட்டம் வெள்ளமெனத் திரண்டு, அமிழ்தாம் அவள் அழகில் புரண்டு; அருள் மிகு மாத்தளை ஸ்ரீ முத்து மாரியம்மனால் ஆட்கொள்ளப்பட்டு திளைக்க பவனிவருவதைக் காணலாம்.

இத் திருவிழா மலையக ஆலயங்களிலே சிறப்பாக அமைந்துள்ள பஞ்ச முக விநாயகப் பெருமானுக்கு ஐந்து தினங்களும்; முத்துக் குமார சுவாமி முருகப் பெருமானுக்கு அடுத்து ஐந்து தினங்களும் முத்து மீனாட்சி சமேத சோம சுந்தரேஸ்வரருக்கு ஐந்து தினங்களும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு பத்து தினங்களும் நடைபெறுவதுடன் பூங்காவனத்திருவிழா அன்று இருபத்தி ஆறாம் நாள் தனித்திருவிழாவாக சண்டேஸ்வரி உற்சவமாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. இவற்றுடன் பிராயச் சித்தம், அபிஷேகமும் வைரவர் பூசையும் நடைபெறுவது வழக்கமாகும்.

இவ் அம்மனைத் தரிசித்து அருளைப் பெற இந்துக்கள் மட்டுமன்றி, பௌத்தர்களும் பிற சமயத்தவர்களும் வந்து துதிப்பதை இங்கு காணலாம். இந்தக்கள் மங்களகரமான பழம், தேங்காய், வெற்றிலை, பாக்கு சுகந்த பொருட்கள் மாலை பட்டு, ஆகியன அடங்கிய பூஜைத்தட்டை வழங்கி அர்ச்சனை செய்ய சிங்கள பௌத்தர்கள் இளநீர் பால் ஒன்பது வகையான பழங்கள், தென்னங்கன்று ஆகியவற்றை வழங்கி அர்ச்சித்து வேண்டி நிற்கின்றனர். இவர்கள் மகப்பேறு கிடைக்கவும் நோய் நொடியிலிருந்து நீங்கவும் வெள்ளி ரூபத்தை நேர்த்திக்கடனாக செலுத்த வேண்டி நம்பிக்கையோடு வழிபடுகின்றனர். பக்தர்கள் காவடி, கரகம் எடுத்து அலகு பூட்டி வழிபடுவதுடன் தீமித்தும் தம் பக்தியினை வெளிப்படுத்துகின்றனர். கொடிய வெம்மை ஏற்பட்டு அம்மை தீவிரமாக பார்க்கும் போது வேப்பிலைத் தேர் இழுப்பது வழக்கமாகும். இவ் அன்னையின் மகிமைக்குச் சான்றாக எண்பத்தி மூன்று இனக்கலவரத்தின் போது ஆலய சித்திரத்தேரை எரித்த கொடியவன் சில வருடங்களின் பின்னர். ''தெய்வம் நின்று கொல்லும்'' என்பதற்கொப்ப ஆலயத்திற்கு முன்னாலேயே துடிதுடித்து இறந்த சம்பவம் சான்றாகும். இதன் பின்னர் புதிய சித்திரத் தேர் அமைக்கப்பட்டு வீதி வலம் வருகின்றது.

ஆகம விதிப்படி அமைந்த ஆலயங்களில் நடக்கும் கிரிகைளில் காமிகம் எனப்படுவதும் முக்கியமானதாகும். கர்மிகம் எனப்படுவது கும்பாபிஷேகம் இவ்வாயத்தில் கும்பாபிஷேகமும் முறையாக நடைபெறகின்றது.

இவ் ஆலயத்தில் வடக்கு பார்த்த மூலஸ்தானத்தில் அம்பாள் கருணை வடிவாக வீற்றிருக்கின்றாள். அம்பாளின் திருவுருவத்தோடு அமைந்த பீடப்பகுதி தனிப்பெரும் பாறையாக பூமியோடு இருப்பதாக பெரியோர் தகவல் கூறுகின்றனர். முன்பு இவ் ஆலயத்திற்கு வெளியே உயிர்ப்பலி கொடுக்கப்பட்டதாக தெரியவருகின்றது. தற்போது இது நிறுத்தப்பட்டு பூசணிக்காய் வெட்டப்படுகின்றது.

இவ்வாலயத்தில் இராஜ கோபுரத்துடன், மணிக்கோபுரம் கல்யாண மண்டபம், தீர்த்தக்கேணி வாசிகசாலை என்பனவும் அமையப்பெற்றள்ள.

மலையகத்தில் முதலில் அறநெறி பாடசாலையை தோற்றுவித்த பெருமை இவ் ஆலயத்தையே சேரும். தேவஸ்தானம் இந்து சமய மாணவர்கள் நன்மைபெறும் வகையில் புலமைப்பரிசில் உட்பட வகுப்புகளையும் நடாத்தியும் கல்விப் பணிபுரிவதுடன் தமிழக நம்நாட்டு பெரியோர்களை அழைத்து சமய சொற்பொழிவுகள், பட்டிமன்றங்கள் வழக்காடுமன்றங்கள் என்பனவற்றை நடத்தி அறிஞர்களை கௌரவித்து பாராட்டியும் வருகின்றது. நம் நாட்டின் இந்து ஆலய நிர்வாக வரலாற்றில் இவ் ஆலயத்திற்கான நீதிமன்ற கட்டளைக்கிணங்க ஏற்படுத்தப்பட்ட முகாமைத்துவ திட்டத்தின் எழாம் சரத்து இந்து ஆலயம் ஒன்றினை பரிபாலனம் செய்யும் பரிபாலன சபையின் உறுப்பினர் இந்துவாக இருக்க வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றது.

இவ்வாலயத்தில் கர்ப்பக்கிரஹத்துடன் மகாமண்டபம் அர்த்தமண்டபம், வசந்தமண்டபம் என்பன அமைந்துள்ளமை போன்று சாஸ்திரிய முறையான கொடிமரம் 9துவஜஸ்தம்பம்) தாமிர உலோகத்தால் செய்யப்பட்டு மேலே வெள்ளிப்பூச்சு பூசப்பட்டு அமைக்கப்பட்டள்ளது. மூலஸ்தான கோபுரத்துடன் பஞ்சமுக விநாயகர், காசியிலிருந்து எடுத்துவரப்பட்டு பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ள சுயம்புவான லிங்கம்; முருகப்பெருமான், ஸ்ரீ விஷ்ணுவின் அனந்த சயனம், சரஸ்வதி துர்க்காதேவி, மகா இலட்சுமி, சந்திசேகரர், சண்டேஸ்வரர், நடராஜ பெருமான், கறுப்பண்ணசாமி, மதுரை வீரன், வைரவர், நவக்கிரகங்கள் மீனாட்சி அம்பிகை, நந்தி நடராஜா சந்நிதானம் நான்கு நாயன்மார்கள் ஆகியனவும் சாஸ்திர முறைப்படி அமைக்கப்பட்டு அருள் பாலிக்கின்றனர்.

தற்போது சிவநெறி செம்மல் த. மாரிமுத்துச் செட்டியார் தலைமையில் அமைந்துள்ள தேவஸ்தான பரிபாலன சபையினர், நூற்றெட்டடி இராஜகோபுரம்; வடக்கு வெளி வீதி என்பனவற்றை அமைக்கும் திருப்பணியில் ஈடுபட்டுள்ளனர். இத் திருப்பணி இனிதே நிறைவேற அம்பாளின் அனுக்கிரகத்தை வேண்டித் துதிப்போம். அனைத்துப் பொருள்களையும் தாய்மை நிலையில் எண்ணி போற்றி வழிபட்டுபாடித் துதிப்பது நம்பண்பு. அருள் புரியும் அத்தாய்மை நிலையை வியந்து புலவர்கள் பாடி அருள் பெற்றுள்ளனர். வால் மீகி, காளிதாசர் கம்பர், அபிராமிபட்டர், குமரகுருபர், சிவப்பிரகாசர், சுக்கிரர், தாகூர் மகாகவி பாரதி ஆகியோர் சக்தியைப் பாடித்துதித்துள்ளனர்.

அபிராமி அந்தாதியில் "சித்தியுஞ் சித்திதருந்தெய்வமாகித் திகழும் பராசக்தி" என்று அபிராமி பட்டரும்

*யாதுமாக நின்றாய் காளி*
*எங்கும் நீ நிறைந்தாய்*

*தீது நம்மையெல்லாம் நின்றன்*
*செயல் களன்றியில்லை"* – என்று
மகாகவி பாரதியும் பாடியருளினர். பழந் தமிழ் இலக்கியங்கள் முதல் நாட்டுப் புறப்பாடல்கள் வரை மக்கள்; சக்தியை, அம்மனை பல்வேறு சொரூபங்களில் கண்டு பாடியயுள்ளமையினைக் காண்கின்றோம். இதுபோல் அம்மனைப்பற்றியும் சக்தியைப் பற்றியும் பராசக்தி அகவல்; மாரியம்மன் தவநிலை, மாரியம்மன் அகவல், மாரியம்மன் காவியம், பூங்காவனத்தாயார் தாலாட்டு, சிவமுத்துமாரி தாலாட்டு, மாரியம்மன் ஊஞ்சல் மாரியம்மன் திருக்குளிர்த்தி மாரியம்மன் திருக்குளிர்ச்சி மாரியம்மன் வீதியுலா, மாரியம்மன் அம்மானை ஆடல், மாரியம்மன் குளிர்ந்தருளல் மாரியம்மன் வாழிப் பாடல்கள் கடனாச்சியம்மன் காவியம், கடல் நாச்சிமார் பள்ளு, கண்ணகை அம்மன் பிரார்த்தனை. கண்ணகை அம்மன் காவியம், கண்ணகை அம்மன் அகவல், கண்ணகி தோத்திரம், கண்ணகி அம்மன் மழைகாவியம், கறுப்பாயி தோத்திரம், காமாட்சி தோத்திரம், மீனாட்சி தோத்திரம், பேச்சியம்மன் துதி, பேச்சியம்மன் அகவல், பேச்சியம்மன் தாலாட்டு திரௌபதி அம்மன் துதி, திரௌபதி அம்மன் புலம்பல் காளியம்மன் பஞ்சகம் காளியம்மன் தாலாட்டு பத்திரகாளி அகவல், அங்காள பரமேசுவரி தோத்திரம் கடல் நாச்சியம்மன் சுளுத்தி, தேவி திருப்புகழ் என பல பாடல்கள் இய்றறப்பட்டுள்ளன. மேற்குறிப்பிடப்பட்டவை பெரும் பாலும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவைகளாகும்.

*"ஐவரையும் காத்தது போல தாயே வண்ணமகளே துரோபதை நாயகமே அனைவரையும் காருமம்மா"*
*"பஞ்சவரைக் காத்தது போல் வண்ணமகளே துரோபதை நாயகமே பாலகர்களைக் காருமம்மா"*– என்நு திரௌபதை அம்மன் தாலாட்டிலும்.
*கரகத்துக் குள்ளிலிருந்து பள்ளயச் பேச்சி தாயே கண்காட்டி கூப்பிடம்மா*
*வாறாளாம் வாறாளம் பள்ளயப் பேச்சி*
*மக்களுக்கு வரம் கொடுக்க*
என்ற பேச்சியம்மன் தாலாட்டுவரிகளும் மலையகத்தில் பாடப்படும் மாரியம்மன் தாலாட்டு போல் உயர்ந்த கல்வி இல்லாதோருக்கு எளிதாகப்பாடக் கூடிய சந்தத்தில் அமையப் பெற்றுள்ளன.

"மாரிமகமாயி எங்க முத்துமாரி மணி மந்திர சேகரியே எங்க முத்துமாரி என்ற மலைநாட்டுப்பாடலும் இதனைப் போல் அமைந்துள்ளது.

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியின் அருளை வியந்து போற்றி பல கவிஞர்கள் பாடியுள்ளனர். இவற்றுள் உயர்திரு முருகேசபிள்ளை அவர்கள் பாடிய மாத்தளை பன்னகாமம் அருள்மிகு ஸ்ரீ முத்து மாரி அம்பாள் பதிகம் – அந்தாதி – ஊஞ்சல் என்னும் நூலும் ஒன்றாகும்.

## காளி, காளியம்மன், கொற்றவை ,பத்தினித்தெய்வம், பகவதி

உலகுயிர் தன்னை எளிதில் அறியும் பொருட்டு இறைவன் இரண்டு பிரதான திருவுருவங்களை கொள்கின்றான். இவை ஆண், பெண் என்பனவாகும். ஆண் உருவைப் புருடன் ஈஸ்வரன், சிவன், திருமால் என்றும் பெண் உருவைப் பிரகிருதி, இயற்கை, சக்தி அன்னை என்றும் கூறுவர். உலகுயிரை ஈன்ற அன்னை தானும் தன் திருப்பணிக்கு அனுகூலமாகத் திருவுருவங்கள் பலவற்றை தாங்குகின்றான். இவற்றுள் மகாகாளியும் ஒன்றென்பர். அன்புக்கும் அருளுக்கும் பாத்திரமான காளி, சொல்லரிய வேகமும் தீரமும் ஆற்றலும் உடையவள் தடைகளைத் தகர்த்தெறிந்து விரோதிகளை தவிடு பொடியாக்கி விடுவாள் அவள் கால சக்தி.

சங்க இலக்கியங்கள் துர்க்கை, காளி வடிவங்களைப் பற்றி கூறுகின்றன கொற்றவை என்ற துர்க்கை வடிவம் வெற்றியைத் தரும் தெய்வமாகக் கருதப்படுகிறாள் சங்க இலக்கியம் "பழையோள்" என்ற பழமையான காளியைப் பற்றி கூறுகிறது.

காளி காட்டில் இருப்பதால் காடுகாள் என்று கூறப்படுகின்றது. கொற்றவை நிலை என்று தொல்காப்பியம் விளக்குகின்றது. சிலப்பதிகாரத்தில் வேட்டு வரியில் கொற்றவை பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. பரணி இலக்கியங்களிலும் காளி பற்றிய செய்திகள் உள்ளன. சோழர் காலத்தில் காளியம்மன் வழிபாடே; தஞ்சையில் உயர் சமய மரபிற் சிறப்புற்று விளங்கியது என்பர். இங்கு வடபத்ரகாளியம்மன், காளிகா பரமேஸ்வரி முதலான ஆலயங்கள் சிறப்பங்களில் சிறந்து விளங்கின.

காளி என்பதற்கு கரிய நிறத்தையுடையவள். பகைவர்க்குக் காளம் என்னும் நஞ்சு போன்றவள் என்பதால் காளி என்னும் பெயர் அவளுக்கு அமைந்தது என்பர் காளி மந்திரங்களுக்குத் தலைவியாக விளங்குகின்றாள். மாந்திரிகர் இவளைக் குறித்து தவம் இயற்றி மந்திரக் கோலையும் மந்திரப் பதவியையும் பெறுவர். காளி வழிபாடு இந்தியா, இலங்கை முழுவதும் பரந்துள்ளது. காளியை இடங்காளி, அங்காளி, அழகிய காளி, இராஜ காளி, காடுகாளி, பத்திரகாளி, மகா காளி ஏழு முகக்காளி, ரௌத்திரகாளி , சுவணர்ணகாளி, இளங்காளி, கடுங்காளி காளிகாம்பாள் என்னும் பெயர்களில் வழிபடுகின்றனர்.

இது 1922 ஆம் ஆண்டே வெளிவந்ததாகத் தெரிய வருகின்றது. கயமுக தேவனே என்று பிள்ளையாருக்கு ஆசிரியர் விருத்தத்தில் காப்பு செய்யப்பட்டுள்ள இப் பதிகம், மரபிற்கமைய பத்துப்பாடல்கள் அமைந்து வாழி என்னும் வாழ்த்துப் பாடலுடன் முடிகின்றது. முத்து மாரியம்மை பேரிற் பாடிய அந்தாதி வினாவிடந்தாதியாக நூற்றியெட்டுபாடல்களுடன் திகழ்கின்றது. இதில் இறுதி எட்டுப்பாடல்களும் பிரார்த்தனை வாழி பாடல்களாகும். அம்மன் பேரில் பாடப்பட்டுள்ள ஊஞ்சல்; காப்பு பாடப்பட்டு; பத்துபாடல்களுடன் விளங்க ஈற்றில் முத்துமாரியம்மன் பேரில் எச்சரிக்கை என்றும், கடைசிப்பகுதியாக; பராக்கு பத்து குறட்பாக்களாகவும் பாடப்பட்டுள்ளது.

மாத்தளையில் வாழ்ந்த நவாலியூர் கவிஞர் க. சொக்கநாதன் மாத்தளை முத்துமாரியம்மன் குறவஞ்சியைப் பாடியுள்ளார். ஆயிரத்திதொளாயிரத்து அறுபத்தி நான்காம் ஆண்டு இந்நூல் பிரசுரமாகியுள்ளது. அன்னை முத்துமாரி உலாவரும் போது ஆணவம், கன்மம் ஆகிய மலங்களையுடைய, பிரளாயாகளனான செட்டி ஒருவன் அம்பிகைமீது காதல் கொள்கின்றான். இறைவனிடம் தன்னைச் சங்கமம் ஆக்கிக் கொள்ளும் ஒரு உயர்ந்த நோக்கத்தை மறைமுகமாகக் கூறும் இந்நூலில் விருத்தம் கண்ணி, அகவல் சிந்து கும்மி, கலிப்பா வெண்பா போன்ற பாவகைகள் நயச்சுவைகளுடன் கையாளப்பட்டுள்ளன. மாத்தளை முத்துமாரியின் தேர் வடத்தை பெண்கள் கூடிபிடித்திழுத்து மகிழ்வர். இந்நூலில் பெண்களை சனம் விலத்தவிட்டு புதுமை செய்திருக்கும் கவிஞர் சொக்க நாதன் அம்பிகையின் மீது கொண்ட பக்தியை முத்துமாரிம்மன் குறவஞ்சியாகப்பாடி மகிழ்ந்துள்ளார். தமிழ் நாடு ருக்குமணி பாலா இயற்றிய அகரப்பாடலான "உடுக்குச் சத்தம் கேட்குதம்மா என்ற பாடலை 1976 .ல் இவ் ஆலயத்திருவிழாவில் ஆன்மீக அருளுரை நிகழ்த்திய ஞானசுரபி நா. உமா சரஸ்வதி இசையமைத்துப் பாடியுள்ளார். காலத்திற்குக் காலம் மாசி மக இரதோற்சவம் நடைபெறும்; வேளைகளில் வீரகேசரி, தினகரன் ஆகிய தேசிய செய்தி இதழ்களில் விஷேட மலர்கள் வெளியிப்பட்டுள்ளன. இவைகளிலும் ஆலய கும்பாபிஷேகம் , சித்திரத்தேர் மலர் என்பனவற்றிலும் நம்நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர்கள் கவிஞர்கள் கட்டுரைகளையும், கவிதைகளையும் வாழ்த்துச் செய்யுள்களையும் தனிப்பாடல்கள் பலவற்றை எழுதியுள்ளனர். இவ் அம்மனின் புகழ்பாடும் மெல்லிசைப் பாடல்களும், ஒலிப்பேழைகளும் வெளிவந்து இலங்கை வானொலியிலும் ஒலிபரப்பாகின்றன. மாத்தளையில் கோயில் கொண்டு மாதளையாகிய பிறவித்துன்பத்தை போக்கும். அன்னை முத்துமாரியின் அருள் அனைவருக்கும் கிடைப்பதாக.

சோழர் காலத்தில் காளியை நிசும்பசூதனி, நிசும்பசும் பமர்த்தினி என்னும் பெயர்களில் அழைத்து வழிபட்டனர். சோழச் சிவனுக்கென்று அமைத்த கோயில்களில் காளிக்கென்று தனிச் சந்நிதியையும் உண்டாக்கினர். இதனை நாம் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் முதல் பொலனறுவை சிவன் கோயில்வரை, காணக் கூடியதாக உள்ளது.

ஆதியில் காளிகோயில்கள் சுடுகாட்டின் மையத்திலே விளங்கி வந்தன. பின்னர் இவை ஊரின் வடக்கே அமைக்கப்பட்டன பின்னர் மாசி அமாவாசை நாளில் சுடு காட்டிற்குச் சென்று கொள்ளையிடும் விழா வினை நடத்தினர். பல்லவர் காலத்தில் மகிடாசுரமர்தனியின் வடிவம் தமிழ் நாட்டில் வணங்கப் பெறுவதாயிற்று. மாமல்ல புரத்திலும் இதனைக் காணலாம். சோழமன்னனான விஜயாலயன் நிசும்பாசுரமர்த்தினி கோயிலை தஞ்சையில் எழுப்பினான்.

பரணி நட்சத்திரம் காளியம்மையின் நட்சத்திரமாகும். ஊர்ப்பிடாரிக்கும் மணியம்மை என்ற பெயர் சில இடங்களில் வழக்கில் உண்டு. பண்டைத் தமிழகத்தில் ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு வகையானகூத்து இருந்துள்ளது. இதில் காளிக்கு அல்லது துர்க்கைக்குரிய ஆடல் மரக்கால் ஆடல் என்பதாகும். "அசுரர்கள் போரின் போது தேளும், பாம்புமாக மாறி மாறி நலியத் தொடங்கினார்களாம்." அவற்றின் மேல் மரக்கலை உருட்டிக் கொண்டு கூத்தாட தொடங்கினாளாம் காளி.... அவை கூழாய் மடிந்தனவாம்.

இதுவே காளி அசுரர் வாட அமரர்க்கு ஆடிய கூத்தாகும். இதனைப் பாலை நிலத்தில் வாழ்ந்த வேடர்கள் சிறப்பாகக் கைக்கொண்டு ஆடினர். பாலை நிலக்கடவுளாக கொற்றவை விளங்கினாள். வேடர்கள் இவ்வாறு ஆடும்போது பாடுவர். அந்தக் கூடத்துப் பாட்டிற்கு வேட்டுவ வரி என்று பெயர் வேட்டுவப் பெண்டிர் கொற்றவை போல ஆடும் கூத்தே வேட்டு வரிக் கூத்தாகும். அப்போது பாடும் பாடலே வேட்டுவ வரியாகும் என்பார் அடியார்க்கு நல்லார்.

சங்க காலத்தில் வீரர்கள் காளிக்கு களவேள்வி இயற்றியுள்ளனர். சுடுகாட்டில் வாழ்ந்த காளியைச்சுற்றி கூளிகள் எழுந்துள்ளன. பேய்களே கூளிகளாகும். தவசிகள் தலை மறைவாக காடுகளிலும் சுடுகாடுகளிலும் வாழ்ந்த போது மக்கள் அவர்களை பேய் என்று இகழ்ந்தனர். இதனால் அவர்களும் தம்மை பேய் என்றனர். கானாக்கால் பேய் என்று தம்மைக் கூறிக் கொண்ட காரைக்கால் அம்மையார் போன்றோரை இவ்வகையில் காண்கின்றோம். பத்ர காளியின் நெடிய

உருவம் கொண்ட காளி கோயில்; திருக்கழுக்குன்றம் தாழக் கோயிலில் அமைந்துள்ளது. காளி இறைவனோடு நடனம் ஆடித்தோற்ற இடம் திருவாலங்காடு ஆகும். இங்குள்ள காளி நடனமாடும் நிலையில் உள்ளாள். சிலப்பதிகாரத்திலும் காளி பற்றிய செய்திகள் வருகின்றன. சப்த மாதர்களுள் அறுவர்க்கு இளைய நங்கை தாரகன் மார்பகம் கீண்ட பெண் என்று போற்றப்படுகின்றாள்.

இலங்கையில் அருளாட்சியினாலும், மாட்சியினாலும் பிரசித்திப் பெற்ற பல காளி, காளியம்மன் ஆலயங்கள் உள்ளன. இவற்றுள் சில மலையகத்தில் விளங்குகின்றன. நல்லூர் வீரமாகாளி கோயில், திருகோணமலை பத்திரகாளி கோயில், சிலாபம் முன்னேசுவரம் பத்திரகாளி கோயில், முகத்துவாரம் காளி கோயில், மயூரபதி காளி கோயில், உடப்பு பத்திர காளி கோயில், ஏறாவூர் பத்திரகாளி கோயில், மாத்தளை சுதுகங்கை ஏழுமுகக் காளி கோயில், வீர முனை பத்திர காளியம்மன் கோயில் என்பன முக்கியமானவைகளாகும்.

வடமேல் மாகாணத்தில் சிலாபத்தில் முன்னேசுவரம் ஆலயத்தையொட்டி அமைந்திருக்கும் ஸ்ரீ பத்திரகாளி கோயில் இன்று பிரமாண்டமான முறையில் திருப்பணி செய்யப்பட்டு வருகின்றது. இங்கு இந்துக்கள் மட்டுமன்றி பல சமயத்தவர்களும் சென்று நேர்த்திக்கடன் செலுத்தி வழிபட்டு வருகின்றனர். அருள்மிகு இவ் அன்னையின் அருளைப் பெற பக்த கோடிகள் தினமும் வந்து திரளுவது கண் கொள்ளாக் காட்சியாகும். இவ் ஆலய அறங்காவலர் திரு. காளி முத்து லெட்சிராமணியின்சேவை போற்றுதற்குரியது.

மாத்தளை சுதுகங்கை வேரகமவில் அமைந்திருக்கும் ஏழுமுகக் காளியம்மன் அருளாட்சிமிக்கவள். இவ் அன்னை ஏழுமுகமாகத்திகழ்வது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு சிவகங்கையிலிருந்து பிடிமண் கொண்டு வந்து இவ் அம்மனை நிலைநிறுத்தியதாகக் கூறுவர். திருடரிடம் பொருள்களை பறி கொடுத்தோரும் வேறு நேர்ச்சைக்குரியோரும் இங்கு வந்து காசு வெட்டிக்கட்டி பயன் பெறுவர். இவ் அம்மன் ஆலயத்தில் அமைந்துள்ள இளம் தென்னையில் பாளை பூவின்றி காயாகவே வெளிப்பட்டு காய்த்து குலுங்கும் அற்புதத்தைக் காணலாம். இவ் அன்னைக்கு தீர்த்தப்படித்துறை அமைக்கப்பட்டுள்ளது தனிச் சிறப்பாகும் ஆலய பரிபாலன சபையினர் இராஜகோபுரம் அமைக்கும் திருப்பணியில் ஈடுபட்டுள்ளனர். அடியார்கள் இத்திருப்பணிக்கு உதவிகள் புரிந்து; ஏழுமுகமாக வீற்றிருந்து அருள்பாலிக்கும் அன்னை ஆலயத்தை மேன்மையுறச் செய்ய வேண்டும்.

தலைநகரில் அமைந்துள்ள மயூரபதி என்னும் பத்திரகாளியம்மன் கோயில் இன்று படிப்படியாக வளர்ச்சி பெற்று வருகின்றது. அன்னையின் அருளாட்சியுடன் திகழும் இவ் ஆலயம் செய்யும் சேவைகள் பல.

இவ்வாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள திருக்கல்யாண மண்டபம், அறநெறி பாடசாலைகள் தியான மண்டபம் என்பன வியக்கத்தக்க வண்ணம் அமைந்து தெய்வீக உணர்வினை ஏற்படுத்துகின்றன. இத் தெய்வீக திருப்பணிக்கெல்லாம் நடுநாயகமாக விளங்குபவர் நாடறிந்த கல்விமான், சமூக சேவையாளர், இறைபணிச் செம்மல் பொ. வல்லிபுரம் அவர்களாவார்.

பதுளை, ரொக்கில் காளியம்மன் கோயில் உடப்பு காளியம்மன் ஆலயம், நாக்காளி காளியம்மன் கோயில், நீர்கொழும்பு காளிகோயில் என்பனவும் வளர்ந்து வரும் ஆலயங்களாகும். உடப்பு திரௌபதை அம்மன் ஆலய தீமிதிப்பு வைபவம் பக்திப்பிரவசமானது.

## கொற்றவை

வீரருக்கு வெற்றியினைத் தந்து பகைவரை அழிக்கும் தெய்வமே கொற்றவை ஆகும். யாளிக் கொடியாள், பாய்கின்ற கலைமானை ஊர்தியாகக் கொண்டமையால் பாய்கலைப் பாவை ஆகிய பெயர்களாலும் அழைக்கப்படுகின்றாள். கொற்றவை எட்டு கரங்களை உடையவள் வில், வாள், சங்கு, சக்கரம், குறுவாள், கேடயம், சூலம், கிளி ஆகியவற்றைத் தாங்கி மான் மீது சாய்ந்திருப்பாள். அவிசாவெல ஹன்வெல பகுதியில் பல கொற்றவை ஆலயங்கள் காணப்படுகின்றன. இவற்றில் பல உருமாற்றம் செய்யப்பட்டும் உள்ளன. சங்க காலத்தில் பிரசித்திப் பெற்று விளங்கிய கொற்றவை வழிபாடு பின்னர் போர்களும், கொள்ளையிடுதலும் குறைய துர்க்கை வழிபாட்டுடன் கலந்து விட்டது துர்க்கையும் சிவன் கோட்டத் தெய்வமானாள்.

## பத்தினித் தெய்வம்

அன்னை வழிபாட்டுடன் இணைந்த மற்றொரு சக்தி வழிபாடு பத்தினித் தெய்வம் எனப்படும் கண்ணகை வழிபாடாகும். கண்ணகியின் காற்சிலம்பினை விற்க வந்த கோவலன் கள்வன் எனக் கருதப்பட்டு பாண்டியனால் கொலை

செய்யப்பட, கண்ணகி பாண்டியன் அவைக் களத்தில் நீதி கேட்டு நெறிகாத்து கற்பின் தெய்வமாகின்றாள். சேரன் செங்குட்டுவன் இமயத்திலே கல்லெடுத்து கங்கையிலே நீராட்டி கற்பின் தெய்வமான கண்ணகிக்கு கோயில் எடுக்கின்றான். இவ்விழாவில் கடல் சூழ்ந்த இலங்கையிலிருந்து கஜபாகு மன்னனும் கலந்து கொண்டதாக வரலாறு கூறுகின்றது.

இவ் வகையில் நம்நாட்டில் சிங்கள பகுதிகளிலும் கற்புத்தெய்வ வழிபாடான பத்தினி வழிபாடு தோன்றி வேரூன்றி வளர்ந்ததாக தெரியவருகின்றது. பௌத்தர் இன்று மாரியம்மனை ''பத்தினி தெய்யோ'' என்றே வழிபடுகின்றனர். கிழக்கிலங்கையில் சிறந்து விளங்கும் கண்ணகையம்மன் வழிபாடு மலையகத் தோட்டத்துறையிலும் உண்டு மாலிபெடை, டபார் தோட்டத்தில் கண்ணகி ஆலயம் உண்டு. இது போல் கன்னத்தோட்ட "காத்மத்" தோட்டத்தில் பத்தினி ஆலயமும் மொனராகல படால்கும்புரையில் ஸ்ரீ பத்தினி தேவாலயமும், மத்துகம மத்துக தோட்டத்தில் ஸ்ரீ பத்தினி அம்மன் கோயிலும் உள்ளன. புத்தளத்திலும் ஸ்ரீ பத்தினி அம்மன் ஆலயம் உள்ளது.

குருநாகல் நகருக்கு சமீபமாக அமைந்துள்ள "வில்பாவ" என்னும் ஊரில் பத்தினி ஆலயம் ஒன்று உள்ளது. இங்கு காற்சிலம்பினை வைத்த வழிபாடு செய்கின்றனர். இதுபோல் அம்பேபுச நகரிலிருந்து சுமார் இரண்டு கல் தொலைவில் பத்தினி கோயில் ஒன்றும் உள்ளது. வில்பாவ பத்தினி கோயிலில் வருடந்தோறும் 'பெரஹரா" எடுக்கப்பட்டு குருணாகல் கதிரேசன் ஆலயத்திற்குச் சென்று வழிபாடு புரியும் வழக்கம் உள்ளது.

## பகவதி

பகவதி என்ற பெண் தெய்வம் ஒரு தாய்த்தெய்வமாகும். கேரளத்தில் மலையாளத்தவரே பகவதியை பெரும்பாலும் வழிபாடு செய்கின்றனர். மலையகத்தில் மிகச்சிறிய தொகையினரான மலையாள இனத்தவர்கள் பகவதியை துதிப்பர். பகவதி வழிபாடு கண்ணகி வழிபாட்டுடன் கலந்துள்ளது. பௌத்தர்களின் 'தாராதேவி" வழிபாட்டுடன் பகவதி வழிபாடு சம்பந்தமுடையதென்பர்

## திருவிளக்கு ஏற்றி அம்மனை துதிக்கும் பாடல்

குத்து விளக்கினை ஏற்றி வைத்தோம் – இந்தக்
குவலயத்தில் எமைக் காத்திடுவாய்
எத்தனை துயரங்கள் வந்தாலும் – தாயே
எம் துணை உலகினில் நீயல்லவோ
சொத்து சுகங்களும் நிலைத்திடவே – இந்த
மானிட ஜென்மம் மகிழ்ந்திடவே
சித்த சுத்தியுடன் உனைத் தொழுதல் – தாயே
மெத்தப் பலன் வரும் சத்தியமே
நித்தம் நித்தம் உன்னை தொழுது வந்தால் – வாழ்வில்
புத்தம் புதுச் சுவை பெருகுமன்றோ
பக்தர்கள் போற்றிடும் நாயகியே – அருள்
மாத்தளை வாழ் முத்து மாரியம்மா

## திக்க நிவாரணி அஷ்டகம்

## முத்துமாரி - அஷ்டோத்ரம்

### நாமாவளி

| | |
|---|---|
| அன்பே உருவானவளே | மாரியம்மா |
| ஆற்றலின் சக்தி யே | மாரியம்மா |
| இன்னல்கள் தீர்த்திடுவாய் | மாரியம்மா |
| ஈசனின் பாதியான | மாரியம்மா |
| உலகத்தின் நாயகியே | மாரியம்மா |
| ஊக்க மதைத்தந்திடுவாய் | மாரியம்மா |
| எல்லாமும் நீயே ஆனாய் | மாரியம்மா |
| ஏற்றமுடன் வாழவைப்பாய் | மாரியம்மா |
| ஐயத்தைப் போக்கிடுவாய் | மாரியம்மா |
| ஒங்கார மானவளே மாரியம்மா | மாரியம்மா |
| ஒப்பில்லா நாயகியே | மாரியம்மா |
| ஔடதம் நீயே வாழ்வில் | மாரியம்மா |
| அஃதே நான் வேண்டுவதும் | மாரியம்மா |

# அம்பாள்

## ஸ்ரீ லலிதா பஞ்சரத்னம்

ப்ராத: ஸ்மராகி லலிதா வதனாரவிந்தம்
பிம்பாதரம் ப்ருதல மௌக்திகசோபிநாஸம்
ஆகர்ண தீர்க்க நயனம் மணிகுண்ட லாட்யம்
மந்தஸ்மிதம் ம்ருக தோஜ் ஜ்வல பாலதேசம்

ப்ராதர் பஜாமி லலிதா புஜகல்ப வல்லீம்
ரத்னாங்குளீய லஸதங்குளி பல்ல வாட்யாம்
மாணிக்ய ஹேமவலயாங்கத சோபமானாம்
புண்ட்ரேக்ஷுசாப குஸுமேக்ஷுஸ்ருணீன்ததானாம்

பராதர் நமாமி லலிதா கரணார விந்தம்
பக்தேஷ்டதான நிரதம் பவஸிந்து போதம்
பத்மாஸனாதி ஸுரநாயக பூஜனியம்
பத்மாங்குச த்வஜ ஸுதர்சன லாஞ்சனாட்யம்.

ப்ராத: ஸ்துவே பரசிவாம் லலிதாம் பவானீம்
த்ரய்யந்த வேத்ய விபலாம் கருணானவத்யாம்
விச்வஸ்ய ஸ்ருஷ்டி விலயஸ்திதி ஹேது பூதாம்
விச்வேச்வரீம் நிகம வாங்க மனஸாதி தூராம்.

ப்ராதர் வதாமி லலிதே தவ புண்ய நாம
காமேச்வரீதி கமலேதி மஹேச்வரீதி
ஸ்ரீ சாம்பவீத ஜகதாம் ஜனனீ பரேதி
வாக்தேவ தேதி வசஸா த்ரிபுரேச்வரீதி

ய: ச்லோக பஞ்சகமிதம் லலிதாம்பிகாயா
ஸௌபாக்யதம் ஸுலலிதம் படதி ப்ரபாதே
தஸ்மை ததாதி லலிதா ஜடிதி ப்ரஸன்னா
வித்யாம் ச்ரியம் விபுலஸௌக்ய மனந்த கீர்த்திம்

# மலையகத்திலுள்ள அம்மன் ஆலயங்கள்

மாத்தளை

1. ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்
*மாத்தளை*

2. ஸ்ரீ மாரியம்மன் ஆலயம்
*மட்டாவ, வரக்காமுர, உக்குவெளை*

3. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*கந்தே நுவர அல்வத்த*

4. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்,
*நிக்கலோய அரசு பெருந்தோட்ட யாக்கம்,*

5. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*நோர்த் மாத்தளை, கவுடுப்பனை*

6. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*பம்பரகல டிவிசன் – மிட்லண்ட்,*

7. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*கோம்பிலிவெல – மாத்தளை*

8. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*புதுக்காடு, யட்டவத்தை*

9. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*பீர்தவளை – அலுவிஹார*

10. ஸ்ரீ ஏழுமுகக்காளியம்மன் ஆலயம்
*சுதுகங்கை – களுதாவளை*

11. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*உக்குவெல தோட்டம் – உக்குவெல*

12. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*அள்வத்தை*

13. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*எலகல, கம்மடுவ*

14. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*பள்ளத்தள்ள தோட்டம், இரத்தோட்டை*

15. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*பள்ளத்தன்ன தோட்டம், கம்மடுவ*

16. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*ஒபல்கல அரச பெருந்தோட்டயாக்கம்*

17. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*சின்ன செல்வக்கந்த, பிட்டகந்த*

18. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*நாகல மீசான் தோட்டம், கம்மடுவ*

19. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*அம்பாங் கங்கை, கவுடுப்பாளை*

20. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*நோர்த் மாத்தளை சந்தி, கவுடுப்பாளை*

21. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*மகா வெலக்கந்த தோட்டம், மகாவெல*

22. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*கொட்டகொல , நோர்த் மாத்தளை*

23. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*சின்ன லெலக்கந்த தோட்டம், மகாவெல*

24. ஸ்ரீ தொட்டிச்சியம்மன் ஆலயம்
*8ஆம் நம்பர் , நோர்த் மாத்தளை*

25. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*நாலந்த*

26. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*அங்கந்த–கவுடுப்பாளை*

27. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*ஹப்பு காலந்த – கவுடுப்பாளை*

கண்டி

1. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*நாவலபிட்டி*

2. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*கிளார்த் தோட்டம் – பணிய கணக்கு, கலஹா*

3. தேவி கருமாரியம்மன் ஆலயம்
*நில்லம்ப, கலஹா*

4. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*பச்சைக்காடு – பணியகணக்கு, கலஹா*

5. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*ஸ்டோர் டிவிஷன், கலஹா*

6. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*நடுகணக்கு, கிளார்த்தோட்டம், கலஹா*

7. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*பள்ளேகல தோட்டம், ரஜவெல*

8. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*தெல்தெனிய*

9. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*ஊருகல, மெதமாநுவர*

10. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*லூட்சைட் தோட்டம், மெதமாநுவ*

11. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*நுகலியவத்தை, தலாத்து ஓய*

12. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*57, மலபார் வீதி, கம்பளை*

13. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*கெட்டபுலா தோட்டம், கொத்மலை*

14. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*அளவத்தகொட*

15. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*வத்துகாமம்*

16. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்
*இம்புல்பிட்டிய தோட்டம் நாவலபிட்டிய*

17. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
அம்பா கொட்ட, கெங்கல்ல

18. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
அகஸ்டாவத்தை, பேராதெனிய

19. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
அளுத்வத்தை, ரஜவெல்ல

20. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கண்டி வீதி – கெங்கல்ல

21. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
மகியாவ, கண்டி

22. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
ஊராகல டிவிசன், அந்தானை குரூப்.

23. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கித்துல் முல்ல, அந்தானை குரூப்

24. அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கிரிஸ்வுட் டிவிசன், இம்புல்பிட்டிய

25. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
ஏழுகாமம், அளவத்த கொட

26. ஸ்ரீ காட்டு மாரியம்மன் ஆலயம்
மகியாவ

27. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
இம்புல்பிட்டிய தோட்டம், நாவலபிட்டிய

28. மகா மாரியம்மன் ஆலயம்
தொடங்கொல்ல, குண்டசாலை

29. ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
குருவத்த, குருதெனிய

30. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
பாகேப்பில் தோட்டம், கெட்டபுலா

31. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கிளாபோக் மேமலை, மடுல் கெல்ல

32. அந்தானை மகா பத்ர காளியம்மன் ஆலயம்
மாவளைத் தோட்டம், செங்கடகலை

33. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
டக்வாரி தங்கல, தெல்தெனிய

34. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
நிந்தகலை, கண்டி

35. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
"ஹயின் போட்" தெகித்த, நாவலபிட்டிய

36. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
பல்கலைக்கழக பாம்,
தொடம் கொல்ல, குண்டசாலை

37. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
ஹந்தான தோட்டம், மேற்பிரிவு, கண்டி

38. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கொ்லபத்தனை தோட்டம், கட்டபுலா

39. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
சரசவிகம, ஹிந்தகல

40. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
தங்காப்பு தோட்டம், இரங்கல

41. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
சோமக மேல்பிரிவு, புசல்லாவ

42. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கலஹாகுரூப், கலஹா

43. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
ஸ்டோர் டிவிசன், ஹந்தான, கண்டி

44. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
ஆத்தலை அரச தோட்டம், பன்விலை

45. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
மோபிரே தோட்டம், மாகந்த, ஹிந்தகல

46. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கிரேட்வெளி தோட்டம், தெல்தோட்ட

47. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
4–ஆம் கட்டை, ஹந்தானை, கண்டி

48. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கெட்டபுலா நடுப்பிரிவு, கெட்டபுலா

49. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கல்பீலி டிவிசன், பன்விலை

50. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
உனுகல்லோயா, கெட்டபுலா, நாவலபிட்டி

51. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
நூல்கந்தூர டிவிசன், தெல்தோட்டை

52. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கிளாபோக், ரெலுகஸ் மடுல்கெல்ல

53. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
நெல்லிமலை தோட்டம், மடுல்கெல்ல

54. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
பள்ளேகல தோட்டம், குண்டசாலை

55. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
வெவலன் தோட்டம், புப்புரெஸ்ல

56. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
ஆத்தளை மேற்பிரிவு, பன்விலை

57. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
நூல் கந்தூர குரூப்,
வெல்லோயா டிவிசன். தெல்தோட்ட

## நுவரெலியா

01. சீதையம்மன் ஆலயம்
ஆவாஎலிய நுவரெலிய

02. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கட்டுமானை நுவரெளிய

03. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
ஆவேலிய நுவரெலிய

04. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
பம்பரகல, நுவரெலிய

05. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
பம்பரகல–நுவரெலிய

06. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கணிக்கா டிவிசன்–நுவரெலிய

07. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
ஸ்காரப்பிரிவு, மாகஸ் தோட்டம்

08. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
வழக்கலை கீழ்ப்பிரிவு, வழக்கலை

09. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
வழக்கலை மேற்பிரிவு, நுவரெலிய

10. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
பெரட்டாசி குறூப், நம்பொடை

11. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
முன்பிளேன் டிவிசன்,நுவரெலிய

12. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
லேடிமெக்கலம்ஸ் டிரைவ், நுவரெலிய

13. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
ஒலியன்ட் மேற்பிரிவு, நூரளை

14. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
லேமாரி தோட்டம், இறம்பொடை

15. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
லபுக்கலை தோட்டம், லபுக்கலை

16. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
வடபதியப்பலல்ல, நுவரெலிய

17. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
றம்பொடதோட்டம், றம்பொட

18. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
ஹக்கல தோட்டம், பொரக்காஸ்

1. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
இரும்புப்பாளம்–கந்தப்பளை

20. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கோணக்கொல்ல–கந்தப்பொல

21. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
பாக்தோட்டம் கந்தப்பளை

22. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
சின்ன உப்பு ராசி தோட்டம், ராகலை

23. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்

24. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
தாமாவள்ளித்ம், மேற்பிரிவு

25. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
நோளா தோட்டம், கந்தப்பளை

26. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
ராகலை கரூப், ராகலை

27. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
ஆல்கரனோயா டிவிசன், அல்கரனோபா

28. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
லோவர் 11–வது டிவிசன், ராகலை குரூப்,

29. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
லோவர் 1வது டிவிசன், ராகலை

30. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
தில்புல்தோட்டம் கீழ்ப்பிரிவு, பத்தனை

31. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
தில்புல்தோட்டம் மேற்பிரிவு, பத்தனை

32. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
பொரஸ்ட் கீறிக் பிரிவு, பத்தளை

33. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
ஸ்டோனி கிளிப் தோட்டம், கொட்டகலை

34. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
ரொசிட்டி பிரிவு, கொட்டகலை

35. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கபரபேன் பிரிவு, கொட்டகல

36. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
மண்வெட்டி தோட்டம், கொட்டகல

37. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
மரேட்டன் பிரிவு, கொட்டகலை

38. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
டிரேகிளாயர் பிரிவு, கொட்டகல

39. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கோடன் எஸ்டேட், உடபுசல்லாவ

40. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
நோனா தோட்டம், கந்தபொல

41. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
மடக்கும்பர வடக்கு, வட்டகொடை

42. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
தவசிமலை மேற்பிரிவு, புஸ்ஸல்லாவ

43. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
நுவரெலிய வீதி, கட்டுக்கித்தால

44. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
மண்வெட்டித்தோட்டம்,
சென் அன்றூஸ் டிவிசன்,கொட்டகலை

45. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
பன்மூர் டிவிசன், ஸ்டரத்டன் குறூப், ஹட்டன்

46. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
2–ம்பிரிவு ஹைபோரஸ்ட் தோட்டம், கந்தபொல

47. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
சவுத்மடக்கும்புர தோட்டம், வட்டகொட,

48. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
லபுக்கெல்ல மேற்பிரிவு, கொத்மலை

49. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
பின்னோயா, ரொசல்ல

50. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கோட்டேஜ், கந்தபொல

51. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
அட்டன் தோட்டம், அட்டன்

52. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
எல்பொட நடுகணக்கு, கட்டுக்கித்தாலை

53. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
மவுஞ்றின் தோட்டம், வட்டவளை

54. பூங்கந்தைமாரியம்மன் ஆலயம்
பூங்கந்தை பிரிவு, பத்தனை

55. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*புரட்டாசி டிவிசன், இறம்பொட*

56. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*நஸ்புறூக் டிவிசன், புரட்டாசி குரூப், இறம்பொட*

57. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*மேரியல் தோட்டம், இறம்பொட*

58. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*வெதமுள்ள குறூப், இறம்பொட*

59. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*தவலந்தென்ன தோட்டம், இறம்பொட*

60. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*அயரி டிவிசன், புரட்டாசி குரூப், இறம்பொட*

61. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*நானு ஒயா*

62. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*மேற்பரிவு, டெங்போட் தோட்டம், நானுஒய*

63. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*டெஸ்போட் டிவிசன், நானுஓயா*

64. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*எடின்பரோ தோட்டம், நானுஒய*

65. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*கிளான்டன் தோட்டம், நானுஓயா*

66. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*கிளாரன்டன் மேற்பிரிவு, நானுஓயா*

67. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*கிளாரன்டன் கீழ்ப்பிரிவு, நானுஓயா*

68. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*கீழ்ப்பிரிவு கிளாங்கோ, நானுஓயா*

69. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*கிளாங்கோ மேற்பிரிவு, நானுஓயா*

70. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*ஆட்டுவன் டிவிசன் இலாஸ்கோ S.P நானுஓயா*

71. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*உடரதாலை தோட்டம், கீழ்ப்பிரிவு, நானுஓயா*

72. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*உடரதாலை தோட்டம், கீழ்ப்பிரிவு, நானுஓயா*

73. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*லோவர் எபோர்ட் ரிரேட் டிவிசன்,*
*டெஸ்மோர் தோட்டம், நானுஓயா*

74. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*வால்டிரிம் பிரிவு, வால்டிரிம் தோட்டம், லிந்துலை*

75. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*குயின்ஸ்வுட் பிரிவு,*
*நகன்வந்த தோட்டம், லிந்துலை*

76. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*நகன்வத்த பிரிவு,*
*நகன் வத்த தோட்டம். லிந்துலை.*

77. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*நாகசேனை பிரிவு,*
*நாகசேனை தோட்டம், லிந்துலை*

78. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*பூசாஎல்ல மேற்பிரிவு,*
*நாகசேனை தோட்ட, லிந்துலை*

79. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*பூசாஎல்ல கீழ்ப்பிரிவு, நாகசேனை தோட்டம்,*
*லிந்துலை*

80. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*கிமுனு கீழ்ப்பிரிவு, தங்கல்ல அரச தோட்டம்,*
*லிந்துல்ல*

81. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*ஹொலிவுட் பிரிவு, ஹொலிவுட் தோட்டம்,*
*அக்கரபத்தளை*

82. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*சூட்டன் பிரிவு, ஹொலிவுட் தோட்டம்,*
*அக்கரப்பத்தனை*

83. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*பெல்மோரல் பிரிவு, பெல்மோரல் தோட்டம்*
*அக்கரபத்தனை*

84. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*கெலிவத்தை தோட்டம், பத்தனை*

85. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*இல்டன்யோல் தோட்டம், லிந்துல*

86. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*டெல் பிரிவு, பம்பரகலை தோட்டம், லிந்துல*

87. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*மேல் கிராண்லே பிரிவு,*
*வம்பரகல தோட்டம், லிந்துல*

88. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*பம்பரகலை தொழிற்சாலை பிரிவு,*
*பம்பரகல தோட்டம், லிந்துல*

89. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*பம்பரகலை குட்டிமணி பிரிவு*
*பம்பரகலை தோட்டம், லிந்துல*

90. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*மவுசா எல தோட்டம், நாகசேனை குரூப்,*
*லிந்துல*

91. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*எல்பட மேற்பிரிவு, லெட்சுமி தோட்டம்,*
*பொகவந்தலாவ*

92. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*பெரியாராளிவத்தை தோட்டம் – லிந்துல*

93. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*அக்கர கந்த பிரிவு, அக்கரகந்த, லிந்துல*

94 ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*பெரியாராணிவத்தை தோட்டம், லிந்துல*

95. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*லிந்துல பிரிவு, லேஸ்ரீம் தோட்டம், லிந்துல*

96. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கல்லேனாபிரிவு, போல்ரீம் தோட்டம், லிந்துல

97. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
சென் தோமஸ்பிரிவு,
வோல்ரீம் தோட்டம், லந்துல

98. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
பெசிபர்ன் பிரிவு,
அக்கர கந்த தோட்டம், லிந்துல

99. துர்க்கா தேவி ஆலயம்
பெசிபர்ன் பிரிவு,
அக்கர கந்த தோட்டம், லிந்துல

100. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
யதன்சைட் எஸ்டேட், கொட்டகலைல

101. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
லங்கா டிவிசன், கிலென்டில், எஸ்.பி.
மஸ்கெலிய

102. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
பளிங்கு மலைத்தோட்டம் கொட்டகலை

103. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
இங்கிரியவத்தை எஸ்.பி. மஸ்கெலிய

104. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
ரெட்டை பூட்டு தோட்டம், லிந்துல

105. ஸ்ரீ முத்துமாரியம்மன் சித்தி
விநாயகர் ஆலயம்
ரதாளை கீழ்ப்பிரிவு, நானுஓயா

106. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
பணிய கணக்கு வட்டகொட

107. அம்பாள் ஆலயம்
'கொட்டகல

108. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
வங்கி ஓயா மேற்பிரிவு, நானுஓயா

109. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கெஸ்போட் தோட்டம், லிந்துல

110. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
மேற்பிரிவு, தரவளை எஸ்டேட், டிக்கோயா

111. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கைப்பூக்கலை தோட்டம், பூண்டுலோயா

112. பூங்கந்தைதங்காள் ஆலயம்
பூங்கந்தை டிவிசன், மவுன்ட் வேர்ணன்
தோட்டம், ,பத்தனை

113. வட்டக்கன்னி முத்துமாரியம்மன் கோயில்
மவுன்ட் வேர்ணன் தோட்டம், பத்தனை

114. காட்டுமாரியம்மன் கோயில்
கிறேலி டிவிசன், கிறேலிதோட்டம், பத்தனை

115. மவுன்ட் வேர்ணன் காளி அம்மன் கோயில்

116. மவுன்ட் வேர்ணன் தோட்டம்
பத்தனை

117. ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்
நோர்வூட் தோட்டம்

118. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
மணிக்கந்தட்டை, நோர்வுட்

119. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
ரட்னகிரிய, லிந்துல

120. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
ரட்னகிரிய, லிந்துல

121. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
பெரிய நடு தோட்டம், மஸ்கெலிய

122. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
பிரௌன்ஸ்விக் தோட்டம், மஸ்கெலிய

123. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கிராப்பு தோட்டம் மஸ்கெலிய

124. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
அப்புகஸ்தன்ன தோட்டம், மஸ்கெலிய

125. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
லெட்சுமி தோட்டம், மஸ்கெலிய

126. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
லக்ஷபான தோட்டம், லக்ஷபான டிவிசன்,
மஸ்கெலிய

127. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
ஆனந்த தோட்டம், அட்டன்

128. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
வெந்தோமஸ் டிவிசன், தால்ட்ரீம் குரூப், ,லிந்துல

129. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
ஹொலிரூட் மேற்பிரிவு, தலவாக்கெலை

130. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
டீரூப் பிரிவு, டீரூட் அரச பெருந்தோட்டயாக்கம்,
தலவாக்கெல

131. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கோரின் பிரிவு,
டீரூப் அரச பெருந்தோட்டயாக்கம், தலவாக்கெல

132. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கிழக்குப்பிரிவு, ஹாலிரூட்
அரச பெருந்தோட்டயாக்கம், தலவாக்கெல

133. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
இரத்தினக்கல் பிரிவு, ஹொலிரூட்
அரச பெருந்தோட்டயாக்கம், தலவாக்கெல

134. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கீழ்ப்பிரிவு, ஹொலிரூம்
அரச பெருந்தோட்டயாக்கம், தலவாக்கெல

135. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
மேற்பிரிவு, ஹொலிரூட்
அரச பெருந்தோட்டயாக்கம், தலவாக்கெல

136. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
பி.எம். பிரிவு பல்மங்டொன்
அரச பெருந்தோட்டயாக்கம், தலவாக்கெல

137. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
ரிட்னாகிரிய பிரிவு பல்மஸ்டொன்
அரச பெருந்தோட்டயாக்கம், தலவாக்கெல

138. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
சென்கிளாயர் தோட்டம்,
ஸ்ரீலங்கா பெருந்தோட்டயாக்கம், தலவாக்கெல

139. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கிளன்னோ மேற்பிரிவு, சென்கிளயர்
அரச பெருந்தோட்டயாக்கம், தலவாக்கெல

140. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
ஸ்டேலிங்பிரிவு, சென்கிளயர்
அரச பெருந்தோட்டயாக்கம், தலவாக்கெல

141 ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
டெவன் பிரிவு, சென்கிளயர்
அரச பெருந்தோட்டயாக்கம், தலவாக்கெல

142. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
பியாபீல்ட் பிரிவு பியாவெல்,
அரச பெருந்தோட்டயாக்கம், தலவாக்கெல

143. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
பியாவெல் பிரிவு அரச பெருந்தோட்டயாக்கம்,
தலவாக்கெல

144. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
வல்ஹா பிரிவு, பெயாவெல்,
அரச பெருந்தோட்டயாக்கம், தலவாக்கெல

145. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
தலவாக்கெல பிரிவு,
அரச பெருந்தோட்டயாக்கம், தலவாக்கெல

146. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
நானோயா பிரிவு, தலவாக்கெல,
அரச பெருந்தோட்டயாக்கம், தலவாக்கெல

147. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கட்டுகெல்ல பிரிவு,
அரச பெருந்தோட்டயாக்கம், தலவாக்கெல

148. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
குருந்தோயா டிவிசன், நானுஓயா

149. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கீழ் சீனிப்பிரிவு, சீனித்தோட்டம், பூண்டுலோயா

150. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கீழ் பூண்டுலோயா பிரிவு, சீனித்தோட்டம்,
பூண்டுலோயா

151. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கீழ்ப்பிரிவு, டன்சிண் தோட்டம், பூண்டுலோய

152. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கீழ்ப்பிரிவு, ஸ்ரோ தோட்டம். பூண்டுலோயா

153. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கிறேற் வெஸ்டன் பிரிவு, தலவாக்கெல

154 ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கிறேற் வெஸ்டன், அரச பெருந்தோட்டயாக்கம்,
தலவாக்கெல

155 ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
லுயிங்சா பிரிவு,
கிறேட் வெஸ்டன் அரச தோட்டம், தலவாக்கெல

156. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கல்கந்தவத்த பிரிவு,
கிரேட் வெஸ்டன் அரச தோட்டம், தலவாக்கெல

157 ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
ஆட்லோ பிரிவு, அல்பியன் தோட்டம்,
அக்கரபத்தனை

158. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
மேல்பிரிவு வட்டகொட, அரச தோட்டம்
வட்டகொட

159. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
வைகஸ் போர்ட்பிரிவு, வட்டகொட
அரச பெருந்தோட்டயாக்கம், வட்டகொட

160. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
பார்ம் பிரிவு, பார்ம் அரச பெருந்தோட்டயாக்கம்,
தலவாக்கெல

161. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
மெல்டன் பிரிவு,
பார்ம் அரச தோட்டம், தலவாக்கெல

162. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
லோகி பிரிவு,
லோகி அரச தோட்டம், தலவாக்கெல

163. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கூம்வுட் பிரிவு,
லோகி அரச தோட்டம், தலவாக்கெல

164 ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
மேற்பிரிவு, போகிவத்தை தோட்டம், பத்தனை

165. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
பிரங்வாட்டர் பிரிவு, வூட்டுவல் தோட்டம்,
அக்கரப்பத்தனை

166. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
சென்ஜேவர்ஜ பிரிவு, வூட்வெல் தோட்டம்,
அக்கரப்பத்தனை

167. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
வூட்வெல் பிரிவு, வூட்வெல் தோட்டம்,
அக்கரப்பத்தனை

168 ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
அஸ்டோரி பிரிவு, புதிய போட்மோர் தோட்டம்.
அக்கரப்பத்தனை

169. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
லெட்சுமி தோட்டம், இஸ்டோர் டிவிசன்,
பொகவந்தலாவ

170. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
மடக்கொம்பரை – வடக்கு–வட்டகொடை

171. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
தவசிமலை மேற்பிரிவு, புஸ்ஸல்லாவ

117. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
லிந்துல பிரிவு,
வோல்ட்ரீம் தோட்டம் லிந்துல

172. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
எல்பட மேற்பிரிவு, லெட்சுமி தோட்டம்,
பொகவத்தலாவ

173. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
பேரஸ்ட்லேன், பட்டிபொல, அம்பேவல

174. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
மவுண்ட்வேர்னன் தோட்டம், பத்தனை

175. ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்
லோவர் பஜார், பூண்டுலோய

176. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
சின்ன மண்வெட்டித்தோட்டம், கொட்டகலை

177. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
அல்லித்தோட்டம், 3ம் நம்பர் டிவிசன்,
கிளிகத்தேனை

178. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
எல்ஸ்மேரி டிவிசன்,
சலங்கண்டி, டிக்கோயா

179. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கிலென்டில்ட் தோட்டம், மஸ்கெலிய

180. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கெலிவத்தை தோட்டம், பத்தனை

181. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
மோனிங்டன் மேற்பிரிவு, வேல்லிகுறாப்,
அக்கரபத்தனை

182. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
பொக்ஸ்போட் டிவிசன், வட்டகொட

183 ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
சொய்சி தோட்டம், பூண்டுலோய

184. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
வடக்கு பூண்டுலோயா,
கீழ்ப்பிரிவு, ,பூண்டுலோயா

185. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
பெரியமட்டுகெல, தலவாக்கெல

186. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
டன்பார் மேற்பிரிவு, டிக்கோயா

187. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
பொகவான தோட்டம், பொகவந்தலாவ

188. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
முன்னாகாமம் மேற்பிரிவு, லக்சபான தோட்டம்,
மஸ்கெலிய

189 ஸ்ரீ கருமாரியம்மன் கோயில்
மொக்கா மேற்பிரிவு, மஸ்கெலிய

190. மாரியம்மன் ஆலயம்
பிறேமோர் தோட்டம், அக்கரபத்தனை

191. ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி தேவஸ்தானம்
மட்டக்கலை, தலவாக்கெல

192. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கெட்டபுலா தோட்டம்

193. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கவர விலை தோட்டம், சாமிமலை

194. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
வட்டகொட

195. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
போரஸ்லேண்ட், பட்டிபொல, அம்பேவல

196. துர்க்கா தேவி ஆலயம்
பெசிபர்ன் பிரிவு,
அக்கர கந்த தோட்டம், லிந்துல

197. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
சின் மேற்பிரிவு, பூண்டுலோயா

198. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
மோமூர் தோட்டம், பொகவந்தலாவ

190. சரஸ்வதி ஆலயம்
ஸ்டாபோட், வலப்பனை

191. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
"கெட்டல் பாம்" அம்பேவலை

192. மீனாட்சியம்மன் கோயில்
டின்சினன் தோட்டம், பூண்டுலோயா

193. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கெம்பியன் கீழ்ப்பிரிவு, பொகவந்தலாவ

194 ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
பன்யன் தோட்டம், மஸ்கெலிய

195. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
இறம்பொடை

196. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
கட்டுக்குத்தாளை பஜார். கொத்மலை

197. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
தறவளை தோட்டம் – டிக்கோய

## பதுளை

1. ஸ்ரீ காளியம்பாள் தேவஸ்தானம்
ரொக்கில்

2. ஸ்ரீ காளியம்மன் ஆலயம்
இம்புள்கொட

3. ஸ்ரீ காளியம்மன் ஆலயம்
*பண்டார எலிய டிவிசன்,*
*தம்பத்தனை, அப்புத்தளை*

4. ஸ்ரீ காளியம்மன் ஆலயம்
*லோவர் பிளக்வுட், நிக்கர் பொத்த*

5. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*மீரிய பெத்த தோட்டம், கொஸ்லந்த*

6. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*கொஸ்லந்த தோட்டம்*

7. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*கெல்பன் டிவிசன்,*
*தொட்டலாகலை, ஹப்புத்தளை*

8. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்
*கஹகொல்லை டிவிசன், ஹப்புத்தளை*

9. ஸ்ரீ தேவி கருமாரியம்மன் கோயில்
*ஹல்துமுல்லை, பெரகல*

10. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*வெளிமடை வீதி, பண்டாரவளை*

11. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*கல்கந்தை டிவிசன், நாயபெத்த அரச தோட்டம்,*
*பண்டாரவளை*

12. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*லியன்காவளை அரச தோட்டம், பண்டாரவளை*

13. மாரியம்மன் ஆலயம்
*பசறை பிரிவு, பசறை*

14. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*கர்கிலிஷ் மேற்பிரிவு, உடபுசல்லாவ*

15. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*அபரகெல தோட்டம், பொரகஸ்ஸ*

16. இறையரசி கோவில்
*கிரவுன்ஸ் வூட் பிரிவு, இந்துகலைத் தோட்டம்,*
*நமுனுகுல*

17. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்
*தொழிற்சாலைப் பிரிவு, பூணாகலை*

18. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*மாக்கந்தி தோட்டம், பூனைகலை*

19. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*ஒகியா தோட்டம், வெலிமடை*

20. தேவி முத்துமாரியம்மன் ஆலயம்
*பிளானிவத்தை, கோணகலை தோட்டம்*

21. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*பழைய நாகவத்தை, பண்டாரவளை*

22. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*நாவுள்ள, சொஸ்லாந்தை*

23. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்
*கோணமுட்டாவ தோட்டம், ஹப்புத்தளை*

24. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*கோணகலை பிரிவு, பசறை*

25. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்
*மாப்பாகலை*

26. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்
*தம்பேதன்னை, ஹப்புத்தளை*

27. ஸ்ரீ காளியம்மன் கோயில்
*போஹாமடித்த, கடிகமுவ, ஹாலிஎல*

28. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்
*கல்கந்தை டிவிசன், ஹப்புத்தளை*

29. ஸ்ரீ காளிமாரியம்மன் ஆலயம்
*அடாவத்தை தோட்டம், எல்ராடோ பிரிவு,*
*லுணுகலை.*

30. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*கனவரல்ல பிரிவு, நமுனுகுல*

31. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்
*1வது பிரிவு, பூணாகலைத் தோட்டம்,*
*பண்டாரவளை*

32. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*கோணகலை பிரிவு, பசறை*

33. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்
*புரொட்டன் தோட்டம், லியன்காவெல,*
*பண்டாரவளை*

34. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*கோணகலை மேற்பிரிவு, பசறை*

35. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்
*மாஸ்வண்டி பிரதேச சபை, காரியால வீதி,*
*கொஸ்வத்தை*

36. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்
*அம்பிட்டிகந்த தோட்டம், பூணகலை.*

## மொனராகலை

1. ஸ்ரீ தெய்வானை அம்மன் ஆலயம்
*கதிர்காமம்*

2. ஸ்ரீ பத்தினி தேவாலயம்
*லோவர் வைகும்பரை தோட்டம், படல்கும்பரை*

3. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
*மொனராகலை வீதி, கும்புக்கன*

4. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்
*முப்பனா வெளி தோட்டம், மொனராகலை*

5. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*பன்சல தோட்டம், மொனராகலை*

6. ஸ்ரீ பத்தினி தேவாலயம்
*வதிகும்புர வீதி, மொனராகலை*

7. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
*கதிர்காமம்*

# சான்றாதாரம்

## நேர்காணல்

★ அமரர் கிரியாபாணு பிரம்மஸ்ரீ சரவணபவானந்த குருக்கள்

★ அமரர் திரு. கேசவன் கங்காணி
*ஆலய ஸ்தாபகரும், பூசகரும், நோர்த் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்*

★ திரு. ரி.எம். ஆவுடையாப்பிள்ளை
*ஸ்ரீ சிவசுப்பிரமணிய தேவஸ்தானம் ஜிந்துப்பிட்டி*

★ "மாரிப்பாட்டி"
*அம்பன்பிட்டிய தோட்டம், கேகாலை*

★ திரு. அம்ம முத்து வேளார்
*மாத்தளை*

## நூல்கள்

★ மகாமாரித்தேவி திவ்வியகாரணி (1991)

★ புயல் காத்துப் பாட்டும் பஞ்சக் கும்மியும்
*தொகுப்பாசிரியர் புலவர் செ. இராசு (தஞ்சை)*

★ தமிழ் நாட்டார் வழக்காற்றியல்
*இந்துசமய கலாசார திணைக்கள வெளியீடு பதிப்பாசிரியர் க. சண்முகலிங்கம்*

★ மாரியம்மன் தாலாட்டு

★ தெய்வத்தின் குரல்

★ கோயிற் களஞ்சியம்

★ மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் புதிய சித்திரத்தேர் மலர் 1993

★ அபிதான சிந்தாமணி

★ நன்றி இந்துசமய கலாசார தமிழ் அலுவல்கள் திணைக்களம்

Printed by Unie Arts (Pvt) Ltd. Colombo 13.